25வது வெற்றிகரமான ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் TM
VLAMBARAM TM
Tel:(416) 282-8059 Fax:(416) 282-4978
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com / www.tamilvanakkam.com

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

கனேடிய இலங்கை இந்திய சர்வதேச விளையாட்டு செய்திகள்
உடனுக்குடன் செய்திகளை பார்வையிட
தமிழ்வணக்கம்.கொம்
24/7 NEWS
www.tamilvanakkam.com

நதி 25 | பாலம் 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2015

# இலங்கைக்கு ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பம் - ஐ.நா. துணை செயலாளர் நாயகம்

இலங்கை உட்பட சில ஆசிய நாடுகளுக்கு மார்ச் முதல் வாரத்தில் பயணத்தை மேற்கொண்ட ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகாரத்திற்கான துணைச்செயலாளர் நாயகம் ஜெவ்ரி ஃவெல்மன் (Jeffrey Feltmen) 2015 மார்ச் 10இல் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் மேற் கூறியவாறு தெரிவித்தார்.



இலங்கையில் 2015 ஜனவரி 08 இல் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் அந்நாட்டு மக்கள் பிரச்சனைகளைத் தீர்க்கத் தயாராக இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. புதிய இலங்கை அரசாங்கம் பொறுப்புடன், சர்வதேச சமூகத்துடன் சேர்ந்து சர்வதேச விதிமுறைகள் மற்றும் சர்வதேச தரத்திற்கு இணையாக ஒரு நம்பகமான உள்நாட்டு செயல்முறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கையில் நல்லிணக்கத்தையும், ஒத்துழைப்பையும் மக்களிடையே ஏற்படுத்துவதற்கு ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பத்தை இத்தேர்தல் கொடுத்துள்ளது.

இலங்கையில் அரச அதிகாரிகளுடன் தான் இம்முறை நடத்திய பேச்சுவார்த்தைகள் வழமையைவிட மிகவும் வித்தியாசமானதாக இருந்தன. அதுவே எனக்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பைக் கொடுத்துள்ளது. இலங்கை முழுவதும் எல்லா சமூகங்களும் ஒரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளன. வட பகுதி மக்களின் குறைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. இலங்கை அரசு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போனது ஐக்கிய நாடுகள் சபையினதும், அதன் செயலாளர் நாயகம் பான் கிமூன் (Ban Kimoon) இனதும் பூரண ஒத்துழைப்பு இலங்கை மக்களுக்கும் இலங்கை அரசிற்கும் இடையேயான உறவுகள் மற்றும் நம்பிக்கையை சீரமைத்துக் கொள்ள எடுக்கும் அதிகார பூர்வமான நடவடிக்கைகளுக்கு உண்டு என்பதை உறுதிப்படுத்தினேன்.

நான் இலங்கை அரசிற்கு வட பகுதியில் இராணுவம் எடுத்துக் கொண்ட காணிகளை அதன் உரிமையாளருக்கு திருப்பிக் கொடுப்பதை உடனடியாக செயன்முறைப் படுத்தி, மக்களிடையே அரசின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துமாறு வலியுறுத்தினேன்.

இலங்கை அரசாங்க அதிகாரிகள் தாங்கள் நடைமுறைப்படுத்தும் செயன்முறை சர்வதேச தரத்திற்கு இணையானதாக இருக்கும் என்றும் அடுத்த ஜெனிவாவில் நடைபெற இருக்கும் மனித உரிமைகள் மாநாட்டிற்கு முன்னர் தாங்கள் இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களை நடைமுறைபடுத்தப்போவதாகவும் ஐ.நா. துணைச் செயலாளர் நாயகத்திடம் கூறினர்.

ஜெவ்ரி ஃவெல்மன் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இரண்டு இனங்களுக்கும் இடையே இன்னமும் நம்பிக்கையீனம் இருக்கிறது என்பதில் எனக்கு எந்தவித ஐயப்பாடும் இல்லை. அதைவிட வடக்கில் உள்ளவர்களுக்கு இலங்கை அரசின் மீது இன்னமும் ஐயுறவு இருக்கிறது. அவர்களுக்கு இலங்கை அரசு தான் கூறியவாறு செய்யும் என்பதில் இன்னமும் நம்பிக்கையில்லை. என்றாலும் இலங்கை அரசு தான் உறுதியளித்தபடி செய்வார்கள் என்ற நம்பிக்கையுடனேயே தான் இலங்கையில் இருந்து புறப்பட்டதாக கூறினார். ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு எந்தவித தொழில்நுட்ப உதவிகளையும் எந்நேரமென்றாலும் கொடுக்கத் தயாராகவே இருக்கின்றது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஐ.நா துணை செயலாளர் நாயகம் ஊடகவியலாளர்களது மியன்மார் முஸ்லீம்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி

Kumar Jegasothy
Pre-owned Sales Consultant
11552 Yonge Street
Richmond Hill, Ontario

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER

416-844-8692
888-809-9154

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE

Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

MORTGAGE ALLIANCE
The Guardian
SAVE YOUR MONEY
SAVE YOUR HOME
- 2nd Mortgage - Purchase & Refinance
- Renewal & Switch - Home Equity Loan
- Residential & Commercial Mortgage
We're Hiring Experienced & New Agents
Gini Annarasa
Cell: 416.830.3241
Toll Free: 1 877.336.3487

*Independently Owned & Operated


கனேடிய
இலங்கை
இந்திய
சர்வதேச
விளையாட்டு
செய்திகள்
உடனுக்குடன் செய்திகளை
பார்வையிட
தமிழ்வணக்கம்.கொம்
24/7
NEWS
www.tamilvanakkam.com


Allstate.
Allstate Insurance Company Of Canada
Home & Auto Insurance
வீடு, வாகன காப்புறுதி
Suren Navaratnarajah
(Agent)
Cell: 416.520.6916
E-mail: snavaratnarajah@allstate.ca


விளம்பரம் பத்திரிகையின் 25ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்படும்
போட்டிகளுக்கு பரிசில்கள் வழங்குபவர்கள்
குறுநாவல் போட்டி
கவிதைப் போட்டி
கட்டுரைப் போட்டி
திரைக்கதைப் போட்டி
Niru நிரு
416.750.1976
1ஆம் பரிசு வழங்கும் $1000
Thavam yogas Super Market
416.267.0408
1ஆம் பரிசு வழங்கும் $500
Das Murugadas (Mortgage Broker)
416.543.6614
1ஆம் பரிசு வழங்கும் $500
Raj Rasaratnam (Realtor)
416.726.8055
1ஆம் பரிசு வழங்கும் $500
HomeLife / GTA Realty Inc. Brokerge
HomeLife / GTA Realty Inc. Brokerge
416.321.6969
5215 Finch Ave, E, #203, Toronto, ON
*Independently Owned & Operated
2ஆம் பரிசு வழங்கும் $500
Seelan Aiyadurai (Real Estate Agent)
416.451.0271
2ஆம் பரிசு வழங்கும் $300
HomeLife / GTA Realty Inc. Brokerge
Ramanan.S (Realtor)
416.290.6000
3ஆம் பரிசு வழங்கும் $300
HomeLife / GTA Realty Inc. Brokerge
416.399.6640
MS7 QUALITY PRE-OWNED AUTO SALES
3ஆம் பரிசு வழங்கும் $300
Siva Panchalingam (Insurance Broker)
416.990.4908
3ஆம் பரிசு வழங்கும் $300
Vijay Balan.s
A1 Ink Rainbow Inc
416.286.0333
3ஆம் பரிசு வழங்கும் $200
Kathir Subramaniyam
Gnams Studio
416.750.8118
3ஆம் பரிசு வழங்கும் $200
N. Thayabharan
416.332.1743
3ஆம் பரிசு வழங்கும் $200

# இதுதான் ஆசியாவின் அதிசயமா?

இலங்கையில் மஹிந்த ஆட்சி தோற்கடிக்கப் பட்டு, மைத்திரி தலைமையில் புதிய ஆட்சி ஏற்பட்டுள்ள நிலையில், இந்த அரசாங்கம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது. மக்களுக்கு வாக்குறுதியளிக்கப் பட்ட 100 நாள் வேலைத்திட்டம் என்பது சரியான திசைவழியில் பயணிக்கின்றதோ இல்லையோ அது ஒரு பாரிய சவாலான வேலைத்திட்டமே.

இந்த 100 நாள் வேலைத்திட்டத்தை விடவும், முன்னைய அரசாங்கத்தின் ஊழல் மோசடி களை வெளிக்கொண்டு வந்து குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பது நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின் றது. குற்றச்சாட்டுக்களை வெளிப்படுத்தாமல் விட்டால், மஹிந்த தரப்பினர் தற்போது கூறிவருவது போல, 'அரசியல் பழிவாங்கல்' என்ற வட்டத்திற்குள் சகலதும் அமிழ்ந்து போய்விடும்.

எனவே, இதனை முறையாக கையாண்டு குற்றங்கள், ஊழல் மோசடிகள், அனைத்தும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இது புதிய அரசாங்கத்தின் முன்னுள்ள பாரிய பொறுப்பாகும்.

**- விகிர்தன் -**

நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளைப் பார்க்கும்போது தலை சுற்றுகிறது. ஆசியாவின் அதிசயமாக இலங்கையை உருவாக்கப் போவதாக கூறியவர்கள் ஆசியாவே அதிசயிக்கும் மோசடிகளை செய்தவர்களாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றார்கள். இவ்வாறான நிலையில், குற்றங்கள் குறித்த தேடலின் அளவிற்கு அதன் சூத்திரதாரிகள் மீதான விசாரணை வேகம் கொள்ளவில்லை என்றே மக்கள் கருதுகின்றனர்.

அவசரப்பட வேண்டாம், எல்லாம் சரியாக நடக்கும். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று பொதுமக்களுக்கு புதிய அரசால் வாக்குறுதிகள் வழங்கப்படு கின்றன. அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொது நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போது, மக்களின் அவதானத் தையும் அவசரத்தையும் புரிந்து கொள்வதாக தெரிவித்திருக்கின்றார். ஆனால், அவசரப் பட்டு குற்றவாளிகளை கூண்டுக்குள் போட முடியாது என்றும், அவ்வாறு செய்தால் முன்னைய அரசிற்கும் புதிய அரசிற்கும் வித்தியாசமில்லாமல் போய்விடும் என்றும், சட்டப்படி அனைத்து குற்றங்களும் வெளிப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டனைக்குள்ளாவார்கள் எனவும் தெரிவித் திருக்கின்றார். மஹிந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுக்கு அந்த அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக இருந்த, தற்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவே சாட்சியாக இருக்கின்றார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

குறிப்பாக, தனது பொறுப்பிலிருந்த சுகாதார அமைச்சில் இடம்பெறும் மோசடிகளையே அவரால் அப்போது கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது. ஒரு தடவை அவற்றை அலரி மாளிகையில் வைத்து தான் சுட்டிக்காட்டிய போது, அதிகாரிகளின் முன்னிலையில் மஹிந்த ராஜபக்ஸவால் தான் அவமதிக்கப் பட்டதாகவும், இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே நாட்டில் ஊழல்கள் அதி-கரித்ததாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றில் முதல் முறையாக



உரையாற்றும் போது தெரிவித்துள்ளார். தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்ட மூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்காது அதை மூடி மறைத்ததற்காக 400 மருத்துவக் கம்பனிகளிடமிருந்து தலா 25 லட்சம் ரூபா வீதம் முன்னாள் ஆட்சியா-ளர்களால் பெறப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு பெறப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது எனத் தெரியாது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப்போது தெரிவித்தார்.

அமைச்சர் ஒருவருக்கு இருக்கக்கூடிய சுயாதீனத் தன்மை பறிக்கப்பட்டதாலும் தவறுகள் தொடர்ந்ததாலுமே முன்னாள் அரசிலிருந்து வெளியேறியதாகவும் இன்று தான் ஜனாதிபதியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். "45 வருடங்களாக பேச்சு மட்டத்திலேயே இருந்து வந்த மருந்துக் கொள்கையுடன் தொடர்புடைய தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளதையிட்டு சந்தோஷம் அடைகிறேன். நாட்டின் சுகாதாரத் துறைக்கு முக்கியத்துவமிக்க விடயமாக இது காணப்படுகின்றது. இந்தச் சட்டமூலத்தை காணாமல்போகச் செய்வதற்கு சுமார் 400 மருத்துவ நிறுவனங்களிடம் இருந்து தலா 25 லட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது" என ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

"இந்த ஊழல் குறித்து விசாரணை நடத்தப் படவில்லை. பெறப்பட்ட பணத்துக்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது. சுகாதார அமைச்சு தொடர்பில் அலரி மாளிகையில் இடம்பெற்ற கூட்டமொன்றின் போது ஊழல்கள் பற்றி நான் கருத்து வெளியிடுகை யில், அதிகாரிகளை சுதந்திரமாக செயற்படுவதற்கு இடமளிக்குமாறு எனக்கு உத்தரவு வந்தது. இதையடுத்து அமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்பதை அதிகாரிகள் புரிந்துகொண்டனர். ஊழல்களும் தலைதூக்க ஆரம்பித்தன. அமைச்சர்களுக்கு சுயாதீனமாகவும், மனச்சாட்சியின்படியும் செயற்படுவதற்கு அப்போது இடமிருக்க வில்லை" என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தான் ஜனாபதியானதாகவும், ஜனாதிபதியானதால் தான் குறித்த இந்தச் சட்டமூலத்தை நாட்டு மக்களுக்காகக் கொண்டுவந்ததாகவும் அவர் அப்போது தெரிவித்தார். நடைபெற்ற இவ்வாறான மோசடிகளுக்கு முன்னைய அரசாங்கத்தின் அமைச்சரும் தற்போதைய ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவே சாட்சியாக இருக்கின்றமைக்கு இந்த சம்பவம் ஒன்றே சிறந்த உதாரணமாகும். இதனை விடவும், ஏனைய அமைச்சுக்களில் இடம்பெற்றுள்ள ஊழல்கள் இன்னும் அதிகமானதாகவே இருக்கும்.

வெளிநாடுகளில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள், வெளிநாட்டு வங்கிகளில் உள்ள பணம், தங்கள் மோசடி அரசை தக்கவைக்க வேண்டும் என்பதற்காக வாரி இறைக்கப்பட்ட மக்களின் பணம் என்பன இன்னும் அதிகமானவை. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச நாடுகளில் மஹிந்த அரசிற்கு அபகீர்த்தி ஏற்பட்ட நிலையில் தங்களுக்கு சாதகமாக பரப்புரை செய்வதற்காக பெருந்தொகை பணம் செலவி டப்பட்டுள்ளதாகவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த ஐந்து வருடங்களில் அமெரிக்காவைச் சேர்ந்த 4 கம்பனிகளுக்கு 12 இலட்சத்து 88 ஆயிரத்து 106 டொலர்களை (இலங்கை மதிப்பில் சுமார் 16 கோடியே 75 இலட்சம் ரூபா) முன்னைய அரசாங்கம் வழங்கியுள்ளது என வெளிவிவகார பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா தகவல் வெளியிட்டுள்ளார். அந்த நிறுவனங்களின் பெயரையும் அவர் குறிப்பிட்டுள்ளார். பற்றன் பொக்ஸ் எல்.எல்.பி. கம்பனிக்கு 2010ஆம் ஆண்டு 3 இலட்சத்து 15 ஆயிரம் டொலர்களையும், 2011இல் 4 இலட்சத்து 20 ஆயிரம் டொலர்களையும், 2012இல் ஒரு இலட்சத்து 5 ஆயிரம் டொலர்களையும் வழங்கியுள்ளதாகவும், கிரான்போட் ஜோன்சன் ரொபின்சன் பீ.ஆர். கம்பனிக்கு 2010ஆம் ஆண்டு 45 ஆயிரம் டொலர்களை வழங்கியது எனவும், ஸ்டீவ் கெட்ஜேஸ் கம்பனிக்கு 2010இல் 49 ஆயிரத்து 106 டொலர்களை வழங்கியதாக

**தொடர்ச்சி 10ஆம் பக்கம்**






# அத்தனைக்கும் ஆசைப்படு



## சத்குரு வாசுதேவ்

இமயமலையின் அடிவாரம். நீண்ட பயணத்திற்கப்புறம் பஸ்ஸிலிருந்து அந்த இளைஞன் இறங்கினான். அவனுடைய இரண்டு துணி மூட்டைகளைச் சுமந்து கொண்டு மலையேற, காத்திருந்த கழுதைகளில் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டான்.

'எங்கே போக வேண்டும் சாஹேப்?' கழுதையை வழி நடத்துபவன் கேட்டான்.

'ஏதாவதொரு நல்ல சாமியார் ஆசிரமத்திற்கு போ?'

'எத்தனை நாட்கள் தங்கப் போகிறீர்கள்?'

'நாட்களா? இனி என் வாழ்க்கையே இங்கேதான். என் மனைவி, குழந்தைகள், அம்மா, அப்பா, பிஸினஸ் எல்லாவற்றையும் உதறிவிட்டு வந்துவிட்டேன். இதோ என் கழுத்தில் இருக்கிறதே தங்கச் சங்கிலி... இதைக் கூட உனக்குக் கொடுத்து விடப் போகிறேன்.'

கழுதைக்காரன் வியந்து நின்றான். 'இந்தச் சின்ன வயதில் உங்களுக்கு எப்படி இதெல்லாம் சாத்தியமாயிற்று?'

இளைஞன் முகத்தில் பெருமிதம் வழிந்தது. 'எங்கள் ஊருக்கு வந்திருந்த குரு ஒருவர் சொன்னது என்னை ஆழமாகத் தொட்டு விட்டது. ஆசைகள் தான் துன்பத்துக்கெல் லாம் காரணமாம். அதுதான் எல்லா ஆசைகளையும் உதறிவிட்டு வந்து விட்டேன்'.

'எல்லாவற்றையும் உதறிவிட்டு இந்த மூட்டைகளில் என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள், சாஹேப்?'

'இங்கே குளிர் அதிகம் என்று சொன்னார்கள். அவசரத்துக்குப் பக்கத்தில் கடைகளும் கிடையாதாமே. அதனால் இந்த மூட்டைகளில் எனக்கு வேண்டிய கம்பளிகளை எடுத்து வந்திருக்கிறேன்.

கம்பளியைக் கூட உதற முடியாமல் வாழ்க்கையையே உதறியதாகச் சொல்லும் அந்த இளைஞனைப் போல, ஆசையைத் துறந்ததாகப் பலர் சொல்லிக் கொண்டு அலைகிறார்கள்.

ஆசை இல்லாமல் இந்தப் பிரபஞ்சம் இல்லை. ஆசை இல்லாமல் இந்த உடல் இருக்காது. உயிர் இருக்காது.

ஆசைப்படக்கூடாது என்று இந்தப் பிரபஞ்சம் ஒருநாளும் உங்களுக்குச் சொல்லித் தரவில்லை. ஆசையைத் துறந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்பதைப் போன்ற முட்டாள்தனமான தத்துவம் எதுவுமில்லை. ஆசையைத் துறக்கத் தீர்மானித்து விட்டேன் என்று உங்கள் மனம் போலித்தனமாக துறவு பேசும். மனம் தந்திரசாலி. எதையோ சொல்லி உங்களை நம்பவைத்து ஏமாற்றும். அந்த சூட்சமம் அதற்குத் தெரியும். ஆனால் உடம்பு?

காற்றுப் புகமுடியாதபடி உங்கள் வாயையும், மூக்கையும் இறுகப் பொத்திக் கொண்டு வேடிக்கை பாருங்கள். ஒரு நிமிடம், இரண்டு நிமிடம் வேண்டுமானால் உடம்பு பொறுத்துக் கொள்ளும். அப்புறம், உயிர் வாழவேண்டும் என்று உங்கள் உடம்புக்குள் பீறிட்டு எழும் ஆசை உங்கள் கையைப் பிடுங்கிப்போடும். விட்டுப் போனதற்கும் சேர்த்து அள்ளி அள்ளி ஒக்ஸிஜனைக் குடிக்கும்.

ஆசை இல்லை என்று உங்கள் மனம் சொன்ன தத்துவங்கள் எல்லாம் உடம்பிடம் எடுபடாது. ஏனென்றால், அதற்குப் பொய் சொல்லி ஏமாற்றத் தெரியாது.

உடம்பு என்று மொத்தமாகக் கூடச் சொல்ல வேண்டாம். அதில் இருக்கும் ஒவ்வொரு 'சொல்லும் ஆசையில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. விருந்தாளியாக உள்ளே ஒரு நோய்க் கிருமி நுழைந்து பார்க்கட்டுமே.... உடனே ஒவ்வொரு 'செல்லும் ஆயுதத்தைத் தூக்கிக் கொண்டு கடுமையான போருக்குக் கிளம்பிவிடும். எதற்காக?

பிரபஞ்சம் அதற்கு வாழும் ஆசையைக் கொடுத்திருக்கிறது.

இன்னும் ஆழமாகப் பார்த்தால், ஆசைகளைத் துறக்க வேண்டும் என்று விரும்பினால் அடிப்படையில் அந்த விருப்பமும் ஓர் ஆசை தானே?

உங்கள் ஊருக்கு ஒரு சாமியார் வந்திருப்பார்.

'நீ பணத்தின் மீது ஆசை வைத்தாய். அதுதான் உன் துன்பத்துக்கு எல்லாம் காரணம். கடவுளின் மீது ஆசை வை' என்பார்.

உங்களிடம் பத்துகோடி ரூபாய் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். கடவுளை நம்பி உங்கள் பணத்தை எல்லாம் தேசத்தில் இருக்கும் ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டால், உடனே நிம்மதி வந்துவிடுமா?

நாளையிலிருந்து இந்த தேசத்தில் உங்களையும் சேர்த்து ஏழைகளின் எண்ணிக்கையில் ஒன்று கூடிப்போகும். அவ்வளவுதான்.

பணம் கையில் இருந்தால் என்னவெல்லாம் செய்யமுடியும் என்பதாவது உங்களுக்குத் தெரியும். கடவுளால் என்ன செய்யமுடியும். என்ன செய்ய முடியாது என்று உங்களுக்கு எந்த அனுபவமும் கிடையாது.

'இன்பத்துக்கு ஆசைப்படாதே, சொர்க்கத் துக்கு ஆசைப்படு. அதிகாரத்துக்கு ஆசைப்படாதே. அமைதிக்கு ஆசைப்படு' என்று வேறொரு அறிவுரையும் அடிக்கடி கிடைக்கும்.

சங்கரன் பிள்ளைக்கு ஒருமுறை மோசமான முதுகுவலி வந்தது. டாக்டர் எக்ஸ்ரேவை வெளிச்சத்தில் பார்த்தார்.. 'இந்த எக்ரேவைப் பார்த்தீர்களா? உங்கள் முதுக்கு தண்டு தீவிரமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆபரேஷன் தான் செய்ய வேண்டும்.'

'எவ்வளவு செலவாகும். டாக்டர்?'

'என் ஃபீஸ் இருபத்தையாயிரம் ரூபாய். ஆஸ்பத்திரியில் ஆறு வாரம் தங்கி ஓய்வு எடுக்க வேண்டியிருக்கும்.'

சங்கரன் பிள்ளை திகைத்தார். அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது?

'இதோ வந்து விடுகிறேன் டாக்டர்' என்று எக்ஸ்ரேவை வாங்கியவர். நேராக எக்ஸ்ரே எடுத்தவரிடம் விரைந்தார்.

'டாக்டருக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுத்து, ஒரு மணிநேரத்தில் சிகிச்சை முடிகிற மாதிரி இந்த எக்ரேவைத் திருத்தித் தரமுடியுமா...ப்ளீஸ்?' என்று கேட்டார்.

அப்படி எக்ரேவைத் திருத்தித் தரும் சாமியார்கள் தான் ஆசைகளை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றிக் கொள்ளச் சொல்பவர்கள்.

இன்னொரு சாமியார் வருவார்... 'சரி, சரி, ஆசையை மொத்தமாக விட்டொழிக்க வேண்டாம். கொஞ்சம் கொஞ்சம்... இதோ இத்தினியூண்டு வைத்துக்கொள், பரவாயில்லை' என்று அனுமதி தருவார்.

'விரும்பினால், எனக்கு இன்னும் கிடைக்கும். ஆனால் எனக்கு இது போதும்' என்று ஒரு வைராக்கியத்துடன் ஆசையைக் குறைத்துக் கொண்டீர்களேயானால் அதை ரசிக்கலாம். அது உங்களுக்கு நிறைவை தரும். சந்தோஷத்தைத் தரும்.

ஆனால், 'எனக்கெங்கே அதெல்லாம் கிடைக்கப்போகிறது? இதுவே போதும்' என்று தத்துவம் பேசி, உங்கள் ஆசைகளின் சிறகுகளைக் கத்தரித்தீர்களேயானால், அது கோழைத்தனம். 'பக்கத்து வீட்டுக்காரன் படுபேராசைக்காரன். ஆனால் அவனுக்கு எல்லாம் கிடைக்கிறது. நான் ஆசைப்பட்டதே இத்துண்டு. அது கூட எனக்குக் கிடைக்கமாட்டேன் என்கிறதே?' என்ற துயரந்தான் மேலும் அதிகமாகிப் போகும்.

அதனால்தான் சொல்கிறேன். ஆசைப் படுங்கள். மிகப்பெரிதாக ஆசைப்படுங்கள். அந்த தைரியம் கூட இல்லாமல், அற்பமாக ஆசையைச் சுருக்கிக் கொண்டீர்களே யானால், வாழ்க்கையில் வேறு எதைப் பெரிதாக நீங்கள் சாதித்துவிடப் போகிறீர்கள்.?

உங்களின் வாழ்க்கையின் தரத்தையே நிர்ணயம் செய்யப் போகும் ஆசைகளைப் பற்றி இன்னும் ஆழமாகத் தெரிந்து கொள்வோமா?

ஒவ்வொரு தனிமனிதனும் எல்லையில்லா ஆனந்த நிலையை உய்த்துணர, கோவை - வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் ஈஷாயோக மையத்தை நிறுவியவர்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

மதங்களுக்கும், வழிபாடுகளுக்கும் அப்பாற்பட்ட தியானலிங்கம் என்ற மிக சக்தி வாய்ந்த சந்நிதியை எழுப்பியவர். யோகாவை ஒரு விஞ்ஞானக் கருவியாகப் பயன்படுத்தி பல இலட்சம் மனிதர்களை மேம்படுத்தி சமூகத்திற்கு அர்ப்பணித்தவர்.

தமிழகக் கிராமங்களை மேம்படுத்த பெருமுயற்சி மேற்கொண்டுள்ளவர். உலகெங்கும் பல இலட்சம் மனிதர்களின் அன்பிற்கும், நம்பிக்கைக்கும் உரிய சத்குரு!





AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406




Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-866-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினை ?

நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?

பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?



லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?

எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?

ரீபைனான்ஸ் செய்ய வேணும்?

2வது, 3வது மோட்கேஜ் எடுக்கவேணும்?

வீடு வாடகைக்கு விட அல்லது எடுக்க வேணும்?

## என் கேள்விக்கு என்ன பதில்?



"மோட்கேஜ் கிளினிக்" ✓

MORTGAGE IN ANY SITUATION

உங்களுக்கு பதில் கொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)





சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

And..

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

For All Your Real Estate Services

# இந்திய மீனவர்களின் அத்துமீறலும், சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இலங்கை பிரதமரின் கருத்தும்!

## தாயகமடல்

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி வந்து மீன் பிடிப்பது தொடர்பில் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள கருத்து இந்தியத் தரப்பினருக்கு சினத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழக கட்சிகள் அறிக்கைகள் முலம் தங்கள் கண்டனங்களை தெரிவித்து வருகின்றன. இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வரலாற்று பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து ஏற்புடையதல்ல என பலரும் தெரிவிக்கின்றனர்.

இந்திய ஊடகம் ஒன்றிற்கு ரணில் விக்கிரமசிங்க அளித்துள்ள செவ்வியில், மீனவர் பிரச்சினை தொடர்பில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு அவர் அளித்துள்ள பதிலே சர்ச்சையை ஏற்பட்டுத்தியது.

கேள்வி:- இந்தியா- இலங்கைக்கிடையேயான நீண்டகால பிரச்சினையாக மீனவர் பிரச்சினை உள்ளது. இது எப்படி தீர்க்கப்பட வேண்டுமென கருதுகிறீர்கள்?

ரணில்- இது தமிழக-இலங்கை மீனவர்களிடையிலான பிரச்சினை. அவர்கள் இதை பேசித் தீர்க்க வேண்டும். இந்திய மீனவர்கள் இழுவை மடி வலைகள் கொண்டு மீன் பிடிப்பதை அனுமதிக்க முடியாது. இது இலங்கையின் கடல் பரப்பு. இலங்கை மீனவர்கள் இந்திய கடல் பகுதியில் இப்படி மீன்பிடித்தால் என்ன செய்திருப்பீர்கள்? நாங்கள் உங்கள் பரப்பில் மீன் பிடிக்க வேண்டும், அதுவும் இழுவை மடிகளை பயன்படுத்தி மீன் பிடிக்கவேண்டும் என்று கேட்கிறீர்கள்.

கேள்வி:- ஆனால் அது அவர்கள் பாரம்பரியமாக மீன் பிடித்து வரும் பரப்பு என்கிறார்கள்...

ரணில்- கச்சத்தீவு உடன்படிக்கை ஏற்பட்ட காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட படகு வகைகளை நீங்கள் பயன்படுத்தினால்.. நாங்கள் பரிசீலிப்போம்..

கேள்வி:- எங்கள் மீனவர்கள், இழுவை முறையில் மீன் பிடிப்பதை கைவிட தயார் என்கிறார்கள்...

ரணில்- அவர்களை இழுவை மடிகளை கைவிடச் சொல்லுங்கள். இரு நாட்டு மீனவர்களுக்கிடையில் திருமண பந்தங்கள் உண்டு... அவர்கள் இந்தப் பிரச்சினையை பேசித்தான் தீர்க்க வேண்டும். இது எங்கள் வடக்கு மீனவர்களின் மீன்பிடி பகுதி..



கேள்வி:- அவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை வழங்க நீங்கள் தயாரா?

ரணில்- கச்சத்தீவு ஒப்பந்தம் ஏற்பட்டபோது பயன்படுத்தப்பட்ட படகு வகைகள், அதே எண்ணிக்கையில் பயன்படுத்தப்பட்டால்... இதைப் பற்றிப் பேச நாங்கள் தயாராக உள்ளோம்.

கேள்வி:- நீங்கள் கச்சத்தீவு விவகாரத்தை குறிப்பிட்டீர்கள்... கச்சத்தீவு மீட்பே பிரச்சினைக்கு தீர்வு என தமிழகம் கருதுகிறது. கச்சத்தீவை மீண்டும் ஒப்படைப்பது பற்றி பரிசீலிப்பீர்களா?

ரணில்- கச்சத்தீவு இலங்கையின் பகுதி. இந்திய அரசும் அது இலங்கைக்கு சொந்தம் என்றே கருதுகிறது. இது தமிழக அரசியலின் ஒரு பகுதி என்பது எனக்கு நன்கு தெரியும். மீனவர் விவகாரத்தை பொறுத்தவரை, இது எங்கள் வடக்கு மீனவர்களின் பாரம்பரிய உரிமையை சார்ந்தது. எங்கள் தெற்குப் பகுதி மீனவர்கள் கூட, புத்தளம் உள்ளிட்ட பகுதிகளில் இந்திய மீனவர்கள் வந்து இழுவை மூலம் மீன் பிடிப்பதாக கூறுகின்றனர். இது எங்களுக்கு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இது எங்கள் மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினை.

இவைதான் மீனவர் பிரச்சினை தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளும் ரணில் விக்கிரமசிங்க அளித்த பதில்களும்.

ஆனால், ஒரு கட்டத்தில் அவர், இலங்கைக் கடற்பரப்பினுள் எல்லை மீறி வந்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தால் அது தவறில்லை என குறிப்பிட்டுள்ளார்.

'எங்கள் பகுதிக்கு நீங்கள் ஏன் வருகின்றீர்கள்? ஒருவர் என் வீட்டில் கொள்ளையிட வந்தால் அவரை நான் சுடலாம், அதற்கு சட்டத்தில் இடமிருக் கின்றது' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த வசனங்களே சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனை அவர் நாகரிகமாக வேறு வார்த்தைகளில் கூறியிருக்கலாம் என்பதே பொதுவான கருத்து, ஆனாலும், இந்திய மீனவர்களால் பாதிக்கப்படும் வடபகுதி மீனவர்கள் ரணிலின் கருத்துக் களை வரவேற்கின்றனர்.

அண்மையில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் எல்லை தாண்டி வந்த இந்திய மீனவர்கள் உள்ளூர் மீனவர்கள் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தி சிலரைக் காயப்படுத்திய சம்பவம் இடம் பெற்றதை சுட்டிக்காட்டியுள்ள யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை எமிலியான்பிள்ளை இதன் காரணமாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கடுமையாக நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் பல பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டும், இந்திய மீனவர்களால் உறுதிமொழிகள் வழங்கப் பட்டும் கூட அவர்களின் அத்துமீறல்கள் தொடர்வதாக வட பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பது மட்டுமல்லாமல் வடக்கு மீனவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள மீன்பிடி முறைகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர். இழுவைப் படகுகளை பயன்படுத்த வடக்கு மீனவர்களுக்கு அனுமதியில்லை. ஆனால் இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளில் வந்து வட பகுதி கடற்பரப்பில் மீன்பிடித்துச் செல்வதுடன் வடக்கு மீனவர்கள் வலைகளையும் உபகரணங்களையும் சேதப்படுத்திச் செல்கின்றனர்.

அத்துமீறும் இந்திய மீனவர்களை கைது செய்வது அவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் செயல் என்று கூறும் இந்தியா, தங்களின் வாழ்வாதாரம் இந்திய மீனவர்களால் பாதிக்கப்படுகின்றது என்பதை ஏன் எற்றுக்கொள்வதில்லை என கேட்கின்றனர் வட பகுதி மீனவர்கள்.

இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் எல்லை மீறி, வந்து தங்கள் வாழ்வாதாரத் தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தினால் இரு தரப்பு மீனவர்களுக்கும் மோதல் கூட வெடிக்கலாம் என வடக்கு மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதை எதிர்க்கும் இந்திய - தமிழக தரப்பினர் அவ்வாறானதோர் மோதல் நிலைமை ஏற்பட்டால் யாரை குறைகூறப் போகின்றனர் எனவும் வடபகுதி மீனவர்கள் வினவுகின்றனர்.

இந்நிலையில், இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றை காண வேண்டியது முக்கியமானதாகும். இதற்கு ஓர் தீர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இந்திய அரசாங்கத்திற்கே உள்ளது. ஏனெனில், இந்திய மீனவர்கள் எல்லை கடந்து இலங்கை கடற்பரப்பிற்குள் செல்வதை அவர்கள்தான் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. எப்போதாவது சில தடவை இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்பரப்பிற்குள் சென்று கைதாகும் சம்பவங்களும் இடம்பெறுவதுண்டு. அதனை இலங்கை அரசாங்கமும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இரு நாட்டு கடற்படையினரும் இணைந்து தங்கள் நாட்டு மீனவர்கள் எல்லை மீறிச் செல்வதை தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் இதனை கட்டுப்படுத்த முடியும். அதேவேளை, கடல் எல்லையை அடையாளப்படுத்தும் வழிமுறையொன்றையும் ஏற்படுத்தலாம்.

இலங்கையின் வட பகுதி மீனவர்கள் யுத்த காலங்களில் தங்கள் தொழிலை மேற்கொள்வதில் மிகுந்த சிரமங்களையும், அவலங்களையும் எதிர்கொண்டவர்கள். பாஸ் நடைமுறை, கடற்படையினரால் கைதாகும் நிலைமைகள் - பல தடவைகள் துப்பாகிச்சூட்டிற்கு பல மீனவர்கள் பலியான சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

போர் முடிவுற்ற நிலைமையில் கூட அவர்களின் மீன்பிடி தொழிலை மேற்கொள்வதற்கு சில கட்டுப்பாடுகள் இன்னமும் உள்ளன. இவ்வாறான நிலைமையில், இந்திய மீனவர்கள் எல்லைமீறி வந்து வடபகுதி மீனவர்களின் வலைகளை சேதப்படுத்துவதோடு, வடக்கின் கடல் வளங்களை அழிக்கும் நடவடிக்கைகளையும் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இதனைத் தடுக்கும் வழிமுறைகளை இந்தியாவே மேற்கொள்ள வேண்டும் என்கிறார்கள் வடபகுதி மீனவர்கள். இந்தியப் பிரதமரின் இலங்கை பயணம் இதற்கு வழிசமைக்க வேண்டும் எனவும் அவர்கள் விரும்புகின்றனர்.

**- ஆதித்தன் -**


விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com



விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# அடுக்குமாடி மனைகளின் வியாபாரத்தில் மீண்டும் வளர்ச்சி

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 435

கடந்த சில வருடங்களாக அடுக்கு மாடி மனைகளின் வியாபாரத்தில் மந்த நிலை காணப்பட்டது. மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. முக்கியமாக ரொறொன்ரோ நகரத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் ஏறக்குறைய 10,400 மனைகள் இந்த ஆண்டு (2015) ஜனவரியில் சந்தைப்படுத்தப்பட்டது. சாதாரண மாதத்திலும் பார்க்க எட்டு மடங்கு அதிகமாக இது காணப்படுகின்றது. இவற்றில் பெரும்பகுதியான மனைகள் விற்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் அதிகமான அடுக்குமாடி மனைகள் சந்தைப்படுத்தப்படுவதால் விற்கப்படாத மனைகளும் எண்ணிக்கையில் அதிகரித்தே செல்கின்றது. கடந்த 2014 இலையுதிர் காலத்தில் விற்பனை மிகக் குறைவாக காணப்பட்டது. இதனால் நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள், பல ஊக்குவிப்புகளை (Incentives) வாங்குனர்களிற்கு கொடுத்தது. உதாரணமாக 7 வீத வருடாந்த (7% Return) வருமானத்துடனான 2 வருட வாடகை உத்தரவாதம், இடைக்கால Closing இல்லாமல் இறுதியான Final Closing மட்டுமே கொடுக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் ஒரு வருடத்திற்குரிய மாதாந்த, நிர்வகிக்கும் செலவு இலவசம் (Maintenance Fee) போன்றவை.

சராசரியாக ஒரு ஆண்டில் கட்டப்படும், அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை 2012 ஆண்டில் 25,000 இலிருந்து தற்போது 37,000 வரை அதிகரித்துள்ளது. முன்பு இருந்த மத்திய நிதிமந்திரி காலம் சென்ற மதிப்பிற்குரிய ஜிம் பிளஹெட்டி மற்றும் முன்னைய மத்திய வங்கியின் ஆளுனர் திரு. மார்க் கார்ணி போன்றவர்களின் இறுக்கமான கொள்கைகளினால் நிதி நிறுவனங்கள் மிகவும் இறுக்கமான கொள்கைகளை வாங்குபவர்கள் மீது கடைப்பிடித்தது. அண்மைக்காலமாக நிதி நிறுவனங்கள் மீது மத்திய வங்கியின் ஆளுனரும், நிதி மந்திரியும் சற்று தனது இறுக்கத்தை இலகுவாக்கி இருப்பதால் வாங்குபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மேலும் நிர்மாணம் செய்யும் நிறுவனங்களும் அடுக்குமாடி கட்டிடத்தொகுதிக்குரிய கடனின் பெறுமதியும் 70%



இலிருந்து 75% ஆக அதிகரிக்கப்பட்டதனை சாதகமாக எடுத்துள்ளன. கடந்த சில வருடங்களாக அடுக்குமாடி மனைகளின் விலையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் சராசரி அடுக்குமாடி மனையின் விலை $500 இலிருந்து $600 வரை காணப்படுகின்றது. ரொறொன்ரோ பகுதியில் Vacant ஆகக்காணப்படும் மனைகளின், வீடுகளின் அளவு 2% இற்கு குறைவாகவே காணப்படுகின்றது. எனினும் 2007 இல் ஏற்பட்டது போன்ற அடுக்குமாடி மனை வியாபாரம் இல்லை என்றே கூற வேண்டும். 2008, 2009 இல்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

*Raja Mahendran,* P.Eng.
*Broker / Owner*



5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

## HOTEL / GAS STATION FOR SALE

- Brand name hotels for sale in GTA & Ontario. Great Opportunity to buy leading name. Hotel properties with a reasonable downpayment.
- Brand name gas stations. New & operative around GTA area. Minimum investment. 1 Million.

## BRAND NEW HOUSE FOR SALE



*Scarborough East. Double Garage. Double door. Finished basement with washroom, kitchen, Sep. entrance. Move in any time.*
*Asking Only $889,000*

## BUILDING FOR SALE

*42,000 sq.ft. industrial building for sale in Scarborough. Four loading locks, lots of parking, drive through door, Asking $3.4 Million*
*Lawrence & Meadowvale*

## DETACHED HOUSE FOR SALE

*Scarborough North*
*4 Level Back split. Finished basement. 2 Kitchen. Sep. entrance. Asking 599,000.*

* INDEPENDENTLY OWNED AND OPERATED

# இலங்கைக்கு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மக்களது பிரச்சினைகள், ஜேர்மன் நாட்டுப் பிரச்சினைகள், மற்றும் பாலஸ்தீனம்-இஸ்ரேல் பிரச்சினைகள் தொடர்பான கேள்விகளுக்கும் பதிலளித்தார். பாலஸ்தீனம்-இஸ்ரேல் பிரச்சினைகளுக்கு பதிலளித்த ஐ.நா துணை செயலாளர் நாயகம் "இரண்டு அரசு" என்ற கோட்பாட்டின்படியே தான் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணாலாம் என்பதில் ஐக்கிய நாடுகள் சபை நம்பிக்கை கொண்டுள்ளது என்றார்.

உக்கிரேன் பிரச்சினைக்கு ஐ.நா அமைதிப்படையை அனுப்புமா என்ற கேள்விக்கு பதிலளித்த ஐ.நா துணை செயலாளர் நாயகம், இதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைதான் முடிவு எடுக்கவேண்டும் என்றார்.

# இலங்கை அரசின் சொற்கள் செயல்களாக மாற வேண்டும்" - பிரித்தானிய பிரதமர்

எலிசபெத் மகாராணியின் அழைப்பை ஏற்று உத்தியோகபூர்வ பயணமாக பிரிட்டன் சென்றுள்ள இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன 2015 மார்ச் 9இல் லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் அமைப்புத் தின நிகழ்வுகளில் கலந்து கொண்டார். தொடர்ந்து அந்நாட்டின் முக்கிய பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினார். இலங்கையின் புதிய அதிபரின் நல்லெண்ண சமிக்ஞைகளை வரவேற்றிருக்கும் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், இலங்கை அதிபரின் அறிவிப்புக்கள் அனைத்தும் வாய்வார்த்தைகள் என்பதைத் தாண்டி செயல்களாக மாறுவதைக் காணவே பிரிட்டன் விரும்புகிறது என்று தெரிவித்திருக்கிறார்.



பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ள பிரிட்டன் வந்த இலங்கையின் அதிபர் மைத்திரிபால சிறிசேனவை 2015 மார்ச் 10இல் தமது அதிகாரப்பூர்வ இல்லத்தில் வரவேற்று உபசரித்துப் பேசிய டேவிட் கமரூன், அவர் மீது பிரிட்டன் நம்பிக்கை வைத்திருப்பதாக தெரிவித்தார். இலங்கையில் இருக்கும் தமிழர்கள் தொடர்பாக இலங்கை அதிபர் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தமக்கு அந்த நம்பிக்கையை அளிப்பதாக கூறினார். மறுசீரமைப்பு தொடர்பான இலங்கை அதிபரின் முன்முயற்சிகளை பிரிட்டன் ஆதரிப்பதாகத் தெரிவித்த கமரூன், மறுசீரமைப்பு, ஊழல் ஒழிப்பு, பிரிந்துகிடந்த இலங்கையை ஒன்றாக்குவதற்கான முயற்சிகள் என புதிய அரசின் நடவடிக்கைகளை வரவேற்பதாகவும் கூறினார். இலங்கையின் வடக்கே இராணுவத்தின் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருந்த நிலத்தில் ஒரு பகுதி தமிழர்களுக்கு திருப்பி அளிக்கப்படுவது, சிவில் நிர்வாகத்தில் இருந்து இராணுவமயமாக்கலை அகற்றும் நோக்கில் ஆளுநர்களாக இருந்த இராணுவ உயர் அதிகாரிகளுக்கு பதில் சிவிலியன்களை ஆளுநர்களாக நியமித்திருப்பது, மீள்குடியேற்றத் துறைக்கு தமிழர் ஒருவரையே அமைச்சராக நியமித்திருப்பது போன்ற நடவடிக்கைகளை இணைத்துப் பார்க்கும் போது, இவை நல்ல ஆரம்பம் என்று தாம் கருதுவதாக கமரூன் தெரிவித்தார்.

இலங்கையின் மீள்-குடியேற்றம் மற்றும் நல்லிணக்கம் ஆகியன தொடர்பிலான இது போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்தும் புதிய அதிபர் முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட கமரூன், அதற்குத் தேவையான ஒத்துழைப்பை பிரிட்டன் வழங்கும் என்று உறுதியளித்தார். இலங்கையுடன் பிரிட்டனுக்கு வரலாற்று ரீதியாக வலுவான உறவு நீடிப்பதாக தெரிவித்த அவர், இலங்கை அதிபர் தனது மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற தனது முன்னெடுப்புக்களைத் தொடர்வார் என்று நம்பிக்கையை வெளியிட்டார். அதற்கான அனைத்து உதவிகளையும் பிரிட்டன் செய்யும் என்றும் அவர் உறுதியளித்தார்.

# "ஆறு மாத காலத்தில் இலங்கையின் பொறுப்புக் கூறல் வெளிச்சத்துக்கு வரும்" - டேவிட் கமரூன் பிரதமர்

முன்னதாக லண்டனில் இருந்து வெளியாகும் 'தமிழ் கார்டியன்' பத்திரிகையில் கட்டுரை ஒன்று எழுதியிருந்த கமரூன், இலங்கையின் போர்க் குற்றங்கள் உள்ளிட்ட மோசமான மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலை ஏற்கவைப்பதிலும், தற்கால மனித உரிமைகள் நிலவரத்தை மேம்படுத்துவதிலும் பிரிட்டன் உறுதியாக இருப்பதாக தெரிவித்திருந்தார். இராணுவம் பிடித்து வைத்திருக்கும் காணிகள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த நிலையில் 2013ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தாம் சந்தித்த போரினால் பாதிக்கப்பட்டவர்களின் முகங்களைத் தம்மால் மறக்க முடியாதுள்ளது என்றும் கமரூன் குறிப்பிட்டுள்ளார். 2013ஆம் ஆண்டு



இலங்கையில் யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்தபோது அங்கு பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலுக்கான தேவையுள்ளமையை தாம் வலியுறுத்தியதாகவும் கமரூன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பதை ஆறு மாதங்களுக்கு பிற்போட்டமையை இலங்கையின் எதிர்காலம் கருதிய ஒருவரும் வரவேற்கவில்லை. குறிப்பாக தமக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளதாக கூறும் வடக்கு, கிழக்கு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கமரூன் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐ.நா மன்றத்தின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அறிக்கை திட்டமிட்டபடி இம்மாதம் வெளியிடப்படாமை தொடர்பில் தமிழர்களின் கோபத்தை தாமும் பகிர்ந்துகொள்வதாகவும் கமரூன் கூறியிருந்தார்.

அதேசமயம், இந்த அறிக்கையை முன் வைப்பதற்கான காலஅவகாசம் செப்ரெம்பர் வரை ஒத்திப்போடப்பட்டிருப்பதன் விளைவாக, இலங்கையின் புதிய அரசாங்கம் ஐ.நா மன்றத்துடன் பேசவும், மனித உரிமை மீறல்கள் தொடர்பான நம்பகத்தன்மை மிக்க உள்ளக விசாரணையை ஏற்படுத்தவும் இலங்கை அரசுக்கு வாய்ப்பு கிட்டியிருப்பதாகவும் தெரிவித்தார். எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு தாம் இலங்கையின் அதிபர் மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தவுள்ளதாக கமரூன் தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் மத்தியில் புதிய அரசாங்கம் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும், இராணுவ சூன்யநிலை ஏற்படுத்தப்பட வேண்டும்,

எனவே, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளியிடவுள்ள அறிக்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறல்கள் அடங்கியிருக்கும் என்று கமரூன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐ.நா மன்றத்தின் மனித உரிமைப் பேரவையில் செப்ரெம்பர் மாதம் இலங்கை தொடர்பான ஆய்வறிக்கை கண்டிப்பாக சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்படும் என்று நம்பிக்கை வெளியிட்ட கமரூன், அடுத்த ஆறு மாதங்கள் கழித்து மீண்டும் உலகின் கவனம் இலங்கை மீது படியும் என்றும், அப்போது இலங்கையானது தனது கடந்த காலத்தை எதிர்கொள்ளக்கூடிய நாடாகவும், தனது மாறுபாடுகளை மறந்து தன்னை மறுசீரமைத்துக்கொள்வதன் மூலம் வளமான எதிர்காலத்தை உறுதி செய்யக்கூடிய நாடாகவும் இருக்கவேண்டும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார். 'தமிழ் கார்டியனுக்கு' அனுப்பியுள்ள கட்டுரையில் கமரூன் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.


**MATH, SCIENCE & ENGLISH TUITION**

*Math & Physics taken for all grades from grade 4 to 1st year university.*

Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at

*Scarborough & Stouffville*

*Contact:* 647.340.9490/ 416.732.2228



**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)


RemaxShan.com
Scarborough
Morningside/Shepperd
$659,900
Detached
4 Bed 3 Bath
Scarborough
Medowvale/Ellesmere
$923,900
Detached
4+3 Bed 6 Bath
Ajax
Williamson/Audley
$579,900
Detached
4+2 Bed 4 Bath
Pickering
Altona/Pingrove
$679,900
Detached
4+1 Bed 4 Bath
Scarborough
McCowan/Shepperd
$224,990
Condo
3 Bed 2 Bath
Oshawa
Harmony/Taunton
$422,000
Detached
4 Bed 3 Bath
Oshawa
Sincoe/Taunton
$378,000
Detached
4 Bed 3 Bath
Ajax
Rossland/Salem
$499,900
Detached
4 Bed 3 Bath
Markham
Markham/Bur Oak
$574,990
Townhouse
3 Bed 3 Bath
Oshawa
Sincoe/Conlins
$524,900
Detached
4+1 Bed 4 Bath
MORTGAGE?
NO PROBLEM
PRIVATE LENDING ALSO AVAILABLE
Shan Thayaparan
Sales Representative
DIR 416.567.7675
shan@remaxshan.com
RE/MAX VISION
REALTY INC., BROKERAGE*
*Independently Owned & Operated. Not inteded to solicit
BUS 416.321.2228
#1 - 2210 Markham Rd.
Scarborough, ON M1B 5V6




# இதுதான்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

வும், மஜோரிட்ட குருப் எல்.எல்.சி. கம்பனிக்கு 2013ஆம் ஆண்டு 3 இலட்சத்து 54 ஆயிரம் டொலர்களை வழங்கி யிருப்பதாகவும் அவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

முன்னைய அரசாங்கத்தில் அங்கம் வகித்த அரசியல்வாதிகளின் வெளிநாட்டு வங்கிகளில் உள்ள பணம் குறித்த விபரங்களும் தற்போது வெளியாகி வருகின்றன. புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதும், முன்னைய அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களை கூடத்தேட வேண்டிய கட்டத்தில், கீழ்த்தர மாக களவுகளும் இலங்கையில் இடம் பெற்றுள்ளன. முன்னைய அரசாங்கத்தில் அமைச்சர்கள் மற்றும் பிரதி யமைச்சர்கள் பயன்படுத்திய 300 வாகனங்களைக் காண வில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித்த சேனாரத்ன தெரிவிக்கின்றார். காலி யில் கண்டறியப்பட்ட மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலை விவகாரம் தொடர்பிலும் தற்போது விசாரணை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மஹிந்தவின் சகோதரரும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய வின் உத்தரவுக்கமையவே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும், இதில் பெரும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. 'அவன்ற் கார்டே' நிறுவனத்தின் இந்த ஆயுதக் களஞ்சியம் தொடர்பான வழக்கு முடியும்வரை, கோட்டாபய ராஜபக்ஸ உட்பட நான்கு பேர் வெளிநாடு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. நடைபெற்ற மோசடிகள் தொடர்பில் கோட்டாபய கைதாகக் கூடிய நிலைமை உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மஹிந்த அரசாங்கத்தில் நடைபெற்ற மோசடிகளில் இன்னமும் என்னவெல்லாம் புதைந்து கிடக்கின்றனவோ என மக்கள் வியந்து நிற்பதுடன், குற்றவாளிகள் தண்டிக்கப்படும் நாட்களையும் அவர்கள் எதிர்ப்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# அடுக்குமாடி...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏற்பட்ட விலை இறக்கம் அப்புறம் 2010 இல் வளர்ச்சி பிற்பாடு சீரான வியாபாரம், பின்பு சிறிது இறக்கம் இவ்வாறே காணப்படுகின்றது. ஜனவரியில் ஏற்பட்ட சடுதியான அடமானக்கடன் வட்டிவீத இறக்கம் ஒருவித உற்சாகத்தை வாங்குபவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என்பதனை ஏற்கத்தான் வேண்டும்.

வட்டிவீத இறக்கம், குறூட் ஒயிலின் (Crude Oil) விலை இறக்கம் கனடிய டொலரில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. கனடிய டொலரின் பெறுமதியில் ஏறக்குறைய 20% இற்கு மேலான இறக்கத்தை காணக்கூடியதாகவுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 8 தடவைகள் கனடிய மத்திய வங்கி நிபுணர்கள் ஒன்று கூடி கனடிய பொருளாதாரத்தின் நிலைமை எதிர்காலத்தின் நிலைமையை ஆராய்ந்து அதற்கேற்ப வட்டிவீதத்தை சீர் செய்வார்கள். இதன் முதற்கட்டமே ஜனவரி (2015) இன் 25 புள்ளிகள் இறக்கம் 1% இலிருந்து கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 0.75% ஆகக் குறைக்கப்பட்டது. இவ்வருடத்தின் மத்தியவங்கியின் ஆளுனரி னதும் அவரினது ஆலோசகர்களினதும் இரண்டாவது சந்திப்பு ஆரம்பத்தில் புதன், மார்ச் 05, 2015 இல் நடைபெற்றது. இந்த வருடத்தின் 2வது சந்திப்பில் மத்திய வங்கியின் ஆளுனர் மேலும் 25 புள்ளிகள் வட்டி வீதத்தை குறைக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இதனால் கனடிய டொலர் பெறுமதிகளில் மேலும் தாக்கம் ஏற்பட்டது. மார்ச் 2015 இன் முற்பகுதியில் வந்த புள்ளி விபரங்களின் பிரகாரம், பணவீக்கம், GDP இன் அளவுகள் பொருளாதாரத்திற்கு மிகவும் சாதகமாகவே காணப்பட்டது. இதனால் இந்தமாதம் ஏற்படுத்த இருந்த கனடிய டொலரின் பெறுமதியில் சிறிது மேல் நோக்கி வளர்ச்சி காணப்பட்டது. மத்திய வங்கியின் வட்டிவீதம் 0.75% ஆகவே காணப்படுகின்றது.

அடுக்குமாடியே வழியாகலாம். அல்லது ரொறொன்ரோ நகரை விட்டு வெளியே சென்று வாங்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலை ஏற்படலாம். ரொறொன்ரோவில் வாழ வேண்டிய நிர்பந்தம் உள்ளவர்களிற்கு வாடகை மாற்றுவழியாகலாம்.

இன்றைய உலகில், பெரிய நகரங்களில் அதிமானவர்கள் வாடகையில் இருப்பது, சகஜமாகக் காணப்படுகின்றது. இந்நிலைமை இங்கும் வருமா? அதிக விலை அதிகரிப்பு மக்களிற்குரிய மாற்றுமுறைகளில் இதுவும் ஒன்றாகலாம். அண்மைக்காலங்களில் அடுக்குமாடி மனை நிர்மானம் செய்யும் நிறுவனங்கள், அடுக்குமாடிக் கொண்டோக்கள் கட்டி விற்பனை செய்வதற்கு பதிலாக வாடகைக்கு கொடுக்க தீர்மானித்து வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. ஏற்கனவே இவற்றைப் பற்றி முந்தைய கட்டுரைகளில் எழுதியுள்ளேன். இதன் அடுத்த கட்டமாக ரொறொன்ரோவில் ஒரு காலத்தில் மிகவும் பிரபல்யமாகக் காணப்பட்ட 'Honest Eds' (Bathurst & Bloor) இருந்த இடமும் இப்பொழுது அடுக்குமாடி கட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்தொகுதியும் வாடகைக்கு விடுவதாகத்தான் கட்டப்படுகின்றது போல தெரிய வருகின்றது. இதுவும் எதிர்கால பாதையின் ஒரு தெருவாகத்தான் தோன்றுகின்றது.



எதுவித வட்டிவீத மாற்றமும் ஏற்படுத்த வில்லை. காலநிலை மாறுகின்றது. வெப்ப நிலையானது உறைநிலையிலிருந்து மேல் நோக்கி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. ஆதன வியாபாரம் மேலும் வீரியம் பெறலாம் என்றுதான் எதிர்பார்க்க தோன்றுகின்றது.

## வீட்டு விலை அதிகரிப்பு வரமா? சுமையா?

விலை அதிகரிப்பு, வட்டிவீதக்குறைப்பு, புதியவர்களின் கனடிய வரவு, வீடு கட்டுவதற்கான நிலத்தின் பற்றாக்குறை ரொறொன்ரோ பற்றிய உலகளாவிய மதிப்பு ஆதனவிலையை தொடர்ந்து அதிகரித்து செல்வதற்குரிய சில காரணங்கள். இதன் கட்டமாக ரொறொன்ரோவின் தனி வீட்டின் சராசரி விலை ஒரு மில்லியன் டொலர் என்ற பெரும் இலக்கைத் முதல் முறையாக தாண்டியுள்ளது. புதிதாக ரொறொன்ரோ வில் தனி வீடு வாங்குபவர்களிற்கு இது ஒரு இக்கட்டான நிலைப்பாடு இதற்கு மாற்றாக, தொடர் வீடுகள் அல்லது

## வீட்டு விலை $1,000,000 இற்கு மேல்

ரொறொன்ரோ தனி வீடு $1,000,000 ஐ தாண்டியுள்ளது. ரொறொன்ரோவில் தனி வீட்டின் விலை முதல்தடவையாக $1 மில்லியன் என்ற மிகப்பெரிய விலையை தாண்டி மேல்பக்கமாக சென்றுள்ளது. இந்த வருடத்தின் (2015) பெப்ரவரியில் வழமைக்கு மாறாக குளிர் மக்களை வீட்டிற்குள் முடக்கிய போதிலும் ஆதனம் வாங்குபவர்கள் போட்டிபோட்டு வாங்கிய படியே இருந்தார்கள். இதன் பலனாக சராசரி தனி வீட்டின் விலை $1 மில்லியன் கனடிய டொலரை தாண்டி, $1,040,048 ஆகக் காணப்படுகின்றது. இருப்பினும் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் சராசரி வீட்டுவிலை $593,163 ஆகக் காணப்படு கின்றது. அடுக்குமாடி மனைகளின் சராசரி விலை $369,655 ஆகவும் காணப்படுகின்றது.

ரொறொன்ரோ நகரின் நன்மதிப்பு உலகளாவிய ரீதியில் பிரசித்து வருவதால் விலையின் அதிகரிப்பு தவிர்க்க முடியாமல் போகலாம்.

# இந்தியப்பிரதமரின் இலங்கைப் பயணம்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்தார். அவரைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் செங்கம்பள வரவேற்பும் வழங்கப்பட்டது. இந்தியாவின் பிரதமர் ஒருவர் 28 வருடங்களுக்கு பின்னர் உத்தியோகபூர்வ அரச பயணத்தை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.



பிரதமர் மோடி இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். இந்த நாடாளுமன்றம் ஆசியாவின் பழமையான நாடாளு மன்றங்களில் ஒன்று. இரு நாடுகளுக்கும் இடையில் கலாசார பரிமாற்றம் இருப்பது பெருமை அளிக்கிறது. இரண்டு நாடுகளும் இணைந்து செயற்பட்டால் இலக்கை விரைந்து அடைய முடியும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் இலங்கை வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றாக உள்ளது. அண்டை நாடுகளின் வளர்ச்சிக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும். அடுத்த கட்ட நடவடிக்கையாக என்ன செய்யலாம் என்பதை இலங்கைதான் முடிவு செய்ய வேண்டும். கடுமையான தீவிரவாத தாக்குதல்களை எதிர்கொண்டு சமாளித்து வருகின்றோம். இந்திய ரிசர்வ் வங்கி 1.5 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு உதவியாக வழங்கியுள்ளது. இலங்கையின் ரயில்வே திட்டத்திற்கு 350 பில்லியன் டொலர்களை இந்தியா வழங்கவுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் தொடர்புகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அணு ஒப்பந்தங்களில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன. கடலோர பகுதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது இரு நாடுகளின் பொறுப்பாகும். இரு நாடுகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். இதனை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க வேண்டும். இலங்கை – இந்திய உறவிற்கு புத்துயிர் கொடுக்க வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சம உரிமை கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எந்த விதத்தில் பார்த்தாலும் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் பல ஒற்றுமைகள் இருக்கின்றன என தெரிவித்த அவர் பின்வருமாறும் குறிப்பிட்டார்:

"மிக அருகில் உள்ள அயல் நாடு என்ற வகையில் மத, மொழி கலாசாரம் ஆகியவற்றில் இரு நாடுகளுக்கும் இடையில் பல ஒன்றுமைகள் உள்ளன. ஒரே காலப் பகுதியில்தான் இரு நாடுகளும் சுதந்திரம் பெற்றன.

உலக பொருளாதாரத்தின் பிரதான பங்காளியாகவே இந்தியாவை உலகம் காண்கிறது. இதன் பிரதான உதவியாளராக இலங்கையைக் கொண்டு வரவே இந்தியா முயற்சித்து வருகிறது. தெற்காசியாவின் அபிவிருத்தியில் இரண்டு பிரதான இயந்திரங்களாக இலங்கையும், இந்தியாவும் மாற வேண்டும். இந்தியாவின் செய்மதி தொழில்நுட்பத்தில் இலங்கை கூடிய பலன்களை பெற முடியும்.

எதிர்காலத்தில் சரியான பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டியது நாட்டு மக்களின் கடமை. இலங்கையின் ஒருமைப்பாடு, அமைதி ஆகியவை இந்தியாவுக்கு மிகவும் முக்கியம். இரு நாடுகளின் பாதுகாப்பும் பிரிக்க முடியாதது. ஒன்றில் இருந்து ஒன்று தனித்து செயல்பட முடியாது. இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே கடல் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும். நட்பு நாடான இலங்கைக்கு எப்போதும் ஆதரவு அளிப்போம். இரு நாடுகளும் இணைந்து செயல்பட்டால் நாம் நிர்ணயித்துள்ள இலக்கை விரைவாக எட்ட முடியும்."

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சிறிசேனாவும், பிரதமர் மோடியும் முக்கிய பேச்சுவார்த்தை ஒன்றையும் நடத்தினர். இதில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் பங்கேற்றார். இந்தப் பேச்சுவார்த்தையின் இறுதியில் இரு நாடுகளிடையே 4 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அதன்படி இரு நாட்டு அதிகாரிகள் விசா இன்றி பயணம் செய்வது, சுங்க நடவடிக்கைகளில் பரஸ்பரம் உதவி, இலங்கை இளைஞர் மேம்பாட்டு திட்டம், ருகுணு பல்கலைக் கழகத்தில் ரவீந்திரநாத் தாகூர் மன்றம் அமைப்பது ஆகிய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.


Computek College
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

Enroll in a Diploma Course and receive a




(Offer valid until March 31st- Some conditions apply)


Markham Campus Students receiving Free Laptops


Scarborough Campus Students receiving Free Laptops


Toronto Campus Students receiving Free Laptops

CCNA
Saturday March 21st

CompTIA A+
Tuesday March 24th

Food Handler Exam
Saturday March 28th

Computer Repair & Assembly for Highschool Students
March 25th

Call NOW to Register! 416.321.9911

DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Network Engineering | 35 wks |
| Personal Support Worker | 32 wks |
| Medical Office Admin | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES* (WEEKEND / EVENING)

Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

* These programs do not require approval under the Private Career Colleges Act, 2005

WWW.COMPUTEK.EDU

Financial assistance may be available for those who qualify

Toronto Campus
301-2347, Kennedy Rd.
(Kennedy/Sheppard)
416-321-9911

Markham Campus
202 - 7 Eastvale Drive.
(Markham / Steeles)
905-471-3344

Scarborough Campus
248-2380 Eglinton Ave E
Kennedy/Eglinton)
416-285-9941

# 2015 உலகக் கிண்ணத்தில் வியப்பூட்டும் சங்கக்காராவின் சாதனைகள்!

## விளையாட்டுத் தகவல்கள் 362

2015 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் நட்சத்திர வீரர் சங்கக்காராவின் ஆட்டம் வியப்பூட்டும் வகையில் இருக்கிறது. ஸ்கொட்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் சங்கக்காரா 124 ஓட்டங்கள் குவித்தார். ஏற்கனவே அவர் தனது முந்தைய மூன்று லீக் ஆட்டங்களிலும் சதம் விளாசியிருந்தார். இதன் மூலம் 44 ஆண்டு கால ஒரு நாள் கிரிக்கெட் போட்டி வரலாற்றில், தொடர்ச்சியாக 4 ஆட்டங்களில் சதத்தை ருசித்த முதல் வீரர் என்ற அபூர்வ சாதனையை நிகழ்த்தியுள்ளார். இதற்கு முன்பு பாகிஸ்தானின் ஜாகீர் அப்பாஸ் (1982-1983) மற்றும் சயீத் அன்வர் (1993), தென் ஆபிரிக்காவின் கிப்ஸ் (2002), டி வில்லியர்ஸ் (2010) மற்றும் குயின்டான் டி காக் (2013), நியூசிலாந்தின் ரொஸ் ரெய்லர் (2014) ஆகியோர் தொடர்ச்சியாக 3 சதங்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. நீண்ட காலமாக நீடித்த இந்த சாதனைக்கு சங்கக்காரா முடிவு கட்டினார்.

சங்கக்காராவுக்கு இது 4ஆவது உலகக் கிண்ணமாகும். ஆனால், தனது முதல் மூன்று உலகக் கிண்ணப் போட்டிகளில் (2003, 2007, 2011) ஒரே ஒரு சதம் மட்டும் அடித்திருந்த சங்கக்காரா, இந்த உலகக் கிண்ணத்தில் 4 சதங்களை எடுத்து பிரமாதப்படுத்தி இருப்பதுடன், உலகக் கிண்ணத்தில் தனது சதங்களின் எண்ணிக்கையை 5ஆகவும் உயர்த்தியுள்ளார். மேலும், அவர் ஒரு உலகக் கிண்ணத் தொடரில் அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற சிறப்புக்கும் சொந்தக்காரர் ஆனார். இதற்கு முன்பு அவுஸ்திரேலியாவின் மார்க் வோ (1996 உலகக் கிண்ணம்), இந்தியாவின் சவுரவ் கங்குலி (2003), அவுஸ்திரேலியாவின் மெத்யூ ஹேடன் (2007) ஆகியோர் ஓர் உலகக் கிண்ணத்தில் 3 சதங்கள் அடித்ததே இந்த வகையில் அதிகபட்சமாக இருந்தது. உலகக் கிண்ணத்தில் ஒட்டு மொத்தமாக அதிக சதங்கள் அடித்தவர்களின் பட்டியலில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கருக்கு (6 சதம்) அடுத்த இடத்தில் உள்ள அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் உள்ளார். விக்கெட் கீப்பிங் பணியிலும் சங்கக்காரா புதிய சாதனை படைத்துள்ளார். ஸ்கொட்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் அவர் 2 வீரர்களைப் பிடியெடுப்பு முறையில் ஆட்டமிழக்க செய்தார்.

இதையும் சேர்த்து 36 ஆட்டங்களில் 54 பேரை ஆட்டமிழக்கச் செய்திருக்கும் (41 பிடியெடுப்பு மற்றும் 13 ஸ்டம்பிங்) சங்கக்காரா உலகக் கிண்ண அரங்கில் அதிக வீரர்களை அவுட் ஆக்கிய விக்கெட் கீப்பர் என்ற பெருமையை பெற்றுள்ளார். இதுவரை இந்த சாதனை வரிசையில் முதலிடம் வகித்த அவுஸ்திரேலிய முன்னாள் விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்ட் (31 ஆட்டத்தில் 52 பேர் ஆட்டம் இழப்பு) பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளார்.



### காலிறுதியில் கலக்கலாக நுழைந்த ஆசிய அணிகள்

உலகக் கிண்ணத் தொடரில் காலிறுதியில் நான்கு ஆசிய அணிகள் அசத்தலாக நுழைந்துள்ளன. அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் உலகக்கிண்ணத் தொடர் பரபரப்பாக நடந்து வருகிறது. இதில் விளையாடி வரும் 14 அணிகளும் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் ஏழு அணிகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தனது பிரிவில் உள்ள மற்றொரு அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். அதன்படி ஏறத்தாழ அனைத்து அணிகளும் 5 போட்டிகளில் விளையாடி உள்ளன. இதன் அடிப்படையில் ஆசியாவைச் சேர்ந்த இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து மண்ணில் ஆசிய அணிகள் சிறப்பாக விளையாடியது கிடையாது. இதனால் ஆசிய அணிகள் இறுதிப் போட்டி வரை முன்னேறும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

### ஜோன்சனை கலங்கடித்த டில்ஷான்.. ஒரு ஓவரில் 6 பவுண்டரிகளை விளாசினார்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி அதிரடியான ஆட்டத்தை தொடங்கியது. உலகக் கிண்ண லீக் போட்டியில் 32ஆவது ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவும், இலங்கையும் விளையாடின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 376 ஓட்டங்களைக் குவித்தது. இதனால் இலங்கை அணி கடினமான இலக்கை நோக்கி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய திரிமான்னே 2ஆவது ஓவரில் ஆட்டமிழக்க, சங்ககாராவும், டில்ஷானும் அதிரடியைத் தொடர்ந்தனர். இலங்கை இன்னிங்சில் 6ஆவது ஓவரை மிட்சல் ஜான்சன் வீசினார். அப்போது அவர் வீசிய ஓவரில் 6 பந்துகளையும் தொடர்ந்து பவுண்டரிக்கு டில்ஷான் விரட்டினார். தொடர்ந்து அடுத்த ஓவரிலும் தான் சந்தித்த முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டினார். அதிரடியை தொடர்ந்த டில்ஷான் 62 ஓட்டங்கள் குவித்த நிலையில் ஆட்டமிழந்தார்.

### இந்தியாவின் உலகக் கிண்ண சாதனையை தகர்த்தது அவுஸ்திரேலியா

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான உலகக் கிண்ண லீக் போட்டியில் 417 ஓட்டங்களை குவித்து அவுஸ்திரேலியா புதிய சாதனை படைத்துள்ளது. அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில், உலகக் கிண்ணத் தொடருக்கான 'ஏ' பிரிவு லீக் போட்டியில், அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான் அணிகள் விளையாடின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு டேவிட் வோர்னர் சதம் அடித்துக் கொடுக்க, அந்த அணி 50 ஓவரில் 417 ஓட்டங்கள் குவித்தது. இதன் மூலம் உலகக் கிண்ண வரலாற்றில், ஒரு இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் எடுத்த அணிகள் பட்டியலில் இந்தியாவை (413 ஓட்டங்கள், எதிர் பெர்முடா, 2007) பின்னுக்குத் தள்ளி அவுஸ்திரேலியா முதலிடம் பிடித்து உலக சாதனை படைத்தது.

### உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியின் சாதனைகள்

நடப்பு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஆதிக்கம் செலுத்தி வரும் இலங்கை அணி எதிரணிகளை அசர வைக்கிறது.

**ஹாட்ரிக் வெற்றி:** உலகக் கிண்ணத் தொடரின் தொடக்க ஆட்டத்தில் நியூசிலாந்திடம் தோல்வி அடைந்த இலங்கை அணி, ஆப்கானிஸ்தான், வங்கதேச அணிகளை வீழ்த்தி எழுச்சி கண்டது. இதைத் தொடர்ந்து இங்கிலாந்தை தோற்கடித்த இலங்கை அணி, தொடர்ந்து மூன்றாவது வெற்றியை பதிவு செய்து, காலிறுதிக்கான வாய்ப்பை அதிகப்படுத்திக் கொண்டது.

**அதிவேக சதம்:** துடுப்பாட்டத்தில் அசத்திய இலங்கையின் சங்கக்காரா, 70 பந்தில் சதத்தை எட்டினார். இதன் மூலம் உலகக் கிண்ண அரங்கில், குறைந்த பந்தில் சதம் அடித்த வீரர்கள் பட்டியலில், 5ஆவது இடத்தைப் பிடித்தார். இதை இவர் அயர்லாந்தின் பால் ஸ்டிர்லிங்குடன் (70 பந்து, எதிர் நெதர்லாந்து, 2011) பகிர்ந்து கொண்டார். முதலிடத்தில் அயர்லாந்தின் கெவின் ஓ பிரையன் (50 பந்து, எதிர் இங்கிலாந்து, 2011) உள்ளார்.

இலங்கையின் திரிமான்னே, சங்கக்காரா ஜோடி 2ஆவது விக்கெட்டுக்கு 212 ஓட்டங்கள் சேர்த்தது. இதன் மூலம் உலகக் கிண்ண அரங்கில், அதிக ஓட்டங்கள் சேர்த்த இலங்கை ஜோடிகள் வரிசையில் 3ஆவது இடம்பிடித்தது. முதலிரண்டு இடங்களில் டில்ஷான், உபுல் தரங்கா ஜோடி (282 ஓட்டங்கள், எதிர் ஸிம்பாப்வே, 2011, 231 ஓட்டங்கள், எதிர் இங்கிலாந்து, 2011) உள்ளது.

**இளமையில் சதம்:** இங்கிலாந்துக்கு எதிராக அபாரமாக ஆடிய இலங்கையின் திரிமான்னே, 139 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் உலகக் கிண்ண அரங்கில், குறைந்த வயதில் (25 ஆண்டு, 174 நாட்கள்) சதமடித்த இலங்கை வீரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்தார். இதற்கு முன், 2011இல் ஸிம்பாப்வே அணிக்கு எதிராக சதமடித்த உபுல் தரங்கா (26 ஆண்டு, 36 நாட்கள்) இம்மைல்கல்லை எட்டினார்.

**இமாலய இலக்கு:** இங்கிலாந்து அணி நிர்ணயித்த 310 ஓட்டங்களை விரட்டிய இலங்கை அணி, ஒரு நாள் அரங்கில் 8ஆவது முறையாக 300 அல்லது அதற்கு மேற்பட்ட ஓட்டங்களை வெற்றிகரமாக விரட்டியுள்ளது. இதன் மூலம் அதிக முறை இந்த இலக்கை எட்டிய அணிகளுக்கான பட்டியலில் 2ஆவது இடம்பிடித்தது. இந்திய அணி, அதிகபட்சமாக 15 முறை இம்மைல்கல்லை எட்டியுள்ளது.



**எஸ். கணேஷ்**


Sale Of Business With Property
Fast Food / Take Out



MARKHAM & NASHDENE RD.
Excellent opportunity to own your business. Catering & Fast food Restaurant. Cater to all kinds of evens & size. Lots of parking, Convenient location, with great access to Highways & Major Routes with front View.
Asking Price $324,900



Rajkumar Rasiah
(Sales Representative)
HomeLife / Future Realty Inc. Brokerage•
Cell: 416.707.1674
Office: 905.201.9977
•Independently Owned & Operared

# அன்புடைமை - 14

சிவப்பிரகாச சுவாமிகள் எழுதிய நன்னெறி என்ற நீதி நூலில் நாற்பது பாடல்கள் உள்ளன.

'இல்லானுக்கு அன்பு இங்கு இடம் பொருள் ஏவல்மற்று
எல்லாம் இருந்து அவற்கு என் செய்யும் நல்லாய்
மொழியிலார்க்கு ஏதுமுது நூல் தெரியும்
விழியிலார்க்கு ஏது விளக்கு'




என்று வரும் நன்னெறி நூலின் பதினைந்தாவது செய்யுளுடன் இன்றைய கட்டுரையை ஆரம்பிப்போம். இந்தச் செய்யுளிலும் இல்லானுக்கு அன்புடைமையின் அவசியம் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அண்மையில் யுரியூப் இல் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட 27 வயதுடைய ஒருவரின் நேர்முகக் காணொளியைப் பார்த்தேன். அவர் தனது 7 மாதக் குழந்தையின் புன்னகையை ரசிப்பதிலும், அக்குழந்தையைப் பார்த்தவாறு தானும் அதிகம் புன்னகை செய்து அதிக நேரத்தைச் செலவழித்து வருவதாகவும் அந்தக் காணொளியில் குறிப்பிட்டுள்ளார். புன்னகை தனது நோயின் வலியைக் குறைக்க மிகவும் உதவுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். புன்னகையால் வரும் பலவிதமான நன்மைகளைப் பற்றி மிகவும் விரிவாக நான் இந்தக் கட்டுரையில் ஆராய்ந்து இருக்கின்றேன். நாளொன்றுக்கு அதிக தடவைகள் புன்னகை செய்து மகிழ்ச்சியாக இருப்பதற்குப் பழக்கப்படுத்திக் கொள்வோம். காலையில் புன்னகை செய்தவாறு, இன்றைய நாள் இனிதே அமைய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்தவாறு படுக்கையில் இருந்து எழும்புவோம். மூச்சுப் பயிற்சி செய்யும் பொழுதும், தியானம் செய்யும் பொழுதும், உடற்பயிற்சி செய்யும் பொழுதும் புன்னகை ஏந்தியவாறு நமது பயற்சிகளைச் செய்திடுவோம். நமது புன்னகை செய்யும் விதத்தை மாற்ற விரும்பினால் நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு கண்ணாடியின் முன்நின்று புன்னகைப் பயிற்சிகளைச் செய்து கொள்வோம். மேடைகளில் பாடுபவர்கள், உரையாற்றுபவர்கள் போன்றவர்களும் புன்னகையுடன் தமது நிகழ்ச்சிகளைச் செய்தால் பார்வையாளர்களை மகிழ்ச்சிப்படுத்தலாம். பொதுமக்கள் தொடர்புள்ள பணிகளைச் செய்பவர்கள் தமது பணிகளைச் செய்யும் பொழுது புன்னகையுடன் பணியாற்றுவது மிகவும் முக்கியமானது. வேலைத்தளங்களில் புன்னகையைத் தாராளமாகப் பரிமாறிக்கொள்வதன் மூலம் நல்ல தொடர்பாடலைப் பேணி வரலாம் என்பது எனது கருத்து. உயர் பதவிகளில் இருப்பவர்கள் தமக்குக் கீழ் பணி செய்பவர்களுடன் உரையாடும் பொழுது புன்னகை செய்து உரையாடினால் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியையும், நிம்மதியையும் கொடுக்கும். குடும்பத்தின் உறவில் புன்னகை பெரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம். குடும்பச் சச்சரவுகள் நிறைந்த இந்தக் காலத்தில் புன்னகை அவற்றிற்கு ஒரு தீர்வாகவும் அமையலாம். நாங்கள் அன்புடைமை கொண்டு வாழ்வதற்குப் புன்னகை தாங்கி வாழுதல் மிகவும் உகந்த வழிமுறை என்பதில் எந்த ஐயமுமில்லை என்று உறுதியாகக் கூறுவதற்குப் போதிய ஆதாரங்களை இந்தத் தொடர்கட்டுரையில் ஆராய்ந்திருக்கின்றோம். குழந்தைப் பருவத்தில் அதிக புன்னகையுடன் காணப்படுவது இயல்பு. இந்தப் புன்னகை தொடர்ந்தும் அவர்கள் முகத்தில் நிலைத்திடப் பெற்றோர்கள் மிகவும் கவனம் எடுக்க வேண்டும். அவர்கள் அன்புடைமை கொண்டவர்களாக வாழ்வதற்கும் பெற்றோர்கள் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்.

அகப் புன்னகை (Inner smile) என்று ஒரு தியான முறையும் உண்டு. இந்த முறைத் தியானம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அகப்புன்னகையும், மூச்சுப் பயிற்சியும் சேர்ந்த இந்தத் தியானத்தால் அகமகிழ்ச்சி, அமைதி போன்றவை ஏற்படும் எனக் கூறப்படுகின்றது. அகப்புன்னகை என்ற தியான முறை மிகவும் சக்தி வாய்ந்த சுய சிகிச்சைமுறையாகக் (Self Healing) கருதப்படுகின்றது. நமக்குள்ளே, அல்லது பிறர் ஒருவருக்கு புன்னகை மூலம் அன்புச்சக்தியை (Loving Energy) அனுப்பலாம். இந்த அன்புச்சக்தி சிகிச்சை முறைக்கான சக்தியை எடுத்துச் செல்லும். அகப்புன்னகை என்ற தியானத்தை எவ்வாறு செய்யலாம் என்று இப்பொழுது கவனிப்போம். இந்தத் தியானம் கண்களில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். கண்களை மூடிக்கொண்டு கண்களுக்குள் புன்னகை செய்யவேண்டும். ஓய்வெடுத்துக் கொண்டு கண்களுக்கூடாக ஆழமான பிரகாசமான புன்னகையை உணரலாம். இவ்வாறு கண்களுக்கு ஓய்வு அளிக்கும்பொழுது நமது நரம்புத்தொகுதி முழுவதையும் அமைதிப்படுத்திக் கொள்ளலாம். நமது தாடைப்புகுதி அழுத்தத்தைச் சேமிக்கும் பகுதியாகும். இந்த அழுத்தத்தைக் குறைப்பதற்கு தாடைப்பகுதியை நோக்கி நமது புன்னகையை நகர்த்த வேண்டும். நமது நாக்கு வாயின் மேற்புறத்தை தொடும்படியாக வைத்துக் கொள்ள வேண்டும். நமது அழுத்தத்தைச் சேகரித்துக் கொள்ளும் இன்னுமொரு பகுதி கழுத்து. நமது நற்சுகத்திற்கு வேண்டிய இரத்தக் கலன்களும், நரம்புகளும் கழுத்தில் உள்ளன. கழுத்து நமது உடம்பிற்கும், மூளைக்கும் இடையில் உள்ள பாலமாகும். நமது புன்னகையினை கழுத்துப் பகுதிக்கும், தொண்டைப் பகுதிக்கும் நகர்த்தி அழுத்தம் உருவாக்கப்படுவதை உணர்ந்து கொள்ள வேண்டும். இப்பொழுது அகப்புன்னகையை இதயத்திற்கு நகர்த்த வேண்டும். இதயத்தை அன்பினால் நிரப்ப வேண்டும். பின்பு அகப்புன்னகையை நுரையீரல் பகுதிக்கு நகர்த்த வேண்டும். இதையடுத்து அகப்புன்னகையை வயிற்றுப் பகுதிக்கும், சிறுநீரகப் பகுதிக்கும் நகர்த்த வேண்டும். இறுதியாக பிரத்தியேக உறுப்புப் பகுதிக்கும் இந்த உணர்வைச் செலுத்த வேண்டும். இப்பொழுது உங்கள் கவனத்தைக் கண்பகுதிக்கு மீண்டும் செலுத்த வேண்டும். அகப்புன்னகைப் பயிற்சி பற்றிய விபரத்தை மிகவும் சுருக்கமாக இங்கே குறிப்பிட்டிருந்தேன். இந்தத் தியான முறையை முழுமையாக அறிந்து பயிற்சி செய்வதே பொருத்தமானது. புன்னகை, அகப்புன்னகை இரண்டும் நாள்தோறும் பயிற்சி செய்து இவற்றினால் ஏற்படும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். வெளித்தோற்றத்தில் நாம் வழங்கும் புன்னகையுடன் எமது அகத்திலும் புன்னகை செய்து வாழுதல் நம்மை மிகவும் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லும். இதனால் அன்புடைமை என்ற சொத்தையும் வளம்படுத்திக் கொள்ளலாம்.



அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# வீடுகள் வாங்க விற்க......

## JUST LISTED IN AJAX













**SALEM & KINGSTON**
Bedrooms:4
Washrooms:3

People Who Are Selling & Buying House From Me,
***MY LISTING COMMISION IS FREE!!!!!!!!***

**My Listing Commision For Sellers $3500 + HST**




This Offer Valied Until 30th June 2015 Only

Friendly services, Free Evolution, Free marketing, and Ect. services





FOR ONLY HOME BUYERS FREE TICKETS TO SRILANKA OR CUBA FOR MORE DETAIL CALL ME!
HONEST AND TRUST

நாளை என்பது கனவு. இன்று என்பது நிஜம்!!!!!.
நீங்களும் முதலீட்டாளர்கள் ஆகி மிகவும் குறுகிய காலத்தில் மிக அதிக லாபத்தை அடைய விரும்புகிறீர்களா? அழையுங்கள். என்னை. இலவச அதி சிறந்த ஆலோசனைகளுடனும் சகல ஏற்பாடுகளையும் மிகவும் நுண்ணியமாகவும், துல்லியமாகவும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.



**Lourdson Antonipillai**
Sales Representative
**Dir: 416.738.8824**
E-mail - lourdson29@hotmail.com
**HomeLife / Future Realty Inc., Brokerage***
205 - 7 Eastvale Dr. Markham. ON L3S 4N8
Bus:905.201.9977
Fax: 905.201.9229

HOMELIFE HIGHER STANDARDS

* Independently Owned & Operated

## அந்நிய நாட்டில் உள்ள காப்புறுதிக் கம்பனியில் கனடாவிலிருந்து உயிரிழப்பு நட்டஈடு கோரல்?
## Foreign Company Death Claim

## அந்நிய நாட்டில் உயிரிழப்பு நடந்தால் கனடாவிலுள்ள காப்புறுதி கம்பனியில் உயிரிழப்பு நட்டஈடு கோரல்?
## Out of Country Death Claim

# கனடிய தகவல் தொடர் 230

தொலைபேசியில் அழைத்துப் பேசிய முகம் தெரியாத 'விளம்பரம்' பத்திரிகையின் அந்த வாசகனை நினைவுகளில் மீட்டுப் பார்க்கிறேன்.

அவருடன் பேசிய கதைகளை மட்டும் இன்றும் என் நினைவுகளினால் மீட்கக் கூடியதாக உள்ளது. தொலைபேசி உரையாடலைச் சம்பிரதாயமாக முடிக்கும் போது, 'ஆண்டவன் தங்களை ஆசீர்வதிப்பாராக' (God bless you) என்று நன்றியுடன் ஆங்கில வார்த்தையில் குறிப்பிட்டு தொலைபேசியினை வைக்கும் அவரது சுபாவம், அந்த ஆண்டவனே நேரே வந்து ஆசீர்வதித்தது போன்று இருந்தது.

முதல் நாள், முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்ட பின் பல விடயங்கள் பற்றி உரையாடியவர் மறு நாளும் அவராகவே அழைத்து இடையில் விட்ட உரையாடலைத் தொடர்ந்தார். அவரது உரையாடல் ஆரோக்கியமாகவே தொடர்ந்தது. மூன்றாம் நாளும் எனது ஓய்வான நேரத்தில் அவரோடு முடிக்க வேண்டிய உரையாடலைத் தொடர்வோம் என அழைத்தார்.

ஒரு நாள் 'அவர் திடீர் என மரணித்து விட்டார்' என்ற செய்தி அவரது வீட்டிலிருந்து எனக்கு கிடைத்தது. முகம் தெரியாத அந்த மனிதனின் தொலைபேசி உரையாடலை ஒரு கணம் மீட்டுப் பார்த்தேன்.

"சில வருடங்களுக்கு முன் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் தொழில் செய்த காலத்தில் ஒரு 'லைவ் இன்சூரன்ஸை' அந்த நாட்டில் உள்ள ஒரு கம்பனியில் பெரிய தொகைக்கு செய்து வைத்திருந்தனான்"

"அது இப்போதும் ரத்துச் செய்யப்படாமல் வலிமையாக இருக்கிறதா?"என்று நான் கேட்கிறேன்.

"ஏதாவது காரணத்தினால் உடல் இயங்க முடியாத நிலைமை உருவாகினால் (dis-ability) தொடர்ந்து மாதக் கட்டுப்பணம் செலுத்த தேவையில்லை என்ற விடயமும் (waiver of disability) ஒப்பந்தத்தில் சேர்த்து வைத்திருந்தபடியால், அந்த நிலைமை வந்து அதனைப் பிரகடனப்படுத்தி இனிவரும் காலத்தில் பணத்தை செலுத்த தேவையில்லை என்ற நிலைமையும் உறுதிபடுத்தியாச்சு. இப்பவும் ஒப்பந்தம் ரத்து செய்யப்படாமல் வலிமையாக இருக்கிறது" என அவர் கூறி முடித்தார்.

"நீங்கள் இப்போது வாழும் முகவரி கனடாவில் என்பது அந்த 'லைவ் இன்சூரன்ஸ் கம்பனி'யின் பதிவில் இருக்கிறதா?" என நான் கேட்டேன்.




"இருக்கிறது. நான் இங்கேயிருந்து அந்த 'லைவ் இன்சூரன்ஸ்' தொடர்பாய் ஏதாவது கேள்வி கேட்டு கடிதம் எழுதினால் மத்திய கிழக்கு நாட்டிலுள்ள அந்தக் காப்புறுதிக் 'கம்பனி'யில் இருந்து கனடாவில் இருக்கும் எனது முகவரிக்கு பதில் வரும். எல்லாம் என்னுடைய பைக்குள் இருக்கிறது".

"என்ன? எனக்கு ஒரேயொரு மகன் தான் இருக்கிறான். தற்செயலாக நான் செத்தால் ஒரு விசயத்தினை ஓடியாடி முடிப்பான் என்று சொல்ல ஏலாது. மனிசியும் உடம்பு ஏலாமல் சக்கர நாற்காலியோடை வாழ்க்கை. அந்த 'இன்சூரன்ஸ்' காசை எடுத்து கொடுக்கிற உதவியை மகனுக்கு நீங்கதான் ஒருக்கா செய்யவேணும்." இதனை ஒரு தயவான உதவியாக கேட்டிருந்தார்.

"கனடாவிலை தான் எங்களின்ரை தொழில் 'லைசென்ஸ்'. கனடாவிலுள்ள 'இன்சூரன்ஸ் கம்பனி'களோடைதான் நம்ம தொழில் அனுபவங்கள்! ஏனைய நாடுகளோடு உள்ள கம்பனிகளைக் கையாள்வது என்பது இனிமேல்தான் எப்படியிருக்கும் என்று பார்க்க வேணும். ஏதோ நானும் அந்த நேரம் உயிரோடை இருந்தால் பார்ப்போம்" என்று இலகுவாகப் பதிலை முடித்துவிட்டேன்.

ஆனால், இன்று அந்த மனிதன் மரணித்துவிட்டார் என்ற செய்தியினைக் கேட்டதும், அடுத்து ஏதோ வழியில் அவர் கோரிய அந்த வேண்டுகோளை நான் செய்யவேண்டும் என்ற ஓர் உந்துதல் என்னுள் ஏற்பட்டது.

அறிமுகம் என எவருமே தெரியாத நிலையில் அவரது மரணச்சடங்கு நடந்த மண்டபத்திற்கு போய், அன்னாரின் பூதவுடலுக்கு சில நிமிடங்கள் அஞ்சலி செலுத்திவிட்டு, தொடர்ந்து சற்றும் முற்றும் பார்க்கிறேன். துயரத்துடன் நிற்கும் ஓர் இளைஞனை பார்த்ததும், அவன்தான் அவரின் ஒரேயொரு மகன் என்பதனை புரிந்துகொள்ள எனக்கு அவகாசம் தேவைப்படவில்லை.

அந்த இளைஞனோடு எனது பேச்சினை அமைதியான குரலில் தொடங்கினேன். இரு நாட்களுக்கு முன்பு தந்தையார் என்னோடு பேசிய விடயங்களை மெதுவாக குறிப்பிட்டு, என்னைச் சந்திப்பது நல்ல முடிவு மாதிரி தெரிந்தால், மரணச் சடங்குகள் முடிந்த பின்பு என்னோடு தொடர்பு கொள்ளுமாறு குறிப்பிட்டு தமிழ் பேச சிரமப்படும் அந்த மைந்தனிடம் எனது தொலைபேசி இலக்கத்தினையும் வழங்கிவிட்டு வீடு வந்து சேர்ந்துவிட்டேன்.

அடுத்த கிழமை அந்த மைந்தனும் மரணமாகிய தந்தையாரின் ஆயுள் காப்புறுதி பத்திரங்களுடன் என்னைத் தேடி வந்து சந்தித்தான். வழி எதுவென்று தெரியாத ஒரு புது முயற்சியின் ஆரம்பம் அப்போதுதான் தொடங்கியது.

சரி! இனி இந்த சம்பவத்துடன் தொடர்புபட்ட மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது தலைப்பினை அடுத்த இதழில் பார்ப்போம்.

தொடரும்...



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999






MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

G8-400

The Most Intelligent & Engineering Math Program

Prepared from Gr-8

Target: Bring the students math level to be the top in Ontario

It's beyond IB, Enrich, Top and other very common gifted programs.

Very limited students only

This program is based on the experience of teaching math for more than 23 years.

We want to create intelligent math students.

Starts May 2nd 2015

8ம் வகுப்பிலிருந்து ஆரம்பிக்கும் பிரமாண்ட கணித பாடத்திட்டம்

INFO: 416-666-5515


# உலகமயமாதலும் சினிமாவும்

## சந்தைப்படுத்தல்

ரொரண்ரோவில் உள்ள சீனரின் கடையில் இதயம் நல்லெண்ணெயை வாங்கக் கூடியதாகவுள்ளது. மசாலத் தோசை சாப்பிட விரும்பின் நியு யோர்சியில் பல நல்ல கடைகள் உள்ளன. சமோசாவை வட அமெரிக்காவில் சகல கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். அது மட்டுமல்ல பல வகை சமோசாக்களையும் பெறலாம். என்னுடன் வேலை செய்யும் சக இத்தாலிய பெண் யோகா ஆசிரியை. யோகாவின் மகிமையை விளக்கி எனக்கே பாடம் நடத்துகின்றார். ரொரண்ரோ ஹாபர் புரண்ட்டில் நடைபெறும் திருச்சி சங்கரனின் கச்சேரியை கேட்கும் பார்வையாளர்களில் பெரும்பாலோனோர் தெற்காசியர் அல்லாதோராக உள்ளனர்.
உலகமயமாதலின் வளர்ச்சி எங்கும் எதனையும் பெற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளிவிட்டது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என கணியன் பூங்குன்றனார் பாடியதை இன்று புலம் பெயர்வுகள் நிரூபிக்கின்றன. இந்திய தொலைக்காட்சி நிறுவனங்கள் புலம் பெயர் இந்தியர்களையும், தெற்காசியர்களையும் குறிவைக்கின்றது. புலம் பெயர் மேற்கத்திய நாடுகளின் பணத்தின் பெறுமதியின் வலிமை அதிகமானது. குறைந்த நுகர்வு கூட இவர்களுக்கு அதிக வருமானத்தை பெற்றுக்கொடுக்கும். இந்தியத் திரைப்பட விருது விழாக்கள் மலேசியாவிலும், லண்டனிலும், லொஸ் ஏஞ்சலிலும், ரொரண்ரோவிலும் நடத்தப்படுகின்றன. இந்தியாவில் ஒரு வாரத்துக்கு குறைவாகவே ஓடிய ரெரறிஸ்ட் திரைப்படம் சர்வதேச திரைப்பட விழாக்கள் மூலமே சர்வதேச விநியோகிஸ்தரைப் பெற்றது. இதன் தயாரிப்புக்கான செலவை விட பல மடங்கு வருமானத்தைப் பெற்றது. 2015ம் ஆண்டு Sundance திரைப்படவிழாவில் தேர்ந்தெடுக் கப்பட்ட ஐந்து குறுந்திரைப்படங்களில் ஒன்றான 175 கிராம் குறும்படம் பத்தாயிரம் அமெரிக்க டொலர்களை பரிசாகப் பெற்றுள்ளது.

இந்திய திரை மற்றும் பார்வை ஊடகம் வளர்முக நாடுகள் மூலம் அதிக வருமானத்தை குவிக்க, மறுபுறம் கலை யினூடான ஊடுருவல்களும் நடைபெறுகின் றன. ஆப்கானிஸ்தானில் 2008ல் அமெரிக்கா பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தபோது அப்போதைய ஊடக மற்றும் கலாசார அமைச்சு ஐந்து இந்திய தொலைக்காட்சித் தொடர்களை தடைசெய்தது. Kyunki Saas Bhi Kabhi Bahu Thi (English: Because a mother-in-law was once a daughter-in-law) (அத்தையால் அல்லது மாமியாரினால்) உட்பட்ட ஐந்து தொடர்களே தடை செய்யப்பட்டன. இத்தொடர்கள் இஸ்லாமிய கலாசாரத்தையும் மதத்தையும் பாதிப்படை யச் செய்யும் என குற்றஞ்சாட்டப்பட்டது. லெஸ்லி யுட்வினின் பாலியல் வல்லுறவு சம்பந்தப்பட்ட இந்தியாவின் மகள் என்ற விவரணத்திரைப்படம் பற்றி சி.பி.சி வானொ லியில் கலந்துரையாடப்படுகின்றது. கருத்துரையாளர்களில் ஒருவர் மும்பையிலும், மற்றவர் லண்டனிலுமிருந்து கருத்துக்களைக் கூறுகின்றனர். புதிய தொழில்நுட்ப வளர்ச்சி ஊடகப் போக்கை மாற்றி விடுகின்றது. தடைசெய்யப்பட்ட இப்படம் யுரியுப்பின் ஊடாக உலகின் பார்வையாளர்களைச் சென்றடைகின்றது. தடைசெய்யப்பட்ட பிரதேசத்தில் உள்ள மக்களுக்கும் ஏதாவது ஒரு வடிவத்தில் சென்றடைய சந்தர்ப்பங்கள் உண்டு. ஈரானில்




- ரதன் -

கலாசார மாற்றங்கள் சமூக வலைத் தளங்களின் ஊடாகவும் சற்றலைட் தொலைக் காட்சியினூடாகவும் நடைபெறு கின்றன. இவற்றில் பல சட்டத்துக்கு புறம்பானவை. இவற்றை கட்டுப்படுத்துவதில் உள்ள சிரமங்கள் இவ் ஊடகங்கள் உலகின் மூலை முடுக்குகளை சென்றடையச் செய்கின்றது. தொழில்நுட்ப மாற்றம் திரைப்படங்களையும் அதன் விநியோகஸ்த் தையும் பாதித்துள்ளது. இதனை எவ்வாறு எதிர்கொள்கின்றார்கள்? இதனால் இலாபம-டைவர்கள் யார்? உலக மயமாதலுக்கு தொழில்நுட்ப வளர்ச்சி உதவி புரிந்துள்ளதா?

முதன் முதலில் பிரெஞ்சு திரைப்படத் தயாரிப்பாளர்கள் தங்களது அலுவலகங் களை அமெரிக்காவில் திறந்தார்கள். 1903ல் இது நடைபெற்றது. George Melies தனது சகோதரன் ஹஸ்ரனை நியு யோர்க்கிற்கு அனுப்பினார். 1905ல் Charles Pathe க்கும் அமெரிக்காவில் அலுவலகம் இருந்தது. முதலாம் உலகப்போரின் பின்னர் ஐரோப்பிய திரைப்படச் சந்தை சரிவைச் சந்தித்தது. 1920களில் ஐரோப்பிய சந்தையில் ஹொலிவூட் படங்களின் நுகர்வு மிக அதிகமாகவே இருந்தது. இங்கிலாந்தில் 90 வீதமாகவும், பிரான்ஸ், இத்தாலியில் 80 வீதமாகவும் இருந்தது. இடதுசாரி சார்பு அரசுகள் கோட்டா முறையைக்கூட திரைப்பட இறக்குமதி மீது ஏற்படுத்தியது. இலங்கையில் 70களில் ஸ்ரீமாவோ பண்டாரந-ாயக்க பிரதமராக இருந்த பொழுது திரைப்பட இறக்குமதி மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இது உள்ளூர் உற்பத்தியை அதிகரித்தது. சிங்கள திரைப்படங்கள் சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்கு இக்கால கட்ட மாற்றமே முக்கிய காரணியாகும். அப்போதைய இலங்கை அரசு ஓர் இடதுசாரி கூட்டணியாகும். உலகப் போர்களின் பின்னர் பிரெஞ்சு நியுவேவ், இத்தாலியின் நவ யதார்தவாத திரைப்படங்கள் உருவாகிய பின்னரும் ஹொலிவூட்டின் ஆட்சி ஐரோப்பா வில் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

# பிரதமர் மோடி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திப்பு

இந்தியப் பிரதமர் மோடியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துப் பேசினர். இணைந்த வட, கிழக்கு தமிழரின் தாயகம். இணைந்த வடக்கு கிழக்கிலேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இந்திய - இலங்கை ஒப்பந்தமும் இதனையே வலியுறுத்துகிறது என பிரதமர் மோடிக்கு கூட்டமைப்பினர் எடுத்துக் கூறினர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஏற்படுகின்ற போது வட, கிழக்கு இணைப்பு என்பது ஒரு முக்கிய விடயம். வட, கிழக்கு இணைப்பு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது. எனினும் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அந்த ஒப்பந்தம் இல்லாமல் செய்யப்பட்டது. தவிர வட, கிழக்கு என்பது தமிழ் மக்களுடைய வரலாற்றுபூர்வமான தாயகப் பிரதேசம். ஆகவே இனப்பிரச்சினை தீர்வுக்கு வட, கிழக்கு இணைப்பு என்பது முக்கியம். சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக குடியேற்றப்பட வேண்டும். ஆனால் சொற்ப அளவிலேயே மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். மிகுதி எப்போது நடக்கும் என்பது தெரியாது. இந்த விடயங்களையே இந்தியப் பிரதமருக்கு எடுத்துக் கூறினர்.

அரசாங்கங்களேடு அணுகியதைப் போல இந்த அரசாங்கத்தோடு அணுகக்கூடாது. பல மாற்றமான கருத்துக்களை இந்த அரசாங்கம் கொண்டிருக்கிறது. ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது மூலோபாயங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இந்தியா எப்பொழுதும் உதவியாக இருக்கும் எனக் கூறினர்.

## யாழ்ப்பாணத்தில் மோடிக்கு வித்தியாசமான உணர்வு

இலங்கை வந்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்திற்கு வந்த போது தமக்கு வித்தியாசமான உணர்வு ஏற்பட்டதாகவும், யாழ்ப்பாணம் புதிய அடையாளத்தை காட்டுவதாகவும் தெரிவித்துள்ளார். யாழ். நூலகத்தில் யாழ்ப்பாண கலாசார நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இக் கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார். இலங்கையும், இந்தியாவும் பௌதீகரீதியிலான தொடர்புகள் மட்டுமின்றி, கலாசாரரீதியான விடயங்களிலும்



இவற்றுக்குப் இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியை சந்தித்ததாக கூறினார். அவர் காணி மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் சாதகமான கருத்துக்களை கொண்டிருக்கிறார். அவர் எனக்கு உறுதியளித்ததாக நான் சொல்ல மாட்டேன். ஆனால், இவை தொடர்பில் ஜனாதிபதி ஒரு சாதகமான மனநிலையை கொண்டிருக்கிறார் என நான் உணர்கிறேன்.

இது ஒரு புதிய அரசாங்கம். ஆகவே, நீங்கள் அவர்களுக்கு கால அவகாசம் வழங்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பொறுமை தேவை. அது முன்னர் ஏனைய

ஒன்றுப்பட்டுள்ளது என்பதை எல்லோரும் அறிவார்கள். யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்திற்கான நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். யாழ்ப்பாணத்தில் நிர்மாணித்து கொடுக்கப்படும் கலாசார நிலையம் மிகவும் புராதன நுட்பம்வாய்ந்த கலாசார விடயங்களை அடையாளப்படுத்தப் போகிறது. இங்கிருந்த நூலகம் உலகத்தின் மிகப் பெரிய நூலகமாக இருந்ததுடன், அதில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இருந்தன. பின்னாளில் அது எரிக்கப்பட்டது. எனவே நாங்கள் புதிய புத்தங்களை வழங்குவோம். மிகவும் பிரசித்தமான மற்றும் முக்கியமான புத்தகங்களை வழங்குவோம். நூலகம் என்பது அனைவரையும் ஒன்றிணைக்கும் இடம். எடுத்துக்கொண்ட பணிகளை எதிர்ப்பார்ப்புக்களையும் தாண்டி செய்து முடிப்போம்.

யாழ்ப்பாணத்தில் நிர்மாணித்து கொடுக்கப்பட்ட வீட்டுத் திட்டம், வீடு இல்லாதவர்களுக்கு பாதுகாப்பாகவும் சிறப்பாகவும் அமையும். தலைமன்னார் ரயில் பாதையை திறந்து வைத்து, கலாசார நிலையத்திற்கு அடிக்கல் நாட்டியது, வீடமைப்புத் திட்டத்தை திறந்து வைப்பது என்பன திரிவேணி சங்கம் போன்றது என தான் கருதுவதாகவும் பிரதமர் மோடி கூறினார்.


# LAW OFFICE

## STEFANO FORTINI

B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com


# பிரித்தானிய மகாராணியைச் சந்தித்தார் இலங்கை அதிபர்



பிரித்தானியாவுக்கு பயணம் மேற்கொண்ட இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன, பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இலங்கை அதிபரின் பாரியாரும் இச்சந்திப்பின்போது கலந்து கொண்டுள்ளார்.


# COMMERCIAL UNITS FOR SALE

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**Pl. call: 416.315.9397**

BUY, SELL or LEASE

Dinesh Jeganathan
Sales Representative



Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

1953ம் ஆண்டின் குளிர் காலத்தின் கதிரவ வெளிச்சம் நிறைந்த ஒருநாள். கன்பாரா என்ற விமானம் வானத்தில் பறந்து கொண்டிருந்தது. சிறில் ஜோர்ஜ் ரவுன்சன் வித்தேர் எனும் விமானி, இன்னொரு விமானியுடன் கன்பராவில் பறந்து கொண்டிருந்தார். அண்மையில்தான் அவ்விமானத்திற்குப் புதிதாக வடிவமைக்கப் பட்ட ராடர் ஒன்றைப் பொருத்தியிருந்தார்கள். இந்த ராடரைச் சோதித்துப் பார்ப்பதற்கான பறத்தலையே கன்பரா நடத்திக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட 55 ஆயிரம் அடி உயரத்தில் கான்பரா பறந்து கொண்டிருக்கையில் அவர்களது விமானம் இவ்வுலகத்தில் இல்லாத இன்னொரு விமானத்தைக் கண்டது எனச் சிறில், ஜோனியிற்கும் பீற்றருக்கும் கூறினார்.

சல்ஸ்பெரி பிலென்ஸ் (Salsbury Plains) என்ற இடத்திற்கு மேலாகக் கிட்டத்தட்ட 55 ஆயிரம் அடி உயரத்தில் இவர்களது விமானம் பறந்து கொண்டு இருக்கையில் திடீரென இவர்களது விமானத்தின் ராடரில் 'பீப்' என்ற சத்தம் கேட்கத் தொடங்கியது. அது இன்னொரு விமானம் அண்மையில் வந்து கொண்டு இருக்கின்றது என்பதனைக் குறித்த எச்சரிக்கைச் சத்தமாகும். ராடரின் கணிப்புகளின்படி, அந்த விமானம் இவர்களது விமானத்தின் பின்னால் 5 மைல் தூரத்துள்ளாகப் பறந்து வந்து கொண்டிருக்க வேண்டும் என்பதனை சிறில் தெரிந்து கொண்டார். ஆனாலும் இவர்களது பார்வைக்கு அவ்விமானம் தென்படவில்லை. இவர்கள் தங்களது விமானத்தைச் சடுதியில் மேல்நோக்கிப் பறக்கவிட்டு, தங்களின் பின்னாக வந்த விமானத்தைப் பார்க்க முயற்சித்தார்கள். இப்பொழுது அவ்விமானத்தை அவர்களால் ஓரளவுக்குப் பார்க்கக் கூடியதாக இருந்தது. ஒரு ஒளிரும் கோளம் போல அது பறந்து வந்து கொண்டிருந்தது. அவ்விமானத்தின் ஒளிர்வாலோ அல்லது கதிரவ ஒளியின் தெறிப்பாலோ அப்படித் தோன்றலாம் என இவர்கள் நினைத்தார்கள்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அந்த மர்ம விமானமும் தனது பறப்பு உயரத்தை உயர்த்தி இன்னமும் இவர்களது விமானத்தைப் பின் தொடர்ந்து கொண்டே இருந்தது. சிறில் சக விமானிக்கு அப்பொருளை விலத்திப் போவோம் எனக் கூற, அவரும் விமானத்தின் பாதையை மாற்றினார். ஆனால் அந்த இன்னதென்று இனம் காண முடியாது இருந்த பறக்கும் பொருள் இவர்களது விமானத்தை விடாப் பிடியாகத் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஏன் இது எங்களைப் பின் தொடர்கிறது எனப் புரியாத இவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இருவரும் அப்பொருளில் இருந்து தப்புவதற்கு முயற்சித்த வண்ணமே இருந்தார்கள். ஒரு கட்டத்தில் இன்னதுதான் செய்கிறேன் எனப் புரியாத நிலையில், சகவி-மானி இவர்களது விமானத்தை வெகு விரைவாக U வடிவில் திருப்பிய போது, இவர்களது விமானம் அப்பொருளுக்கு நேராக, மோதுவது போன்ற நிலையில் வந்தது. எங்கே இரண்டும் மோதிவிடப் போகின்றனவோ என்ற இக்கட்டான



நிலையில் இவர்கள் இருவரும் இருந்தாலும் அந்தப் பறக்கும் பொருளை தெளிவாகப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் அப்பொழுது அவர்களுக்குக் கிடைத்தது. உலோகத் தன்மையது போன்ற உடலினை அப்பொருள் கொண்டிருந்தது. ஒரு தட்டு வடிவில் அமைந்திருந்த அந்த யூஎவ்ஓவிற்கு இறக்கைகளும் இரண்டு வால்களும் இருந்தன. கிட்டத்தட்ட Gaat போர் விமானங்களில் பருமனில் அது இருந்தது. இந்தா இரண்டும் மோதுப்படப் போகின்றன என்ற கட்டத்தில் அந்த யூஎவ்ஓ, சடுதியில் தனது பறப்பினை மேல் நோக்கிச் செங்குத்தாக உயர்த்தி 60 ஆயிரம் அடி, 70 ஆயிரம் அடி என மாற்றி விரைவிலே காணமற் போய்விட்டது. இதிலே இன்னொரு ஆச்சரியமான விடயத்தினை சிறிலும் மற்ற விமானியும் அவதானித்தார்கள். அந்த யூஎவ்ஓ தான் மேல் நோக்கிப் பறந்து மறைந்ததற்கான எந்தத் தடயத்தையும் விட்டு விடவில்லை. ஆவியான எரிபொருட் தடயங்களோ, வாயுக்களோ அல்லது வேறு பொருட்களோ அது சென்ற பாதையில் காணப்படவில்லை.

தரைக்கு வந்த சிறிலும் மற்ற விமானியும் இது தொடர்பான அறிக்கை ஒன்றினை உத்தியோக பூர்வமாக உயரதிகாரிகளுக்குக் கொடுத்தார்கள். ஆனால் அவ்வறிக்கை-யயிட்டு எவருமே அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. சிறிலின் வற்புறுத்தலினால் அவ்வறிக்கை பின்னர் வான் தரைக்கு அனுப்பப்பட்டது. அவர்களும் அது பற்றி ஒரு உருப்படியான தகவலைத் தரவில்லை. ஒருவேளை சிறிலும் சகவிமானியும் இயற்கையின் விளைவுகளைத்தான் தவறாக இனம் கண்டுவிட்டார்கள் என மழுப்பும் வகையில் கூறினார்கள். அல்லாமலும் இவ்விடயத்தையிட்டு அதிக கரிசனை எடுக்காது விட்டுவிடும்படியும் அறிவுறுத்தப் பட்டார்கள். சிறிலினால் அதனை மறக்க முடியவில்லை. ஆனாலும் வெளியில் ஒருவரிடமும் இதுபற்றி எதுவும் கூறவில்லை. ஜோனி ரண்டல் என்பவர் ஒரு பிரபலமான ஏலியன், யூஎவ்ஓ ஆய்வாளர். பீற்றர் குஜ் என்பவரும் வேற்றுக்கிரக மனிதர்கள் பற்றித் தீவிரமாக ஆய்வு செய்து வருபவர்களில் ஒருவர் பீற்றர்தான் பிரபலமான 'விசிரேசன்' என்ற ஏலியன்கள் பற்றிய நூலின் ஆசிரியர். இவர்கள் இருவருக்கும் 1986ம் ஆண்டு சிறில் ஜோர்ஜ் ரவுன்சன் வித்தேர் 33 வருடங்களுக்கு முன்னராகத் தனக்கு ஏற்பட்ட பறக்கும் தட்டுப் பற்றிய அனுபவத்தினைக் கூறியிருந்தார். நரை திரை விழுந்த, ஓய்வு பெற்ற லெவ்ரினன் கேனலான சிறில், தனது உயிருக்குப் பயந்து, 30 வருடங்களுக்கும் மேலாகத் தன்னுள் மறைத்து வைத்திருந்த அவ்விரகசி யத்தை அவ்விரு யூஎவ்ஓலோயிஸ்களுக்கும் கூறினார். தான் கூறுவதையிட்டு எவ்வித ஐயமும் இல்லாது இருந்தாலும், இவ்விபரத்தைக் கூறுகையிலும் 'இதனை நான் இப்போது வெளியில் கூறலாமோ' என்ற கிலேசம் அவருக்குள் இருந்ததாம். அவர் கூறிய விடயத்தைத்தான் இப்போது நாங்கள் பார்த்தோம்.

இவ்விதம் எண்ணற்றவர்கள் தங்களின் அனுபவங்களாகப் பயந்து பயந்து பகிர்ந்து கொள்ளும் சம்பவங்களை, வேற்றுக் கிரக வாசிகளுடன்தான் முடிச்சுப் போடுகிறார்கள். உறுதியான ஆதாரங்கள் ஏதுமில்லாத இந்த வேற்றுக் கிரகவாசிகள் என்பது சாத்தியமான ஒன்றுதான என்பதனை இனிப் பார்த்துக் கொள்வோம்.

## 5. வெளிக்கிரகவாசிகள் உண்மையில் உள்ளனரா?

சென்ற பகுதியில் புவியில் உயிரினத் இனத்தின் தேற்றம் பற்றிய விபரத்தை மேலெழுந்த வாரியாகப் பார்த்தோம். இதன் தொடராக, வெளிக்கிரகவாசிகள் பற்றிப் பார்ப்போம். எமது புவியினைப் போன்றே, எங்களது புவியல்லாத வேற்றுக்கிரகம் ஒன்றிலும் உயிரினங்கள் தோற்றத்திற்கான வாய்ப்புக்கள் இருந்திருப்பின், கால மாற்றத்துடன் அங்கேயும் உயிரினங்கள் தோன்றியிருக்கலாம். அப்படியாகத் தோன்றிய உயிரினம் ஒன்று, புவியில் மனிதரைப் போன்ற அறிவியல் நிலைக்கும் வந்திருக்கலாம். அப்படியான உயிரினம் ஒன்று இருக்குமாயின் அதனை வேற்றுக் கிரக உயிரினம் என்றும், அது எம்மைப் போலவே இருக்குமாயின், அவ்வுயிரினங் களை வேற்றுக் கிரக வாசிகள் எனவும் கூறலாம். அப்படி ஏதாவது உள்ளதா என்பதைப் பார்ப்போம். அதற்காக எமது அறிவியல் நிலையில் இருந்து கொண்ட சில தேடல்களைச் செய்ய வேண்டியுள்ளது.

முதலில் எமது கதிரவக் குடும்பத்தில் வெளிக்கிரகவாசிகளைத் தேடுவோம். மனித இனம் கிரகங்களை இனம் கண்ட நாளில் இருந்தே வெளி உலகுகளில் உயிரினங்கள் அதிலும் மனிதரை ஒத்த உயிரினங்கள் இருக்கலாம் எனச் சந்தேகப்படத் தொடங்கிவிட்டது. இச் சந்தேகம் இன்று முன்னரைவிட வலிமை பெற்றுவிட்டது என்றேதான் கூறவேண்டும். ஒருகாலத்தில் கதிரவனின் மற்றக் கோள்கள் ஏதாவதில் உயிரினங்கள் இருக்கலாம் என்ற ஐயம் மனிதர்களிடையே இருந்தது. கோள் புதன் கதிரவனுக்கு மிக அண்மையில் இருப்பதால் அங்கு உயிரினங்கள் இருக்க முடியாது என்று மனிதர்கள் உறுதியாகவே நம்பி விட்டார்கள். 430 பாகை சதம அளவை வெப்பத்தில் எந்தவொரு உயிரினமும் இருக்கவே முடியாது என்பதை யாவருமே ஏற்றுக் கொள்வார்கள் இல்லையா. இனி மற்றக் கிரகங்கில் வேற்றுக் கிரகவாசிகள் இருக்க முடியுமா என்பதனை ஒவ்வொன்றாக அடுத்த தடவையில் இருந்து பார்ப்போம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



**Computer Repairs! Computer Repairs!**

- Computer & Laptop Sales
- Software & Antivirus
- Virus Removal
- All types of Computer Repairs
- Computer Upgrades

**We Also Sale Mobile Phones**



**Ganesh: 416.527.1455**

For Computer Repairs, Upgrading & Virus Removal

venuscomputer50@gmail.com
umaaganesh@yahoo.com

**கலைச்சங்கமம் - 2015**

**சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றம் நடத்தும் வருடாந்த இராப்போசன விருந்தும் கலாச்சார நிகழ்வும்**

ஏப்ரல் 11, 2015 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு
***2648 Eglinton Avenue, Scarborough M1K 2S3***
***(Brimley & Eglinton)*** இல் அமைந்துள்ள ***"East Town Banquet Hall"*** இல் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில், சண்டிலிப்பாய் வாழ் உறவுகளைக் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம். மேலதிக விபரங்கட்கு
***416.299.0672 / 416.321.6750***

Home Line of Credit
upto $100,000
FUNDED WITHIN 4-5 DAYS

Need 2nd MORTGAGE?

YOU DECIDE HOW MUCH YOU NEED!

| 2nd MORTGAGE | YOU PAY BACK |
| --- | --- |
| $20,000 | $133/mo |
| $30,000 | $200/mo |
| $40,000 | $267/mo |
| $50,000 | $333/mo |
| $75,000 | $500/mo |
| $100,000 | $667/mo |

BAD CREDIT? NO PROBLEM!
NO INCOME VERIFICATION – NO CREDIT CHECK



YOU'RE APPROVED WITHIN 24 HOURS

KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent
Lic# M12002440

VERICO MORTGAGE BROKERS NETWORK
ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
Lic# 11995

416.298.2777
info@kiruba.ca
305-5200 Finch Ave East, Scarborough, ON. M1S 4Z5

# திரை விமர்சனம் - எனக்குள் ஒருவன்



- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

சினிமா ஆர்வமுள்ளவர்கள் பலரிடம் நிதி திரட்டி, கிரவுட் பண்டிங் முறையில், 75 லட்சம் ரூபாயில் கன்னட மொழியில் தயாரிக்கப்பட்டு, அமோக வெற்றியால் கன்னடத் திரையுலகத்தை மட்டுமல்லாமல் இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த 'லூசியா' திரைப்படத்தின் தமிழ் வடிவம் 'எனக்குள் ஒருவன்.'

இரண்டு கதைகள்... ஒன்றையொன்று பிணைந்து நகர்கிறது. முதல் கதை: 1980கள் திரையரங்கு வகையைச் சேர்ந்த துரை டாக்கீஸில் பணிபுரியும் கடைநிலை ஊழியன் விக்னேஷ். துரை டாக்கீஸின் முதலாளி நரேன், விக்னேஷை தனது சொந்தத் தம்பி போல பாவித்து அன்போடு நடத்தி வருகிறார். விக்னேஷ், தூக்கமின்மை நோயால் அவதிப்படுகிறான். இதற்காக 'லூசியா' என்ற மாத்திரையை வாங்கி சாப்பிடுகிறான். தூக்கம் வருகிறது. ஆனால், அரைகுறை தூக்கம். விழிப்பும் தூக்கமும் சேர்ந்து அவனை கனவு நிலைக்கு தள்ளுகிறது. இந்த கனவில் வருபவைகள் எல்லாம் இரண்டாம் கதை. இதில், விக்னேஷின் ஆழ்மன ஆசைகள் கனவாக விரிகிறது. விக்னேஷ் இதில் விக்கியாக மாறுகிறான். இவர் மிகப் பெரிய நடிகராக வலம் வருகிறார். மிகுந்த தன்மானம் மிகுந்தவராக, சுயநலம் சார்ந்தவராக இருக்கிறார். திவ்யா என்ற மாடலை காதலிக்கிறார்.

விக்னேஷ், திரையரங்கில் பீட்சா கடையில் வேலை செய்யும் திவ்யா மேல் பார்த்ததும் காதல் கொள்கிறார். திவ்யா வீட்டுக்கு சென்று பெண் கேட்கிறார். முதலில் திவ்யா மறுக்கிறார். பின்பு மெல்ல, மெல்ல திவ்யாவுக்கும் விக்னேஷ் மேல் காதல் வருகிறது. விக்கிக்கு எங்கிருந்தோ தொலை பேசியில் பணம் கேட்டு மிரட்டல்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. காவல்துறையில் புகார் கொடுக்கிறார். அது விசாரிப்பிலேயே இருக்கிறது. விக்னேஷுடனான காதல் கை கூடுவதற்காக திவ்யா பல முயற்சிகளை மேற்கொள்கிறார். மாடல் திவ்யாவுடனான காதல் கை கூடுவதற்காக விக்கி பல முயற்சிகளை முன்னெடுக்கிறார். இப்படி ஒன்று போலவும், நுட்பமான வித்தியாசங் களுடனும் நகரும் இரண்டு கதைகளும் ஒரு கட்டத்தில் ஒரே புள்ளியில் சந்திக்கின்றன. முடிவு என்ன என்பதை திரையில் பார்த்துக்கொள்ளவும்.

விக்னேஷ், விக்கி இரண்டு வேடங்களிலும் சித்தார்த் நடித்திருக்கிறார். இரண்டிலும் மிகச் சிறப்பான நடிப்பு. இரண்டு பாத்திரங்களுக்கும் இடையே அவர் காட்டும் வித்தியாசம் வியப்பூட்டுகிறது. கருப்பு நிறத்தில், அப்பாவி யாக, திவ்யாவை காதலிப்பது, நரேன் மீது அளவு கடந்த பாசத்துடன் இருப்பது என்று விக்னேஷாக வாழ்ந்திருக்கிறார். இன்னொரு பக்கம் பெரிய நட்சத்திர நடிகராக, விக்கியாக அசத்தியிருக்கிறார். இரண்டு பாத்திரம் என்பதால், காட்சிகள் தோறும் இவரே வருகிறார் என்றாலும் அலுப்பைக் கொடுக்கவில்லை. இதுவே பெரிய வெற்றி. அறிமுக நடிகை தீபா சன்னிதியும் இரண்டு கதைகளிலும் வருகிறார். இவரும் பிரமாத மாக வித்தியாசம் காட்டியுள்ளார். விக்னேஷ் திருமண ஆசையை வெளிப்படுத்தும்போது, தனது மறுப்பை வெளியிடுவதில் ரசிக்க வைத்திருக்கிறார். இரண்டாவது கதையிலும் அளவான அலட்டலுடன், அகங்காரம் இல்லாத, திமிர்த்தனம் காட்டாத பெண்ணாக அசத்துக்கிறார். இன்னொரு நாயகி சிருஷ்டி, கருப்பு வெள்ளை காட்சிகளில் வருகிறார். நரேன், ஜோன் விஜய், அஜய் ரத்னம், யோக் ஜப்பி என மற்ற நடிகர்களும் குறை சொல்ல முடியாதபடி நன்றாக நடித்திருக்கிறார்கள். இசை: சந்தோஷ் நாராயண். பாடல்களும் பின்னணி இசையும் மனதில் நிற்கவில்லை. ஆனால், பெரிய குறையாகவும் இல்லை.

ஒளிப்பதிவு: கோபி அமர்நாத். வண்ணம், கருப்பு வெள்ளை என இரண்டு பயணங்கள். வண்ணக்காட்சிகளை விடவும் கருப்பு வெள்ளை காட்சிகள் அதிகம் ரசிக்கும்படி இருக்கிறது. படத்தொகுப்பு: லியோ ஜோன் போல். ஒரு கதை முடிந்து இன்னொரு கதை

தொடர்ச்சி 37ஆம் பக்கம்


Parkway Mall Mobilicity !!!
$50 OFF COUPON
$20/mo
Life Time Deal
UNLIMITED Talk, Text & DATA(+$10)
UNLIMITED Local Calling
UNLIMITED Ontario Long Distance
UNLIMITED Text messaging
UNLIMITED DATA, Internet, Mobile-Hotspot
Canada & US Long Distance Calling (+$10)
FREE Caller ID, Voice Mail, Call Waiting and more
Samsung T199 $79.99 $0
Samsung Gravity Q $129.99 $39.99
LG L70 $228.99 $129.99
Nexus 4 $399.99 $179.99
Samsung Galaxy S4 $649.99 $309.99
iphone 5C 16GB $549.99 $349.99
No Contract !! No Credit Check !!
PHONES $50 OFF
You can bring in your own phone
ONLY at
Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229
mobilicity
Now that's smart.™
Limited time offer and may only be available to new activations. Please ask for in-store offer. $50 coupon can be only applied on phones and already applied on above phones. Save $10/month on our $25 unlimited plan when combined with our $5 voicemail add-on while customer's account remains active with Mobilicity. Adding $10 for unlimited data, Canada and US long distance calling needs to sign up with automatic payment. Taxes are extra. Restrictions may apply on combining offers with other offers or promotions. All unlimited features included in each plan/add-on, including unlimited talk, text and data features, must originate and be used within the Mobilicity Unlimited Zones. Additional terms and conditions apply. Subject to change without notice. All rights reserved.

# AVANI - 2

## NEW PROJECT BY

TRIDEL
BUILT FOR LIFE

## KENNEDY & HWY 401



**Tridel Price Starting From $215k**

*Chance to Win to Cuba** All Inclusive Tickets*

**HomeLife / GTA Realty Inc., Brokerage***

HOMELIFE HIGHER STANDARDS

**5215 Finch Ave, E., #203 Toronto, ON**

**Tel: 416.321.6969**

*** When a client buy a Condo. unit from Avani - 2 project through HomeLife GTA Realty Inc, Brokerage• Chance to win all inclusive Tickets to Cuba for one week. Limited to 2 couple (4 People) *Purchase must be on or before June 30, 2015*

**Independently Owned & Operated*

# 'விஜய்' தொலைக்காட்சி நடத்திய 'சுப்பர் சிங்கர் சீசன் 4இல்' பரிசு பெற்ற ஜெசிக்கா ஜுட்

ஒருவர் ஒரு விடயம் பற்றி எழுதும்போது அதற்குரிய தகைமைகள் இருக்கிறதா என்பதை தெரிவிக்க வேண்டும். ஏனெனில் அவருக்கு அந்த தகுதி பற்றி தகைமைகள் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

அவரவர் சுபாவத்துக்கும், அறிவின் தரத்துக்கும், சூழலுக்கும் ஏற்றவாறுதான் நயப்புரைகள் எழுகின்றன. 'சுப்பர் சிங்கர்' ஆரம்பித்த காலந்தொட்டு மிகுந்த ஈடுபாட்டு டன் அவதானித்து, ஆனந்தமடைவது எனது வழக்கமாகும். ஜெசிக்கா எனும் பெயரைக் கேட்டவுடனேயே ஒருவித ஈர்ப்பு என்னுள் ஏற்பட்டது. முதலாவது காரணம் 'கா' என முடியும் பெயர்களில் ஒருவித மகிழ்ச்சி.

வட இந்திய நாவலாசிரியர் சரத்சந்திரர் எழுதிய நாவலொன்றின் கதாநாயகி ஜீவபாலிக்கா என்பதனால் எம்மைச் சேர்ந்தவர்களுக்கு பெயர் வைக்கும் சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் குகபாலிகா, துளசிகா, ஜனவிகா எனப் பெயரிடப்படும். 'கா' எனில் செல்வி, மகள், குழந்தை எனும் பொருளைப் பெறும்.

பெயரால் கவரப்பட்டதோடு ஒவ்வொன்றாக அறிய வந்தபோது பற்பல விடயங்களில் ஒற்றுமை மேலோங்கியது. இசையைப் பொறுத்தவரை எமக்கு பாடத் தெரியும், சில ராகங்களைக் கண்டுபிடிக்கத் தெரியும். ஆனால், இசையின் நுணுக்கமான அறிவு கிடையாது. மாறாக சொல், உச்சரிப்பு, கதி (துரிதம்), மென்மை, ஓரளவு முகத்திலும், குரலிலும் உள்ள பாவம் அதாவது உணர்வு, உதட்டின் அசைவு, கண்ணின் ஒளி, தொண்டையில் ஏறி இறங்கும் குமிழ் ஆகிய அனைத்தும் இசையின் அசைவுகள் என்பதை அறிவோம்.

திறமையான இசை வல்லுனர்களின் பாடல்களை கேட்டு வந்ததமையாலும், அதைக் கேள்வி ஞானத்தால் எம்மால் பாட முடிகிறது, இரசிக்க முடிகிறது, ஓரளவு மதிப்பிட முடிகிறது.

நடுநிலையாளர்கள் பாடலின் இசை பற்றிய கருத்துக்களைச் சொல்லும்போது சங்கதிக-ளில் இத்தனை ஏற்ற இறக்கம் உண்டா எனும் வியப்பு. இதுவரை சொற்களை வெளிப்படுத்தும் ஆற்றலை மட்டும் ஊன்றிக் கவனித்த எமக்கு சங்கதிகளுள் ஏற்படும் விகற்பங்கள் புரிந்தன.

போட்டியாளர்களுள் ஜெசிக்கா, ஸ்ரீசா, அனல் ஆகாஷ் முதலியோர் வளர்ச்சியும், முதிர்ச்சியும் உடையவர்கள் போல தோற்றமளித்தார்கள்.

மனோ, சித்ரா, சுபா ஆகியோர் நிரந்தர நடுநிலையாளர்களாகவும், அனந்த் வைத்திய நாதன் பயிற்சியாளராகவும் அவ்வப்போது இசைத்துறை வல்லுனர்கள் ஓரிருவர் நடுநிலையாளராகவும், ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் போன்ற கர்நாடக சங்கீதவிற்பன்னர்கள் தொடக்கம் புதுமையைப் புகுத்தியும், எளிமைப்படுத்தியும் வரும் தனுஷ் வரை அழைக்கப்பட்டனர். அவர்கள் தம் கடமையை ஆற்றுவதோடு தாம் இந்த நிலைக்கு வரும்வரை எத்தகைய அனுபவங்களைப் பெற்றார்கள், எத்தகைய முயற்சிகளைக் கையாண்டார்கள், எத்தகைய



தோல்விகளைச் சந்தித்தார்கள் எனக்கூறி போட்டியாளர்களுக்கு தைரியத்தையும், உற்சாகத்தையும் ஊட்டினார்கள்.

புகழ்பெற்ற வாத்தியக் கலைஞர்கள் வெவ்வேறு வாத்தியங்களை உபயோகித்து தனித்துவமாக வாசித்தார்கள்.

பாவனா, மாகாபா, பிரியங்கா ஆகியோர் ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் நடத்துனராக கடமையாற்றினர். இந்தியாவின் பல்வேறு மாகாணங்களிலிருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

மழலைகளின் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் 'விஜய் ரி.வி.'யும் பிரமாண்டமான மேடையமைத்து ஏற்ற வழிவகைகளைச் செய்தத்தற்கு நன்றியும் கூறலாம். ஆனால், இப்போட்டிக்கு அனைத்து உலகப் போட்டி எனும் பெயரைப் பெற்றுக்கொடுத்தது இறுதி வரை நிலைபெற்ற ஜெசிக்காவே.

பெயரால் கவரப்பட்ட எமக்கு ஜெசிக்கா கனடாவிலிருந்து வந்தவர், தமிழ்ப் பெண், இலங்கைத் தமிழர் ஆகியன புலம்பெயர்ந்து வந்த எமக்கு கூடிய உரிமையும், உறவும், அகதியெனும் உணர்வும், தாயக விசுவாசமும் ஒன்றாக ஒன்ற வைத்தன.

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' தானே? பாடும் போது என்ன பிழைவிட்டாலும் மற்றவர்களிலும் பார்க்க குறைவாக நடுநிலையாளர்கள் மதிப்பிட்டாலும் எமக்கு அதுவே திறமையான சங்கீதமாகத் தோன்றுவதோடு, நடுநிலையாளர் இந்தியப் பிரஜை அல்லாதபடியால் பொறாமை கொண்டு இவரைக் கவிழ்த்துவிட்டார்கள் என்று எண்ணவே தோன்றும்.

கனடாவில் பிறந்து, வளர்ந்து, ஆங்கிலம் பேசும் சூழலில் பள்ளி மாணவரோடு பேசியும், விளையாடியும் வரும் எமது பேரர்மார்களைக் கண்ணால் கண்டும் தன் பாட்டியோடு மட்டும் பேசிப் பழகும் ஒரு பெண் அவள். அதுவும் யாழ்ப்பாணத் தமிழான 'இருக்கினம்', 'போகினம்', 'வருகினம்' என்பன போன்ற சொற்களை ஜெசிக்கா உதிர்க்கும் போது 'எங்கடை செல்லம்' என உச்சி முகரும் உணர்வு எமக்கு ஏற்படுகின்றது.

இரு பாடல்களைக் கலந்த பாடும் போது ஜெசிக்கா வரிக்குவரி பாடலைக் கலந்து பாடினார். மற்றவர்கள் சரணத்துக்கு சரணம் தான் கலந்து பாடினார்கள். இயல்பாகவே யாழ்ப்பாணத் தமிழர்கள் புத்திகூர்மை உடையவர்கள் என இந்தியத் தமிழர்களினா லும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது அல்லவா?

இலங்கையில் தமிழர் வாழும் இடம் எல்லாம் எனக்கு அறிமுகமானவர்கள். அவர்களும் நான் வாழ்ந்த காலத்தில் எம்மை அறிந்தவர்கள். எனவே, ஜெசிக்கா பற்றி அறிய முற்பட்டேன். - தொடரும்...



வள்ளிநாயகி இராமலிங்கம்






# குறட்டை விடுதல் நின்றுபோக!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

மனிதனுக்கு உணவும் உறக்கமும் இன்றியமையாத இரண்டு விடயங்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது. இதில் உறக்கம் என்பது தினசரி இருள் சூழ்ந்த இரவு நேரத்தில் அனைவருக்கும் வரும் இயல்பான ஒன்று. அதாவது காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து பின் அன்றாட அலுவல்களை நாள் முழுவதும் செய்து முடித்து மாலையானதும் அனைவருக்கும் ஓய்வு என்பது தேவையான ஒன்றாகின்றது. அடுத்து இரவானதும் தூக்கம் கண்களைத் தழுவத் தொடங்குகின்றது.

அன்றாடம் நாம் செய்யும் ஒவ்வொரு செயலின் காரணமாகவும் உடலிலுள்ள ஒவ்வொரு பாகமும் செயல்படுகின்றன. வெளி உறுப்புகளும் உள் உறுப்புகளில் முக்கியமாக மூளை, இதயம், நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல், ஜீரண உறுப்புகள் என எல்லாம் நாள்தோறும் அவற்றின் பணிகளை நேரம் தவறாது செய்கின்றன. இவற்றிற்கு ஓய்வு தேவைப்படுகின்றன. இங்கே ஓய்வு என்பது தூக்கம் மட்டுமல்ல அதன் இயக்கத்தை சற்று தளர்த்திக் கொள்ளுவதும் அடங்கும். அதாவது உடலின் உள்ளே இயங்கும் உறுப்புகள் பகல் நேரத்தில் துரிதமாகவும் இரவு உறங்கும் நேரத்தில் சாதாரணமாகவும் செயல்படுகின்றன. இதனையே Biological Clock என்று கூறுகின்றனர். இந்த கடிகாரம் யார் ஒருவருக்கு சரியாக ஓடுகின்றதோ அவர்களுக்கு நோய்கள் வருவதே இல்லை. உடல் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் இருக்கும். மனதில் குழப்பங்கள் இருக்காது. உடலும் மனமும் ஒருமுகப்பட்டு இயங்கும். ஏனெனில் தூக்கத்தின்போதுதான் நமது உடல் இயக்கம் நிறுத்தப்பட்டு அதாவது வெளிப்புற நடவடிக்கைகள் இல்லாது உள் உறுப்புகள் கண்காணிக்கப்படுகின்றன. உடலிலுள்ள செல்கள் (Cells) புதுப்பிக்கப்படுகின்றன. இறந்து போன செல்கள் மற்றும் திசுக்கள் (Dead cells Tissues) வெளியேற்றப்படுகின்றன. புதிதாக உருவாகும் செல்களின் காரணமாக உடல் உறுப்புகள் புத்துணர்ச்சி பெறுகின்றன. இதனால் ஓய்வும் உறக்கமும் நமக்கு இன்றியமையாதவை. ஆனால் இன்று உறக்கமின்றி, ஓய்வுமின்றி தவிப்பவர்களே ஏராளம். எனக்கு நிற்கக்கூட நேரமில்லை என்று கூறுவதே பெருமை என்று கருதுபவர்களே நிறையப்பேர் உள்ளனர். இப்படிப் பட்டோருக்கு தூக்கம் வந்தாலும் அது நல்ல தூக்கம் என்று சொல்ல முடியாது. அது அதிக பட்ச உடல் தளர்ச்சியால் வந்ததாகத்தான் இருக்கும். இத்தகைய தூக்கத்தை வெளிப்படுத்துவதே குறட்டை.

இந்தக் குறட்டை என்பது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் விடயம். பக்கத்தில் உறங்குபவரின் நிம்மதியான தூக்கத்தை கெடுப்பதே இந்தக் குறட்டை



கனடா போன்ற மேலை நாடுகளில் கணவன் விடும் குறட்டை சத்தம் தாங்காது விவாகரத்துக்கள் நிறையவே நடந்து கொண்டிருக்கின்றன. குறட்டை விடுவதற்கு சாதாரண காரணமாக எடுத்துக் கொள்ளப்படுவது குரல் வளையிலுள்ள எலும்புகளின் மென்மையான பாகங்களில் குருந்துகள் (Cartloges) இருந்து காற்று உள்ளே சென்று வெளியே வரும். அவ்வாறு காற்றுப் போய் வருவதன் காரணமாக ஒரு மெல்லிய ஒலி ஏற்படும். இதுவே உறக்கத்தின் போது வாய் மூடி இருப்பதன் காரணமாக மூக்கு வழியே செல்லும் காற்று குரல்வளையின் தசை நார்கள் மூலம் வெளிப்படும் சத்தம் மிக மிகக் குறைந்த ஓசையிலேயே அதிக சத்தமின்றி இருக்கும். இது இயல்பானது.

ஆனால் அதுவே மிக அதிக அளவில் பெரும் ஓசையோடு விடப்படும் குறட்டை என்பது உடலில் உள்ள கோளாறை வெளிப்படுத்தும் ஒன்றாகும். அதிக சத்தத்தோடு நீண்டநேரமாக குறட்டை விடுவது என்பது நல்ல தூக்கத்திற்கு அடையாளமல்ல. அது தானும் தூங்காமல் பிறரையும் தூங்க விடாமல் இருக்கும் செயலாக மாறி விடுகிறது. இதனால் உடலுக்கும் பெரும் தீங்காக அமைந்து விடுகிறது.

பெரும் சத்தத்தோடு குறட்டை விடும்போது வாய் மூலமே பெரும்பாலும் சுவாசம் நடைபெறுகிறது. இதனால் நோய் கிருமிகள் கூட வாயினூடாக உட்புகும் வாய்ப்புள்ளது. அதுமட்டுமன்றி போதியளவி பிராணவாயு நுரையீரலைச் சென்றடைவதில்லை. இதன் காரணமாக இரத்த ஓட்டத்தில் மாறுதல் ஏற்பட்டு இரத்தம் சரியாக சுத்திகரிக்கப்படாது நோய் எதிர்ப்புசக்தி குறைந்து எளிதாக நோய் தொற்று ஏற்பட ஏதுவாகின்றது. இதனால் பலருக்கும் பலவித நோய்கள் இருப்பதைக் காண்கிறோம்.

### குறட்டையை விரட்ட வழிகள்

ஒரு முறை ஆமை ஒன்று குளம் ஒன்றில் மிதந்து கொண்டு இருந்தது. குளத்தின் அருகே ஒரு மரத்தில் ஒரு பறவைக்கூடு இருந்தது. அதில் கழுகின் குஞ்சு ஒன்று அமர்ந்து இருந்தது. அக்குஞ்சு தன்னால் பறக்க முடியும் என நினைத்து கூட்டை விட்டுப் பாய்ந்தது. அது அண்மையில் பிறந்த குஞ்சு என்பதால் அதனால் வடிவாகப் பறக்க முடியவில்லை. அதனால் திடீரென காற்று வீசியபோது அது தடுமாறி குளத்தில் விழப்பார்த்தது. அதைக்கண்ட ஆமையும் கெதியாக நீந்தி பறவை பறக்கும் இடத்தடிக்கு சென்றது. கழுகுக் குஞ்சும் ஆமை மீது விழுந்தது. அது நீரில் மூழ்காமல் உயிர் தப்பியது.

குஞ்சும் வளர்ந்து கழுகு ஆனது. அது கிராமத்தினுள் சென்று சிறு மிருகங்களை பிடித்து உண்டது. சிறு மிருகங்கள் எல்லாம் அதைக்கண்டு பயந்தன. அதுவும், தான் குஞ்சாக இருந்தபோது காப்பாற்றிய ஆமையை மறந்து விட்டது. ஆனாலும் அந்த சம்பவம் ஓரளவு அதன் நினைவிலிருந்தது. அதற்கும் சில வருடங்களில் குஞ்சுகள் பிறந்தன.

இதேநேரம் அந்தக் குளத்தின் அருகே சில பிள்ளைகள் வந்து விளையாடத் தொடங்கினர். அந்த ஆமை இன்னும் அங்கேயே வாழ்ந்து வந்தது. ஒரு நாள் சிறுவர்கள் விளையாடும் போது ஆமையை கண்டனர். 'அதோ' ஒரு ஆமை! என ஒருவன் கத்தினான். பிள்ளைகள் அனைவரும் ஆமையைத் தூக்கி அதனுடன் விளையாடினர். இப்படி கொஞ்ச நேரம் சென்ற பின்பு, இன்னொரு சிறுவன் 'இதை வீட்டிற்கு கொண்டு போய் வளர்க்கலாம்' என்றான். மற்றவர்களும் சம்மதிக்க, அவன் அதை வீட்டிற்கு எடுத்துச் சென்றான். வீட்டிற்கு போனால் ஆமையை வீட்டில் வளர்க்க அவனது பெற்றோர் சம்மதிக்கவில்லை. அவனுக்கும் ஆமை மேல் விருப்பம் போய்விட்டதால் அதை அவன் திரும்ப குளத்திற்கு கொண்டு போய் விட விரும்பவில்லை. 'இந்த வேலி மீது வைத்துவிடலாமே' என்று அவனது நண்பன் ஒருவன் கூறினான். சரி என அவனும் ஆமையை அருகில் உள்ள வீட்டின் வேலி மீது வைத்து விட்டுச் சென்றான்.



ஆமையோ கீழே குதிக்க முடியாமல் தப்பி ஓட ஒரு இடமும் இல்லாமல் வேலியில் சிக்கிக் கொண்டது. அதற்கு மேல் கழுகு ஒன்று தன்னை உண்பதற்காக பறந்து வந்ததை ஆமையும் கண்டது. 'இனி நான் என்ன செய்யலாம்?' என ஆமை கவலைப்பட்டது. கழுகும் கீழே பறந்து வந்து ஆமையை தூக்கியது. அதுதான் ஆமை முந்தி காப்பாற்றிய கழுகு. ஆனால் இருவரும் ஒருவரை ஒருவ அடையாளம் காணவில்லை.

ஆனால் கழுகு, 'முன்னொருநாள் ஓர் ஆமை என்னைக் காப்பாற்றியது. உங்களை பார்க்க அதன் ஞாபகம் வருகிறது. அது நீங்களா என தெரியாவிட்டாலும் நான் உங்களை இங்கே போட்டு விட்டுச் செல்கிறேன்' எனக் கூறி, ஆமையை குளத்தில் போட்டு விட்டுப் பறந்து சென்றது. ஆமையும் தான் முன்பு செய்த உதவியால் காப்பாற்றப்பட்டதை எண்ணி மகிழ்ந்தது.

**நீதி: நன்றி மறப்பது நன்றன்று.**



**ஞா. ஆரணி**
**அகவை 16**

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.




# EDUCATION

## Review Questions15 -6

**CHEMISTRY 12**

(A) Explain how the emission spectrum of hydrogen is related to the energy levels in hydrogen.

(B) Compare 3rd ionization energies of magnesium and fluorine

(c) A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?

$K_2Cr_2O_7\,(aq) + 14HCl(g) \rightarrow 7H_2O_{(l)} + 2KCl\,(aq) + 2\,CrCl_3(aq) + 3\,Cl_2(g)$

(D) Balance the equation in acidic solution

$FeS + NO_3^- \rightarrow Fe^{3+} + NO + SO_4^-$

(E) Show reagents and experimental conditions to synthesize the following compounds from 1-propanol.

(i) Propene (ii) Propanal
(iii) proponoic acid (iv)2- proponol
(v) 2- bromopropane (vi) Propanone

**BIOLOGY 11**

(1) Colour blindness is considered to be sex linked disease and males much more likely to be colour blind than females " Explain" why?

(2)Describe the cyclic and non-cyclic photophosporilation and its importance in carbon fixation

**PHYSICS 12**

A pitched 160 g baseball in a horizontal flight with a speed of 40m/s is struck by a batter. After leaving the bat, the ball travels in the opposite direction ( horizontally) with the speed of 52m/s.

(i) What is the impulse acts on the ball while it is contact with the bat?

(ii) If the impact time for the base ball-bat collision is 1.3m.s, calculate the average force acts on the base ball.

➢ **DATA MANAGEMENT**

A group of 4 members is to be randomly selected from a society consisting 6 women and 7 men. What is the probability that the group will comprise only women.

➢ **Calculus 12**

Find $\lim_{n\to\infty} \dfrac{\sqrt{x^4+1} - 2x^2 - 1}{x^2}$

## Answer Key : 15-5

**Biology 1B**

➢ (A)*Memory T cells* are one type T-cells which provide immunity against future infections. Following an infection, some of the activated T-cells become memory cells. These memory T-cells are in a state of identifying recurrent infection (same infection) and produce many cells to fight against infection

➢ (B)*The stroke volume* (volume of blood in a single cardiac cycle) increases when the physical fitness increases. Therefore, with the lower heart rate (no cycles/ minute) heart can deliver the required amount of to tissues.

➢ (C) *During exercise* body requires more supply of oxygen. This will lead to increases breathing rate and, heart rate and metabolism to speed up.

➢ **CHEMISTRY 12**

$E = hv = h\frac{c}{\lambda}$

$= 6.626 \times 10^{-34} \times \frac{2.998 \times 10^8}{260 \times 10^{-9}}$

$= 7.64 \times 10^{-15}$ J / photon

$= 7.64 \times 10^{-15} \times 6.02 \times 10^{23}$J/mol

➢ **PHYSICS 12**

600 N ↑ x ↓ 490 N (mass = 50kg)

$F_{net} = m\,a$ ; $F_{net} = (600-490)N$

$110 = 50x\,a$; $a = 2.2\ m/s^2$

$\Delta d = V_i\,\Delta t + \frac{1}{2}a\Delta t^2$ ;

$30 = 0 + \frac{1}{2} \times 2.2\,\Delta t^2$ ; $t = 27.3s$

Ans. key 15-6 - next issue
☎ 647 341 3975
K.A.Srikrishnaraj PhD
ask@ keentutoringcentre.com
KEEN TUTORING CENTRE

# தமிழ்ப்பூங்கா நடத்திய பல்சுவை நிகழ்ச்சி

தமிழ் மொழி கற்பிக்கும் தனியார் பாடசாலைகளின் வரிசை யில் 328, பாஸ்மோர் அவின்யு, ஸ்காபரோவில் உள்ள தமிழ்ப்பூங்கா கடந்த 15 வருடங்களாக இங்குள்ள இளைய சந்ததியினரிடையே தமிழ் மொழி அறிவுத் திறனை மேலோங்கச் செய்யும் வகையில் பல்வேறு வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. அவ்வகையில் தங்களிடம் பயிற்சி பெறும் மாணவர்களும், மற்றவர்களும் பங்குபெறும் வகையில் ஒவ்வொரு வருடமும் பல்வேறு போட்டிகளில் அவர்களைப் பங்கேற்கவைத்து, வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவித்து வருகிறது. அதற்கு அமைய 28.2.2015 அன்று பிற்பகல் ஸ்காபரோ சிவிக் சென்டரில் இந்த வருடம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவித்து பல்சுவை நிகழ்ச்சியாக ஆடல், பாடல், விவாத மேடை போன்ற கலை நிகழ்ச்சிகளை, தமது மாணவர்களையே பங்கேற்க வைத்து மிகச் சிறப்பாக நடத்தியுள்ளது.

இவ்வருடம் நடத்திய சொல்வதெழுதும் போட்டி, பேச்சுப் போட்டி, பாடற் போட்டி ஆகியவற்றில் தமிழ்ப்பூங்காவைச் சேர்ந்த 5 வயது முதல் 15 வயது வரை கிட்டதட்ட 60க்கும் மேற்பட்ட இளம் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குகொண்டு தங்களது அறிவுத்திறன்களை வெளிப்படுத்தியுள்ளனர். அதற்கேற்ப பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் கலை நிகழ்ச்சி வழங்கிய இளம் சிறார்கள் அனைவருக்கும் பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் ஆகிய வற்றை விழாவில் பங்கேற்ற பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்கள், ஆசிரியர்கள் போன்றவர்கள் வழங்கினர். இவ்விழாவில் தமிழர் எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவரும், பேராசிரியருமான திரு. சிவபாலு தங்கராசா பிரதம விருந்தினராகவும், திரு. ராஜரட்ணம், திருமதி சற்குணநாதன் ரங்கநாயகி, திருமதி வாசுகி நகுலராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் பங்குகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.



தமிழ்ப்பூங்கா மாணவ மாணவிகள் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். குறத்தி நடனம் வழங்கிய ஷம்ரிதா சரவணகுமார், மெலனி சுரேஷ்குமார் ஆகியோர் நாட்டுப்புறக் கலையைப் பெருமைப்படுத்தும் விதத்தில் அவர்களின் நடனம் அமைந்தது. தொடர்ந்து ஜனுஷன் ஞானேஸ்வரன் 'நாம் தமிழர்' என்ற தலைப்பில் ஆற்றிய உரை, அதிதி அருள் சுந்தர் வழங்கிய ஆத்திச்சூடிப் பாடல், தக்ஷன் விமலராஜின் பாரதியார் பற்றிய பேச்சு, சேயோன் சதீஸ் பாடிய 'குடை பிடித்து' பாடல், விதுஷா ஆனந்தசங்கர் பாடிய 'பூக்கள் பார்', பேச்சுப்போட்டியில் பிரிவு 3, 4இல் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் உரை, தமிழ்ப்பூங்கா மாணவர்கள் வழங்கிய தமிழ் படிப்போம் பாடல், சங்க காலப் புலவர்கள் முதல் பாரதியார், பாரதிதாசன் பற்றிய பாடல் மற்றும் பேச்சு ஆகியன அபாரம் எனலாம். மேலும், சிறப்பு வகுப்பு மாணவர்கள் வழங்கிய 'க்கன்னா', 'ங்கன்னா' பாடலும், சிறுவர் பாடற் போட்டி மற்றும் சொல்வதெழுதற் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கான பரிசு வழங்கி கௌரவித்த விதமும், சபிநயா முருகதாஸ் (தமிழ் மொழி பற்றிய பேச்சு) கொன்றை வேந்தன் பாடல்களை அதீதி அருள்சங்கர் வழங்கிய விதமும் சிறப்பாகவிருந்தன.

யோகா பயிற்சியின் பயன்களைச் செயல்முறை விளக்கத்துடன் மாணவி மாதுமை நடராஜா செய்து காட்டினார். அதற்கு முன்னுரை மாணவி நிதூஷா பரராசசிங்கம் வழங்கினார்.

அன்றைய நிகழ்விற்கு சிகரமாய் நடைபெற்ற விவாத அரங்கில் 'பெற்றோர் தமது பிள்ளைகளைப் பலவிதமான வகுப்புகளுக்கும் கூட்டிச் செல்வது வரவேற்கக்கூடிய செயல்' என்ற தலைப்பில் மாணவி நிதுஷா பரராசசிங்கம் நடுவராக தலைமை ஏற்க, ஒட்டிப்பேசுவோர் அணியில் குகவகீரன் தில்லைநாதன், கஜமுகி ஞானேஸ்வரன், ஜனிஷா புஸ்பாகரன் ஆகியோரும், எதிரணி யில் மாதுமை நடராஜா, மனீஷா சுரேஷ்குமார், லிகிதன் விஜயராஜா ஆகியோரும் பங்கேற்றனர்.

பிரதம விருந்தினர் திரு சிவபாலு தங்கராசா தலைமையுரை நிகழ்த்தினார். விழா ஒருங்கணைப்பாளரும், தமிழ்ப்பூங்கா அதிபரு மாகிய திரு. சபா. அருள்சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

தமிழ்ப்பூங்கா பற்றிய விபரம் அறிய 647.378.3006, 905.479.5375 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

- புதுவை இராமன் -

# முழங்கால் : அது தொடர்பான பாரிய பிரச்சினைகள்

மனித உடலும் உறுப்புகளும் உணர்ச்சிகளும் செய்கின்ற செயற்பாடுகளைப் பார்த்தால் உலக அதிசயங்கள் எல்லாம் மேலோங்கிவிடும். மூளையில் இருந்து பாதம் வரையும் எவராலும் புரிந்து கொள்ள முடியாத செயற்பாடுகள் எப்போதும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு வடிவமுண்டு. இந்த உறுப்புகளில் ஒன்று செயலற்று விட்டால் நாமும் பழுதடைந்த வாகனம் போல முடங்கிவிடுவோம். இந்த நிலையில் எமது உடலில் முழங்கால் எல்லாவற்றிலும் பார்க்க முக்கியமான ஓர் உறுப்பு என்று கூற முடியும். முழங்கால் சம்பந்தமான பிரச்சினைகள் எப்போதும் ஏற்படலாம். உடலில் உள்ள பெரியதும் சிக்கலானதுமான மூட்டு இங்கே தான் உள்ளது.

எமது தொடைப்பகுதிக்கும், கீழ்க்காலுக்கும் இடையில் உள்ள மூட்டுப் பகுதியே முழங்காலாகும். லத்தீன் மொழியில் 'Genu' எனவும் கிரேக்கத்தில் 'Knee' என்வும் கூறுவர். எந்த பெரிய உடல் என்றாலும் எம்மை காவிச்செல்வது முழங்கால்கள் தான். காலை முதல் மாலை வரை எத்தனையோ செயல்களை செய்வதற்கு மிக உதவும் முழங்கால்கள் மட்டும் பழுதடைந்தால் அவ்வளவுதான். நாம் ஓரிடத்தில் செயலற்று குந்திவிடுவோம். உலகில் நடைபெறும் எல்லா விளையாட்டுக் களுக்கும் அதிகளவில் உறுதுணையாக இருக்கும் முழங்கால்களில் முதலில் ஆரம்பிப்பது நோவு ஆகும். நடந்து செல்லும் எல்லா பிராணிகளுக்கும் முழங்கால்களின் அமைப்பு இயற்கையின் கொடைதான். எம்மவர்கள் கோபம் வந்தால் 'முழங்காலை முறிச்சுப் போடுவன்' என்று கத்திப் பேசுவது கூட முழங்காலின் அருமை தெரிந்து தான்.

எம்மைத் தாங்கி நிற்கும் இம்முக்கிய மூட்டுப் பகுதியில் ஏதாவது சிறு பழுது ஏற்பட்டாலும் எம்மால் ஓட முடியாது, குனிய முடியாது, எந்த ஒரு வாகனத்தையும் செலுத்த முடியாது, கடவுளைக் கூட முழங்காலில் இருந்து வணங்க முடியாது. பொதுவாகப் பார்த்தால் எமது முழங்கால்கள் எப்போதும் மிகவும் இன்றியமையாத துணைசெய்யும் உறுப்பென்றே சொல்ல வேண்டும்.

சாதாரணமாக வயது முதிர்ந்தவர்களைப் பார்த்தால் அவர்கள் தடிகளை ஊன்றி நடப்பார்கள், நொண்டி நொண்டி நடப்பார் கள், சாய்ந்து, சாய்ந்து நடப்பார்கள், சிலர் தள்ளுவண்டியின் உதவியுடன் செல்வர், சிலர் மற்றவர்களது துணையுடன் நடப்பார் கள், எத்தனையோ விதமான அசைவு களுடன் செல்பவர்களின் முழுமையை நிர்ணயிப்பது முழங்கால்கள் தான்.

முழங்கால்கள் எமது உடலின் மிக பெரியதும், சிக்கல்வாய்ந்ததுமான மூட்டுப்பகுதி ஆகும். வெளியே பார்த்தால் ஒரு மூட்டுப்போல தெரிந்தாலும் உள்ளுக்குள் நடைபெறும் செயல்களை பார்த்தால் மிகவும் விநோதமாக இருக்கும். செயற்கையான இயந்திரங்கள் போலன்றி இயற்கையாகவே இவை இயங்குவதினைப் பார்த்தால் வியப்பு மேலிடும். முழங்கால் பற்றிய உள்ளமைப்பினைப் பார்க்கும்போது பல உறுதியான தன்மைகளை காணலாம். எமது தொடை எலும்பு (Femur) அதன் இணைப்பில் உள்ள முழங்காற்சில்லுடன் அல்லது முழங்கால் சிரட்டை (Patella) யுடன் இணைகிறது. இது Ligaments எனப்படும். தசை நார்கள் இணைந்து வலிமை சேர்க்கின்றன. நடுப்பகுதியில் கிடையான வடிவில் Lateral Meniscus எனப்படும் மெல்லிய மெத்தை (Cushion) அமைப்பும், Medial Meniscus எனப்படும்



மெத்தை அமைப்பும் உள்ளன. நடுப்பகுதியினை Poslenior Cruciate Ligament, Anterior Cruciate Ligament எனும் தசை நார்கள் இணைக்கின்றன. முழங்காலின் கீழ்ப்பகுதி Tibia எனப்படும். இதற்கு இணையாக Fibula எலும்பு நீளவாட்டில் செல்கிறது. எல்லாப் பகுதிகளும் அசைவதற்கான திரவங்களும் (Bursa) இதற்கு உள்ளுக்குள் இருக்கின்றன. எந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அனைத்து உறுப்புகளிலும் உள. விளையாடுவதால் பல இளையோர்கள் இந்த அமைப்புகளைக் காயமுறச் செய்வதாலேயே அவர்களுக்கு பிரச்சினை எழுகிறது. Stretcher எனப்படும் கம்புகளை ஊன்றியே நடக்க முடியும். எனினும் வயது ஏறஏற உள்ளே உள்ள மூட்டுக்கள் தேய்வதால் ஏற்படும் பிரச்சினைகளே அதிகமாகும். வயது ஏற முழங்கால்களை அதிகம் பாவிப்பவர்கள், பாரம் தூக்குபவர்கள், நீண்ட தூரம் நடப்பவர்கள் போன்றவர்களுக்கு உட்பகுதியில் தேய்மானம் (Degeneration) ஏற்பட ஆரம்பிக்கின்றது. 'இளையோர்கள் புதுக்கார் மாதிரி, ஆனால் 'முதியோர்கள் பாவித்த கார் மாதிரி' என்று கூடக் கூறலாம். வாகனங்களுக்கு ஏற்படும் பிரச்சினை போல இன்று எவரைப் பார்த்தாலும் முழங்கால் நோவு (Knee pain) பற்றியே குறிப்பிடுகின்றனர். ஒருவர் முழங்கால்களை எப்படிப் பாவித்துள்ளார் என்பதனைப் பொறுத்தே இந்த வலியும் அமைகின்றது.

முழங்கால் நோவு ஏற்படுவதற்கு மூட்டுவலி எனப்படும் (Osteoarthritis) நோய், முதுகு வலியின் தாக்கம், மருந்துகளின் இடைத் தாக்கம், காயம் ஏற்படல், எலும்புகளின் தேய்மானம், தசை நார், தசை நாண் (Tendon) பிரச்சினைகள், முழங்கால் சில்லு தேய்வடைதல் Menicus எனப்படும் மெத்தை அமைப்பில் ஏற்படும் கிழிவு (Tear), அதிகளவு திரவம் சுரத்தல், அழற்சி (Inflammation) ஏற்படல் போன்ற பல காரணிகளாகலாம். எனவே சாதாரண வலி ஏற்படுவதற்கு பல குறைபாடுகள் இருக்கலாம். இது சம்மந்தமான சத்திர சிகிச்சை நிபுணரால் மட்டுமே சரியான காரணத்தைக் கூற முடியும்.

முழங்கால் நோவு ஏற்படுவதற்கு அழற்சி முதற்காரணமாகலாம். இதற்காக ஓய்வு எடுத்து குளிரான அல்லது சூடான ஒத்தடங்கள் கொடுக்கலாம். கால்களை உயரத்தில் தூக்கி மேலும் கீழுமாக அசைத்தல் முக்கியமானது. வீக்கம் ஏற்பட்டிருந்தால் மட்டுமே ஒத்தடங்களைக் கொடுக்கலாம். ஒரு நாளுக்கு 2-3 தடவை 20-30 நிமிடங்களுக்கு Ice bag அல்லது Hot Bag வைத்து ஒத்தடம் கொடுப்பதும் நல்லது. முழங்கால் சில்லுப் பகுதிகளில் பிரச்சினை ஏற்பட்டால் Knee Cap எனப்படும் முழங்கால் மூடி உதவலாம். சில வேளைகளில் மசாஜ் செய்யலாம். மற்றும் வேளைகளில் நோவைத் தணிக்கும் மருந்துகள் உதவலாம். இவற்றை Nonsteroidal Anti - Inflammatory Drugs (NSAID) என்று ஆங்லத்தல் கூறுவர். Naproxen, Ibuprofen (Advil or Mortin) மருந்தும் பாவனையில் உள. முழங்கால் நோவுக்காக பல்வேறு மாத்திரைகளும், பூச்சு மருந்துகளும் தற்போது விற்பனை யாகின்றன. 'பலனளிக்காது விட்டால் பணம் திருப்பித் தரப்படும்' என்பதே அவர்களது தாரக மந்திரம். இவை அழகான பெட்டிகளில் கவர்ச்சியாக வரும். இவற்றினை காலம்பூராகவும் பூசி எதுவித பலனின்றி இருப்போரும் உளர். அத்துடன் Painclinic, Acupuncture, Homeopathy போன்ற துறைகளில் வைத்தியம் செய்பவர்களும் உளர். தமிழ் நாட்டுக்கும், கேரளத்துக்குமாக மாறி மாறி செல்பவர்களும் உளர். இந்த முழங்கால் நோவினை எப்படியாவது மாற்றிவிட வேண்டும் என்ற அங்கலாய்ப்பில் வாழும் முதியோர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதாக இருக்கும்.

இன்று பெரும்பாலான மக்கள் முழங்கால் வருத்தத்துடன் வாழ்வது 'Osteoarthritis' எனப்படும் மூட்டுவலி அல்லது மூட்டழற்சி நோவுடன் ஆகும். ஏழு கனடியரில் ஒருவர் இப்பாதிப்புடனேயே வாழ்கின்றார். ஆண்கள், பெண்கள் இருபாலாரும் 60க்கு மேற்பட்ட வயதுகளில் இதனோடு போராடுவது தான் மிகப்பெரிய பிரச்சினையாகும். இது 40-50 வயதுகளில் ஆரம்பித்தாலும் அதன் பின்பே கஷ்டமுறுகின்றனர். இந்த மூட்டு வலிகளில் 100 வெவ்வேறான வகைகள் உள்ள தென்றால் நம்ப முடிகிறதா பாருங்கள்!

இந்த வலியை இரண்டு வகைகளாகப் பிரித்துள்ளனர். முதலாவது வகை அழற்சியுடன் சம்பந்தப்பட்டது. இரண்டாவது தேய்மானம் பற்றியதாகும். எலும்புகளை இணைக்கும் பகுதியில் உள்ள மென் சவ்வானது பாரம் தூக்குவது, சறுக்குவது போன்ற சந்தர்ப்பங்களில் விரிந்து கொடுத்து, எம்மை பாதுகாக்கின்றது. பொதுவாக எலும்புகள் தேய்மானம் அடையும்போது இந்த மென்சவ்வு அழிந்து செல்லும். இதனாலும் மூட்டுவலி ஏற்படலாம். இந்நோய் உடலில் உள்ள பல மூட்டுகளிலும் ஏற்படலாம். இதனால் அழற்சி ஏற்பட்டு, மூட்டுகள் வீக்கமடையும். மூட்டுகளில் அருகில் உள்ள தசை (Muscles) பலவீனம் அடையும். நீண்ட காலத்தில் மென்சவ்வு முற்றாக தேய்ந்து விடும். இதனால் மூட்டு வீக்கம் ஏற்படும். ஓர் எலும்புடன் இன்னொன்று உராய்து செல்லும். இதற்கு முற்று முழுதான மருந்து இல்லை. இந்நோய்க்கான காரணமும் தெரிவதில்லை. இதற்கு சுருக்கமாக Overeaters Anonymous (OA) என்ற ஆங்கில எழுத்துக்களை பாவிப்பர். வயது அதிகரிப்பு, குடும்ப வரலாறு, உடற்பருமன், மூட்டுகளில் ஏற்படும் காயம் என்பவற்றால் நிலைமை மேலும் மோசமடையலாம்.

தொடரும்....



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**



# நல்லூர் வீதியில் திருநடனம் புரிந்து அருளாட்சி செய்த ஆசான் செல்லப்பா சுவாமிகள்

சிவதொண்டன்: தில்லையம்பலம் சிவயோகபதி
உலக சைவப் பேரவை - கனடா

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.
- திருமந்திரம்

தவத்திரு சிவயோகசுவாமிகளின் ஞானகுரு செல்லப்பா சுவாமிகளின் 100வது குருபூசைத் தினம் பங்குனி மாதம் அச்சுவினி நட்சத்திரம் கூடிய நாளாகிய, ஞாயிற்றுக்கிழமை 22.03.2015 ஆகும்.

சிவயோக குருமணி அருளிய நற்சிந்தனை எனும் பதிகத்தில் தனது குருமணி தேரடிச்சித்தர் செல்லப்பா தேசிகர் அருளிய ஞான விளக்கங்கள் பற்றி போற்றிப் பாடி இருக்கிறார். செல்லப்பா தேசிகர் அருளிச் செய்த மகாவாக்கியங்களூடாக உண்மை விளக்கம் செய்வதே நற்சிந்தனையின் தனிச் சிறப்பாகும். புண்ணியர் யோகர் நல்லூரில் கண்ட குரு மருந்தாகிய வல்லவன் செல்லப்பன் பற்றிய பின்வரும் சில விபரங்களை அறிந்து கொள்வோம்.

ஈழவள நாடு எங்கள் தாய் நாடு. இந்நாட்டின் வடபாலுள்ள சிறந்த நகரம் செந்தமிழ் வழங்கும் யாழ்ப்பாணமாகும். அங்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் - பொன்னார் தம்பதிகளின் தவப்புதல்வராக வந்துதித்தார் செல்லப்பா. பின்பு விவசாயத்தின் பொருட்டு இவரது பெற்றோர் நீர்வளம், நிலவளம் குன்றாத நல்லூரான, குமரன் உறையும் குறைவற்ற ஊராம் நல்லூரில் குடியேறினார்கள். நல்லூர் பெருமானின் வெளிவீதியோரமாக தென் கிழக்கில் இருந்த ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார்கள். அக்குடிசை இருந்த இடம் இன்று செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயமாக காட்சி அளிக்கிறது. இக்குடிசையிலிருந்து கல்வி கற்ற பின்பு, சிலகாலம் யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதிவியை வகித்தாரென்பர். செல்லப்பா சுவாமிகள் நல்லூரில் பிரபல வைத்தியர் சின்னத்துரையின் மைத்துனராவார். வெகு விரைவில் தனது பட்டம் பதவி அனைத்தையும் விட்டு விசர்க்கோலம் பூண்டார். அவரை யாவரும் விசர்ச் செல்லப்பா என அழைத்தனர். எனினும் அவரிடம் செல்லும் பக்தர்கள் முழு நம்பிக்கையுடன் அவரை வணங்கினார்கள்.

செல்லப்பா சுவாமிகள் நல்லூர் வீதிகளில் பெரும்பாலும் சஞ்சாரம் செய்த போதிலும் அவர்களுடைய அடியார்கள் வசித்த கொழும்புத்துறை, திருநெல்வேலி, கைதடி முதலிய இடங்களுக்குச் சென்று திரும்புவார். அங்குள்ள அன்பர்களிடத்து சில வேளைகளில் தாமாகவே உணவு



பெற்றுண்பார். செல்லப்பா சுவாமிகள் விசிறி கட்டுவதிலும், தென்னோலையைக் கொண்டு கிடுகு பின்னுவது போன்ற கைப்பணிகளிலும் விற்பன்னராக விளங்கினார். இராமநாதன் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டிய தினத்தில் சுவாமிகள் மருதனாமடம் சென்று, சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுக்கு ஒரு விசிறியைக் கொடுத்து,
'ஒரு பொல்லாப்புமில்லை
எப்பவோ முடிந்த காரியம்
முழுவதும் உண்மை
நாம் ஒன்றுமறியோம்.'
ஆகிய மகாவாக்கியங்களைக் கூறிவிட்டுத் திரும்பியதாக எம்முன்னோர் கூறுவர்.

சிவயோக சுவாமிகள் நல்லூர்த்தேரடியில் தனது ஞான குருவைத் தரிசிக்க சென்ற சமயம் 'ஆரடா நீ? ' என அதட்டி கேட்டார். 'ஆரடா நீயென்று அதட்டினான், தீரடா பற்று என்றான், அன்றே யான் பெற்றேன் அருள்' என்கிறார் தவத்திரு சிவயோக சுவாமிகள். ஒருமுறை சிவயோக முனிவர் கதிர்காம யாத்திரைக்குச் சென்றபோது நீண்ட நாட்களாக யோகநாதனைக் காணாத உறவினர் செல்லப்பாவிடம் சென்று விசாரிக்க, 'அவன் செத்து விட்டான்' என்று கூறினார். சிவயோகர் பின்பு குருவிடம் வந்து நின்றபோது 'எங்கேனும் வேர் விராயைப் பார்' என குரு மொழிந்தார்.

குருமொழியைப் பின்பற்றிய சீடர் கொழும்புத்துறை சென்று சந்தியில் இருந்த இலுப்பை மரத்தின் இருக்கை போன்ற வேரில் அமர்ந்து கொண்டார். அங்கும் குருவானவர் அடிக்கடி செல்வார். அப்போ சீடர் கும்பிட எழுகையில்,

'நீயென நானென வேறில்லை' எனக் கூறினார். தவத்திரு சிவயோகசுவாமிகள் தமது குருநாதரின் அகத்தையும் புறத்தையும் சிந்தனையில் வர்ணித்துள்ளார்.

'சிரித்து நல்லூர் வீதியில் திரிவார், வெறித்த பார்வையர், வேடம் விரும்பிலர், கறுத்த மேனியர், கந்தைத் துணியினர், புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றாக கொள்பவர். சிங்காரமான நடையோடு சிரிப்புடன் ஆரறிவாரென்று அடிக்கடி சொல்லுவார். தேரப் படியில் சிங்காரமாய்க் கிடப்பார். உல்லாசமான நடையுடையோனே, பித்தரென்று பிறர் பேசும் திறத்தான்'. குருவருள் பெற்று, குணமென்னும் குன்றேறி நின்ற சிவயோக சுவாமிகளுக்கு சித்தியும், பக்தியும், முக்தி எய்திய நிலையில் சுவாமிகள் பலவருட காலம் தமது குரு நாதன்-ின் திருவடி பிரியாது திரிந்தனர். குருநாதர் தமது சீடனைப் பல சோதனை களுக்கு உட்படுத்தினார். இருவரும் சேர்ந்து சமைத்த பின், சாப்பிட முன்பே சமைத்தனவற்றை யெல்லாம் குருநாதர் உடைத்தெறிவார். குளிப்பதற்கென கீரிமலைக்குச் சென்று இருவரும் குளிக்காமல் திரும்புவார்கள். வருடா வருடம் பங்குனி முதற் திங்களில் இருவரும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்குச் சென்று பொங்கிச் சாப்பிடுவர்.

சிவயோக சுவாமிகள் குருவின் உபதேசங் களை அவதானமாய் கேட்டு வந்தார். செல்லப்பா சுவாமிகள் சாதாரணமாக விசரன் போல் பேசுவார். அப்பேச்சுக்களுக்கிடையில் உயர்ந்த கருத்துகள், தத்துவங்கள் வருமென்று அவற்றைக்காத்துக் கொண்டு மணிக்கணக்காய் தவமிருந்ததாகவும் சிவயோக சுவாமிகள் கூறுவார். சமய விடயங்களைச் செல்லப்பா சுவாமிகளிட மல்லவோ கேட்க வேண்டுமென்றார். எங்கள் சிவயோக சுவாமிகள் நல்லூர் சித்தர், தேரடிச்சித்தர் என்று போற்றி வணங்கி வந்த செல்லப்பா சுவாமிகள் ஒருநாள் இரவுவேளை தன்னுடன் துயில வரும் அயலவரிடம் 'இன்று இரவு இங்கு பெரிய புதினம் நடக்கும் நீ வருவாயோ?' எனக் கேட்டார். அன்று இரவு அன்பர் செல்லவில்லை. அடுத்தநாள் காலை சென்றபோது சிறுபிள்ளை போல் ஒரு விரலை வாயில் வைத்த படியும், காலை-யொன்றை மடக்கி நடராஜா பாவத்தில் வைத்த வண்ணம் செல்லப்பாவின் உடம்பு விறைத்துக் காட்சி அளித்தது!

1915 ஆம் ஆண்டு பங்குனி அச்சுவினி நட்சத்திர தினம் செல்லப்பா சுவாமிகள் சமாதி அடைந்த தினமாகும். எங்கள் குருநாதன் எழில் நல்லைவாசன், இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன், ஞானத்தேசி கன்றன் திருவடி வாழ்க! வாழ்க!. குருபக்தி வளர்க! சிவதொண்டு வளர்க!

"குருபரன் அடியிணை ஏத்துதல் இன்பம்
குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்
குருபரன் அருள்வாக் காக்கிடும் இன்பம்
குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பமே"
- நற்சிந்தனை -

நூல் வெளியீட்டு விழா அழைப்பு

என் இனிய உறவுகளே,
இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



நூல்கள்: 1. "ஊரும் உறவுகளும்" - (Most part in Tamil)
2. My Legacy: Life-Love it, Live it, Leave it Livable
இடம்: 1380 Birchmount Road, Canada Kanthaswamy Temple Auditorium
காலம்: 4 pm-Saturday, March 21st, 2015

Sincerely
I.C.Ambihavaran
Contact: 647-470-7132

# வாழ்க்கைப் பயணங்கள் - 1

## தொடர்கதை...

அமலா குடியிருந்த அபாட்மன்ற் வீட்டு ஹோல் சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் இரவு எட்டு மணியைக் காட்டிக் கொண்டிருந்தது. படுக்கை அறையில் இருந்தவாறு 24 மணி வானொலி எப்போதும் போல 24 மணி நேரமாக எவ்வித ஓய்வுமின்றி ஓசை எழுப்பிக் கொண்டிருந்தது. வானொலியை நான் மிஞ்சிவிட்டேன் என்பது போல ஹோலில் தொலைக்காட்சிப் பெட்டியும் தன் பலத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. இந்தச் சத்தங்களை ஓரளவுக்கு உள் வாங்கியவாறு சோபாவில் தன் வேலைக் களைப்பைத் தணித்துக் கொண்டிருந்த அமலாவின் மனதில் எத்தனை சோகங்கள்? அவள் குடியிருந்த வண் ரூம் அபாட்மன்ற் சுவர்களால் மட்டும் பேச முடியும் என்றால் அவளின் மனதில் உள்ள சோகத்தைப் பறை சாற்றியிருக்கும். அந்த வீட்டில் தனிமையில் வாழும் அமலாவின் நிலையை முற்றாக அறிந்தவர்களாக வேறு யாரும் இருக்கவில்லை. ஏதோ சில நண்பர்கள் அல்லது உறவினர் அவளைப் பற்றி ஓரளவு அறிந்துதான் இருந்தார்கள்.

அமலா கனடாவுக்கு வந்து மூன்று வருடங்கள் ஆகி விட்டது. அவள் வந்த நாள் முதல் இந்த அபார்ட்மன்றில் வாழ்ந்து வருவது ஒரு சலிப்பைக் கொடுத்தாலும் அவளுக்குப் பழகிய இடமாக மாறிவிட்டதால் வசதியாக இருந்தது எனலாம். அமலா கனடாவுக்கு வர முன்பே இங்கு நிறைய தமிழர் என்றும், எந்த அபார்ட்மன்ற் இலும் நிறைய தமிழர் இருப்பார்கள் என்றெல்லாம் அறிந்திருந்தாள். ஆனால் அந்த நிலையை அமலா வசிக்கும் அந்த அபார்ட்மன்ற் இல் காணமுடியவில்லை. ஏதோ ஓரிரு தமிழர்கள் அங்கு வசிக்கின்றார்கள் என்பதே அவளின் ஊகமாக இருந்தது. அவளின் நேர அட்டவணை திங்கள் முதல் வெள்ளிவரை அநேகமாக ஒரே மாதிரிதான் இருப்பதுண்டு. வீட்டுக்கு வந்ததும் தனக்கு வந்துள்ள கடிதங்களைப் பார்ப்பதும், தொலைக்காட்சி நிகழ்ச்சியை அரை குறையாக பார்ப்பதிலும் அரை மணி நேரத்தை செலவு செய்வாள். அதன் பின்பு பதிவாகியுள்ள தொலைபேசி அழைப்புக்களைப் பார்த்து கொள்வாள். இன்றும் அவ்வாறே அரை மணி நேரத்தை சோபாவிலும், மிகுதி சில மணித்துளிகளைப் பதிவாகியிருந்த தொலைபேசி அழைப்புக் களைக் கேட்பதிலும் செலவு செய்து கொண்டு தன் உடைகளை மாற்றிக்கொண்டு வீட்டைத் துப்பரவு செய்யத் தொடங்கினாள்.

இந்த வீட்டின் எஜமானி தொடக்கம் வீட்டு வேலைக்காரி வரையும் நானே என்ற நிலைக்கு அவள் தன்னை நன்றாகவே பழக்கப்படுத்திக் கொண்டிருந்தாள். வீட்டைத் துப்பரவு செய்து முடித்து விட்ட கையோடு குளித்து உடையை மாற்றிக் கொண்டு ஹோலுக்கு வந்தவள் தொலைபேசி அழைப்புச் சத்தம் கேட்டு தொலைபேசியை எடுத்து 'ஹலோ' என்றதும் 'அமலா அக்கா', நான் சுகந்தி பேசுறன். எப்படி இருக்கிறீர்கள்" எனச் சுகந்தி பேச்சை ஆரம்பித்தாள். அமலாவும் பதிலுக்கு 'எப்படி இருக்கிறாய் சுகந்தி' என விசாரித்துக் கொண்டாள். சுகந்தி அமலாவுடன் கொழும்பில் ஒன்றாக வேலை செய்தவள். அமலாவை விட மூன்று வயது இளையவள். அதனால் சுகந்தி அமலாவை எப்போதும் அக்கா என்ற அடைமொழி சொல்லி அழைத்துக் கொள்வாள். அவள் "அமலா அக்கா" என அழைத்துக் கொள்வதில் அமலாவுக்கு மகிழ்ச்சியும் சுகந்தி மீது அதிக பிரியமும் இருந்தது. அமலா பெற்றாருக்கு கிடைத்த ஒரு தனிப்பிள்ளையாக இருந்ததால் தனக்கு கிடைக்காத சகோதர பாசத்தைத் தருபவளாக சுகந்தியின் உறவை ஏற்றுக் கொண்டிருந்தாள்.

கொழும்பில் அமலா ஒரு 'கம்பியூட்டர் புரோகிராமர்' ஆக தொழில் செய்து கொண்டிருந்தபோது அங்கு 'றிசப்பனிஸ்ட்' ஆக சுகந்தி வேலைக்கு சேர்ந்த நாளில் இருந்து இவர்களின் நட்பு ஏற்பட்டது. மூன்று வருடத்துக்கு முன்பு தான் பழகிய பலரிடம் விடைபெற்றுக் கொண்டபோது பிரிய மனமின்றி சுகந்தியுடனும் கண்ணீர் மல்க விடை பெற்றுக்கொண்டவள். அதன் பின்பு சில தடவை தொலைபேசியில் சுகந்தி கொழும்பில் உள்ளபோது பேசியிருந்தாள். அதன் பின்பு ஈமெயில் மூலமாக மட்டுமே இவர்கள் நட்பு தொடர்ந்தது. சுகந்தி ஆறு மாதத்துக்கு முன்பே கனடாவுக்கு வந்து தன் கணவனுடன் இணைந்திருந்தாள். கனடாவுக்கு வந்த பின்பு சுகந்தி பல தடவை தொலைபேசியில் அமலாவுடன் கதைத்திருக்கிறாள். நாலு தடவை சுகந்தி அமலாவை நேரில் சந்தித்து இருந்தாள். முதல் இரண்டு தடவை தன் கணவனுடன் சேர்ந்து வந்து சந்தித்துக் கொண்ட சுகந்தியிடம் பட்டும் படாமலும் தன் சோக நிலையை கொஞ்சம் வெளிப்படுத்தி யிருந்தாள். நிலைமையை உணர்ந்து சுகந்தி இரண்டு தடவை தனியாக சந்தித்து அமலாவுடன் பேசிக் கொண்டாள். அப்போது தான் அமலாவின் சோகத்தைப் பற்றி முழுதாகக் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

தொலைபேசியில் பேசத்தொடங்கிய அமலா கனடாவுக்கு புதிதாக வந்த தன் தோழி என்ற வகையில் சுகந்திக்கு தேவையான விடயங்களையைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள். இடையிடையே சுகந்தி அமலாவுக்கு ஆறுதலாக ஏதாவது பேச முயற்சிக்க அமலா அதற்கு முக்கியத்துவம் கொடுக்காது சுகந்திக்கு வேண்டிய புத்திமதி-களைச் சொல்லிக்கொண்டிருந்தாள். 'அமலா அக்கா நீங்கள் சொன்னது போல் தமிழ்ச்சங்கத்திற்கு சென்று வேலை தேடல் பயிற்சியைப் பெற்றுக்கொண்டேன். மிகவும் பயனுடையதாக இருந்தது.' என்று சுகந்தி சொன்னாள். 'நீ ரிசியுமி செய்ததும் எனக்கும் ஒரு கொப்பி ஈமெயிலில் அனுப்பு. நானும் முயற்சிக்கின்றேன். நீயும் உனது பாட்டிலும், தமிழ்ச்சங்கத்தின் மூலமாகவும் முயற்சி செய். 'றிசெசன்' இனால் நிலைமை கொஞ்சம் கஸ்டமாக உள்ளது' என்று தொடர்ந்து சுகந்தியின் நலனுக்காகவே அமலா சம்பாஷனையைத் தொடர்ந்து கொண்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதவளாக சுகந்தி இடைமறித்து 'எல்லாவற்றுக்கும் நன்றி அக்கா... உங்களைப் பற்றித்தான் எனக்கு சரியான கவலையாக இருக்குது..... நான் எப்படியாவது உங்கள் துயரத்தைத் தீர்க்க வேண்டும்... விடயம் தெரிந்த நாள் முதல் உங்களுக்காகவே பிரார்த்திக்கின்றேன்' என்று சொல்ல அமலா இடைமறித்தாள். 'சுகந்தி நீ கனடாவுக்கு வந்திட்டாய். உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைத்திருக்கு. உன் கணவன் குமார் உனக்கு பொருத்தமானவர். இதுவே எனக்கு சந்தோசம் தானே! முதலில் உன் அலுவலைப் பார். நீ நன்றாக இருந்தால்தான் அக்காவுக்கு உதவலாம் என்று எந்தவித எதிர் பார்ப்பும் இன்றி சுகந்தியை ஊக்கப்படுத்துவதற்காகவே இவ்வாறு கூறிக் கொண்டாள் அமலா'. இதன் பின்பு எதுவும் சொல்ல முடியாதவளாய் 'உங்களுடன் கதைத்து வெல்ல முடியாது அக்கா. நீங்கள் சொன்னபடியே செய்கின்றேன். அவர் வர முதல் சமையல் முடிக்க வேண்டும். பிறகு பேசுகின்றேன்' என்றவாறு சுகந்தி தொலை பேசியைத் துண்டித்தாள். தொடரும்.....

- அகணி -
authorakani@gmail.com

# 'எந்தையும்...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்திகள், கிறிஸ்தவ மதம் பற்றிய செய்திகள் யாவும் மௌனமாகவே கூறுகிறார். மேலும் திருச்சபை, விஞ்ஞான, மருத்துவ உண்மை களை இரட்டிப்புச் செய்த வரலாறுகள், உலக அரசியல் அரங்கில் அமெரிக்காவின் நிலை, முஸ்லீம்களின் எதிர்காலத்திட்டம் யாவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. லஷ்கார் அமைப்பின் வரலாறு, பிரித்தானியவின் வல்லாதிக்கமும், வீழ்ச்சியும், இந்திய வடநாட்டு நகரங்கள், காடுகள், அங்கு நடைபெறும் சண்டைகள், வாழ்க்கைமுறை யாவும் விபரமாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வளவு தகவல்களையும் எங்கிருந்து ஆசிரியர் பெற்றார் என்பது கேள்விக்குறியே. மேலும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நகரங்கள், கஞ்சா வியாபாரம் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகளின் செயல்பாடுகள் யாவும் கதையோடு இணைந்து செல்வது சிறப்பால் உள்ளது.

பல்வேறு மதங்களின் ஆழமான தத்துவங்களோடு ஓஷோவின் வரலாறும், சொராஸ்டர் மத வரலாறும் கதையில் சேர்க்கப்பட்டுள்ளன. விவிலியம் நூல் பற்றியும் கிறிஸ்துவ மதம் பரவிய விதம் பற்றியும் ஐரோப்பிய நாடுகளான இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற வற்றின் கட்டிக்கலைகளின் சிறப்புகள் ஆயனவும் இங்கு காணப்படுகின்றன. பழைய ஏற்பட்டிலுள்ள பல்வேறு தீர்க்க தரிசனங்கள், கதைகள் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளன. தகவல்கள் யாவும் சுவைபடக் கூறபட்டுள்ளன. ஆசிரியர் இடைக்கிடை தனது உள்ளக் கிடக்கை களையும் கருத்துக்களையும் கதை யெங்கனும் பாத்திரங்களின் வாயிலாக வும் பொதுவாகவும் கூறியிருப்பது பாராட்டத்தக்கது. குறிப்பாக பின்வரும் வசனத்தை உதாரணமாகக் கூறலாம். 'வசீகரமான தலைவரும் கேள்வி கேட்காத விசுவாசமும் இருந்தால் மனிதர்கள் வெறும் மாடுகளாகவும் செம்மறி ஆடுகளாகவும் ஆகி விடுகிறார்கள்'. இதுபோன்று பல வாக்கியங்களை வாசகர்கள் காணக் கூடியதாக உள்ளது. இறுதியில் ஜெகன் ஒலிவியாவுடன் எவ்வாறு இந்தியாவில் இருந்து இலங்கைக்கு படகு மார்க்கமாகச் சென்றான் என்பதும் அங்கே போர்ச்சூழலில் காணப்பட்ட யாழ். குடாநாட்டின் நிலைமைகளும் இராணுவக் கெடுபிடிகளும் விபரிக்கப் பட் டுள்ளன. ஒலிவியாவுக்கும் ஜெகனுக்கும் இடையே நடந்த சம்பாஷணைகளின் போது மதம், மதமாற்றம் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் மிக தர்க்க ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளக்கூடியன வாகவும் அமைந்திருப்பது ஆசிரியரின் ஆளுமையையும் மொழியின் கையாள லையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. மத மாற்றம் பற்றிய ஆசிரியரின் கருத்துக்கு உதாரணமாகப் பின்வரும் வாக்கியங்கள் விளங்குகின்றன.

"மத மாற்றமென்பது ஒரு சாரமற்ற பிற்போக்கான சித்தாந்தம். ஒருவன் மதம் மாறும்போது தனது வேர்களை அறுத்துக் கொள்கின்றான். ஒட்டு மாங்கனி கூட தனது வேர் இல்லாவிட்டாலும் தனது தன்மையை ருசியைத் தக்க வைத்துக் கொள்கிறது. ஆனால் வேரில்லாத மனிதனோ இரண்டும் கெட்ட நிலையில் ஒரு திரிசங்கு சொர்க்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்".

இது ஒரு உண்மையான, விசுவாசமான எவருக்கும் பொருந்தும் என எண்ணுகி றேன். இவ்வாறான பல உண்மைகளும் உலக நியதிகளும் இந்நாவலில் நிலை நாட்டப்படுகின்றன. ஆனால் எனக்கு இதன் தலைப்பை அதாவது 'எந்தையும் நானே' என்ற தலைப்பை மாற்றியிருக்க லாம் எனப்படுகிறது. கதைக்கும் தலைப்புக்கும் தொடர்பு இல்லாதது போல் தோன்றுகின்றது. எனவே இவ்விடயத்தில் ஆசிரியர் கவனஞ் செலுத்துவார் என நினைக்கிறேன். இந்நாவலில் பல அரிய தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய இருப்பதால் ஆங்கிலத்தில் மொழி மாற்றஞ் செய்யப்பட வேண்டுமென்பது என அவா.

# திரை...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

வருவதை உணர முடியாத அளவுக்கு சில காட்சிக-ளில் இவரது பணி சிறப்பாக இருக்கிறது. திரைக்கதை: பவன் குமார். இவர்தான் படத்தின் மிகப்பெரிய பலம். மனிதனின் ஆழ்மன ஆசைகள் எப்படியிருக்கும் என்பதை கனவுக் காட்சிகளில் நுட்பமாக வெளிப்படுத்தியிருக்கிறார். யதார்த்தத்தில் முதலாளியாக வருபவர் கனவில் பணியாளராக வருகிறார். இரண்டு கதைகளையும் அழகாக பிணைத்திருக்கிறார். எது கனவு, எது யதார்த்தம்



என்பதில் ஒரு மர்மத்தை வைத்து அதனை கடைசி வரைக்கும் கொண்டுசென்று அசர வைத்திருக்கிறார். இயக்கம்: பிரசாத் ராமர். கன்னடத்தில் பவன்குமார் காட்சிப்படுத்தி இருந்ததைத்தான் செய்திருக்கிறார் என்றாலும், கன்னட 'லூசியா'வைவிட தமிழ் சிறப்பாக இருக்கிறது என்பதில் இருக்கிறது பிரசாத் ராமரின் இருப்பு.

305

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்



ரகசியம்... பரமரகசியம்....
இது நமக்குள் இருப்பது அவசியம்.
பாடல் உலகரின் பழைய சி.டி. பிளேயரில்
ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

இந்தியாவில் பஸ்சில் இளம்பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி, மரணதண்டனைக் கைதியாக இருக்கும் கைதியை பேட்டி கண்டதும் அவனது கருத்துக்கள் பி.பி.சி யில் ஒலிபரப்பானதும் பல சட்டப் பிரச்சினைகளையும் தன்மானப் பிரச்சினையையும் உருவாக்கியுள்ளது.




மார்ச் பிறேக் வழமைபோல் மாணவர்களுக்கு கொண்டாட்டம். சில பெற்றோர் தங்கள் வசதிக் கேற்றபடி வேறு நாடுகளுக்கு திட்டமிட்டு சென்று வருவார்கள். சில பெற்றோர் அதே கோவில் அதே மோல் அதே கொத்து றொட்டி அதே சாப்பாடு... தங்கள் வசதிக்கேற்றவாறு அமைத்துக்கொள்வார்கள்.

வீட்டில் சிறியவர்களுக்கும் முதியவர்களுக்கும் சிறிய போராட்டம் நடக்கும். காட்டுன் யார் பார்ப்பது? இடையிடையே அழும் சீரியல் யார் பார்ப்பது?



'சுப்பர் சிங்கர்' புகழுடன் ஜெசிக்கா வரும்பொழுது தன்னால் எயர்போட்டிற்கு போக முடியவில்லையே என்று ஐபொட் அகில-ாண்டேஸ்வரி கவலைப்பட்டுக் கொண்டா. சரி இனி நடக்கும் ஜெசிக்காவின் விழாவிற்கு எல்லோரும் போவோம் எனக்கூறிக்கொண்டு வந்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

உலகர் குழாம் கலகலப்பாக காணப்பட்டனர். விழுந்தபனி கரையத் தொடங்கி விட்டது. சூரியன் நீண்ட நேரம் வானில் வலம் வருகிறது. குளிர் கூடக்கூட வீட்டிலுள்ள அத்தனை உடுப்புகளையும், பெரிய பூட்ஸ் ஐயும் போட்டுக்கொண்டு போய் அதுவும் கோயில்களில் தொலைத்தது பாதி, எடுத்தது பாதியாக வந்த காலம் போய்விட்டது.

பல திட்டங்கள். ஐ பொட் அகிலா எங்கெங்கு என்னென்ன நிகழ்ச்சிகள், எது ரிக்கெற், எது ரிக்கற் இல்லை, எது நிதி சேகரிப்புக்காக நடத்தப்படுகிறது, எப்பிடி போகலாம், பஸ்சிலா அல்லது ரூபனுடனா?
செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் இப்போ ஐ பொட் அகில-ாவின் வழி நடத்தலிலேயே நடக்கின்றனர்.

கோவில் தினங்களை கலண்டரில் உலகர் வட்டமிட்டுக் கொண்டிருந்தார். கோயில்களில், பொது நிகழ்ச்சிகளில் கண்ட பலரை மீண்டும் காண முடியுமா? தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது. பேப்பர், றேடியோ, ரெலிவிசன் மாறி இன்ரநெற், ஈமெயில், பேஸ்புக்... நன்மை தீமைகளை அதில்தான் பகிரப்படுகிறது. சில முதியவர்களுக்கு தாம் பழகிய பலரின் மறைவு கூடத் தெரிவதில்லை. காலம் மாறிப்போச்சு.



ரூபன் பிறின்ற் எடுத்துக் கொடுத்த செய்திகளை உலகர் பெலத்து வாசித்துக் கொண்டிருந்தார். 'எண்ணித்துணிக கருமம்' என்பார்கள். மேடை, வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருப்பது சிலவேளை பெரிய பிரச்சினையை உருவாக்கி விடுகிறது. கடந்த வாரம் லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்ட விழாவில் அவரை அறிமுகம் செய்து வைத்த பிரமுகர் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த என ஆரம்பித்தாராம். அதைக்கேட்டு ஜனாதிபதி மைத்திரிபாலா தொடர்ந்து சிரித்தாராம். உலகர் படித்து முடிக்க முதலே நல்ல காலம் பிரேமதாசா எண்டு சொல்லேல்லை எனச் சொல்லி பெலத்து சிரித்தா செக்கண்ட்புளோர் செல்லம்மா சொன்னா.

தொடர்ந்து செய்திகளை உலகர் படிக்க ஐபொட் அகிலா.. தனது ஐ பொட்டை மெல்லமாக மூடிவிட்டா.

இலங்கைக்கு மாமனின் மரணச்சடங்கிற்கு சென்ற மருமகன் அதனை செல்பியில் எடுத்து (தனது செல்போனில் தன்னையும் மாமனாரின் சடலத்துடன் தானே தனது செல்போனில் படம் எடுத்து)

இனையத்தளத்தில் போட்டது பெரிய சர்ச்சையை உருவாக்கியதால் அதனை அவர் அகற்றிவிட்டார்.
ஒருவர் அதிகம் செல்பிகளை எடுத்து வெளியிடுவது அகந்தை அல்லது தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடு என உளவியல் நிருபர்கள் குறிப்பிடுவதாக அச்செய்தியில் குறிப்பிட்டதை உலகர் சற்று பெலத்து வாசித்தார். அப்போ செக்கண்ட் புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் ஐ பொட் அகிலாண்டேஸ்வரியைப் பார்த்து சிரித்தனர்.



உப்பிடித்தான் நெல்சன் மண்டேலாவின் மரணச்சடங்கிற்கு சென்ற அமெரிக்க அதிபர் ஒபாமா படங்கள் எடுத்து பிரச்சினைப்பட்டவர் எனச் சொல்லிக்கொண்டு தனது ஐ பொட்டை எடுத்துக்கொண்டு மெதுவாக வெளியேறினா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி.

மார்ச் 15 - 31

20. வசந்தகாலம் ஆரம்பம்.




20. சேர். ஐசாக் நியூட்டன் நினைவுதினம்.
(வீழ்ந்த அப்பிளில் விடாமுயற்சி ஆராய்ச்சி)

22. உலக நீர் நாள்.



23. 1752இல் கனடாவின் முதலாவது பத்திரிகை 'கலிபாக்ஸ் கசெட்' வெளியிடப்பட்டது.

23. யாழ். சித்தர் யோகசுவாமிகள் நினைவு தினம். (1872-1964)
(என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்)



24. பிரபல பின்னணிப் பாடகர் ரி.எம். சவுந்தரராஜன் பிறந்தநாள்.
(உலகமெல்லாம் என் இசை கேட்கும் அந்த ஓசையிலே நாதம் நின்றாடும்)



24. டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் நினைவுதினம். (1933..1988)

25. மயில்வாகனன் சுவாமி விபுலானந்தர் பிறந்தநாள்.
யாழ் நூல் (இசை நூல்) எழுதியவர். (1892-1947)

29. மானிப்பாய் மருதடி கொடியேற்றம்.




29. குருத்தோலை ஞாயிறு



31. தந்தை செல்வா இலங்கை தமிழரசுக்கட்சி எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பிறந்த தினம்.
(மார்ச் 31-1898 - ஏப்பிரல் 26-1977)


## வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## வருடாந்த பொதுக்கூட்டம் - 2015

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மார்ச் மாதம் 29ம் திகதி ***(March 29, 2015)*** ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணி முதல் மதியம் 2:00 மணிவரை ***3600 Kingston Rd, Scarborough*** இல் அமைந்துள்ள ***Scarborough Village Recreation Centre*** மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் திரு. சி. இளஞ்செழியன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் முக்கிய நிகழ்வாக புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெறவுள்ளதுடன் வழமைபோல் மதிய உணவும் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

செழியன்: 416.949.7795 / சிவா: 416.562.4141 / சிறீதரன்: 416.661.3494

**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

றொரன்றோ தமிழ்ச் சங்கம்

## மாதாந்த இலக்கிய கலந்துரையாடல்

தமிழ் சிறுகதை இலக்கியம்

**சிறப்பு விருந்தினர்கள் உரை:**

| | |
|---|---|
| சிறுகதைகளும் பின்நவீனத்துவமும் | - எழுத்தாளர் அகில் |
| கனடாவில் வெளிவந்த தமிழ் சிறுகதைகளின் கருப்பொருட்கள் | - எழுத்தாளர் குரு அரவிந்தன் |
| ஆங்கில சிறுகதைகள் பற்றிய நவீன இலக்கியதிறனாய்வுகள் | - பேராசிரியர் அ.ஜோசப் சந்திரகாந்தன் |
| சங்கீதம் சார்ந்த சிறுகதைகள் | - பேராசிரியர் சு.பசுபதி |

**கௌரவ விருந்தினர் உரை:** எழுத்தாளர் அ.முத்துலிங்கம்
பெப்பிரவரி மாத இலக்கிய நிகழ்வுகள்
தொகுப்புரை: திருமதி ஜெயகௌரி சுந்தரம்பிள்ளை
ஐயந்தெளிதல் அரங்கு

**நாள்**: 28.03.2015 **நேரம்**: மாலை 3:00 முதல் 7:00 வரை
**இடம்**: றொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
3A, 5637, Finch avenue East, Scarborough, M1B 5k9
தொடர்புகளுக்கு: ***416.822.6316*** அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்




# உலக...

## 16ஆம் பக்கத்தொடர்ச்சி

அமெரிக்காவின் அண்டைய நாடான மெக்சிக்கோவில் ஹொலிவூட் ஏற்படுத்திய மாற்றம் ஆச்சரியத்துக்குரியது. 1950களில் வருடத்துக்கு 150 படங்கள் மெக்சிக்கோவில் வெளிவந்தது. இன்று 25க்குட்பட்ட படங்களே தயாரிக்கப்படுகின்றன. அமெரிக்காவின் ஒரு பகுதியினரின் தாய் மொழி ஸ்பானிஸ் ஆக இருப்பதனால் லத்தீன் அமெரிக்க மற்றும் மெக்சிக்கோ படங்களின் விநியோக கட்டுப்பாட்டை அமெரிக்கா தன்னகம் வைத்துள்ளது. பிரேசிலிய தயாரிப்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சரா சில்விரியா "எங்களுக்கு மற்றைய லத்தீன் அமெரிக்க நாடுகளின் திரைப்படங்கள் பற்றி எதுவுமே தெரியாது", எங்களுக்கு அருகில் அண்டைய நாடான ஆர்ஜன்ரீனாவின் படங்களையே பார்க்கும் சந்தர்ப்பம் எங்களுக்கு கிட்டுவதில்லை" என குற்றஞ் சாட்டுகின்றார். ஒஸ்காருக்கு பரிந்துரைக்கப் படும் படங்களே லத்தீன் அமெரிக்க மக்கள் பார்க்கக் கூடியதாகவுள்ளது. திரைப்பட விழாக்களில் லத்தீன் அமெரிக்க படங்களை பார்க்கும் அமெரிக்க விநியோகஸ்தர்கள் அங்கேயே படத்தை வாங்கி அமெரிக்கா மற்றும் சர்வதேச சந்தைக்கு விநியோகிக் கின்றார்கள். பிரேசில் திரைப்படங்களில் முதலீடு செய்யும் தனிநபர்களும் நிறுவனங்களும் முதலீட்டுத் தொகையை தங்களது மொத்தவருமானத்தில் இருந்து குறைத்து அதற்கேற்ப வருமான வரியைச் செலுத்தலாம் என 1996ல் சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியது. எனினும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. ஆர்ஜன்ரீனாவில் தொலைக்காட்சி நிறுவனங்கள் கிடைக்கும் லாபத்தில் ஆறிலிருந்து எட்டுவீதம் வரையிலான பகுதியை திரைப்படத்தயாரிப்பில் முதலிட வேண்டும் என இதே காலப்பகுதி யில் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் திட்டமிட்டு அமெரிக்கா தனது சந்தையை ஆரம்பத்திலிருந்தே விரிவுபடுத்திவிட்டது.

திரைப்படங்களை சந்தைப்படுத்தலுக்கு ஏதுவாக 1929ல் ஒஸ்கார் விருது வைபவங்களை தொடங்கினர். மக்களை கவரும் வண்ணம் இங்கு கவர்ச்சிக்கு முக்கியத்துவமளித்தனர். விருதுகளுக்கு அப்பால்




ஊடகங்கள் கலைஞர்களின் உடைகளுக்கு முக்கியத்துவமளித்தன. விழாவின் பின்னர் நடைபெறும் விருந்துபசாரங்கள் பெரியளவில் புகைப்படங்களாக ஊடகங்களை அலங்கரித்தன. ஒஸ்காரைத் தொடர்ந்து 1932ல் முதல் திரைப்படவிழா வெனிஸில் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கான்ஸ், பின்னர் ஐம்பதுகளில் பேர்ளின் திரைப்படவிழாக்கள் ஆரம்பிக்கப் பட்டன. வட அமெரிக்காவின் இரு பெரும் திரைப்படவிழாக்களான ரொரண்ரோ மற்றும் Sundance திரைப்பட விழாக்கள் முறையே 1976, 1978ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப் பட்டன. திரைப்படவிழாக்களும் சந்தைப்படுத் தலில் பெரும்பங்காற்றின. திரைப்பட விழாக்களில் விமர்சகர்களால் கவனிப்புக்குள் ளாகும் படங்கள் சர்வதேசச் சந்தையில் வரவேற்பை பெற்றன. கடந்த பல வருடங்களாக ரொரண்ரோ திரைப்பட விழா வில் மக்களால் மிகச் சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்ட படம் ஒஸ்காரில் சிறந்த படவிருதைப் பெற்றது அல்லது பெற வைக்கப்பட்டது. ஒஸ்காருக்கு பரிந்துரைக்கப் படும் படங்கள் 'பரிந்துரைப்பு' என்ற விளம்பரம் மூலம் மீண்டும் மக்களால் நுகரப்படுகின்றன. விருதுகள் பெற்ற பின்னர் மீண்டும் திரையரங்குகளில் காட்சியளிக்கப்படு கின்றன. இவற்றிக்கென வீடியோ வியாபாரம் அதிகளவில் உள்ளது. தொலைக்காட்சி நிறுவனங்களும் அதிகளவு விலை கொடுத்து வாங்குகின்றன.

தொடரும்...



"Let me help you make the right choice"

**Schuren Sriskandarajah** B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393



BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

**Vany Jeganmohan**
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!™



"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All Stars Realty Inc., Brokerage
Chairman's Club Award
**Raj Paramasamy**
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit கவலை வேண்டாம்



வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.



Allstate
**Raji Linghan**
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N



**THE TRUSTED MORTGAGE AGENT**
"Solution For Every Mortgage"
Mortgage Alliance — The Guardian
*Some Terms & Conditions May Apply



•I will arrange your 1st Mortgage with 0% down.
•Need a 2nd Mortgage???
"When banks say no We say yes"
@ interest rate starting from 6.99%+.
**Surren Selvanayagam**
(LIC: M14001034)
சுரேன் செல்வநாயகம்
Contact: 647.308.3090 / E-Mail: surren12@gmail.com

நேர்மையுடனும் விசுவாசத்துடனும் உங்களுக்காக வீடுகள் வியாபார நிலையங்கள் வாங்கவும் விற்கவும் உங்கள் கனவுகளை நனவாக்கும் ஒரு நம்பிக்கையான முகவர்

PYRAMID GROUP REAL ESTATE PROFESSIONALS
Neranjan & Sugan Team
PYRAMID GROUP YOUR DREAM TEAM
TOP LISTING TEAM IN GTA !!!
**NERANJAN RASIAH**
Sales Representative
416-804-4436
LIST WITH US & SEE THE DIFFERENCE



**Free Real Estate Class** - Call: 416.321.6969

# RealEstate / Commercial Investments



MIDLAND & ELLESMERE
Bedroom : 3
Washroom: 3
Price : $649,900
2 Years old



AJAX
Bedroom : 3
Washroom: 2
Price : $389,900
5 Years old



STAINES & SEASONS DR
Bedroom : 4 + 1
Washroom: 4
Price : $749,900



BRAMPTON
Bedroom : 4
Washroom: 4
Price : $ 599,900



MARKHAM & NASHDNE
KNIT WEAR
BUSINESS + FOUR UNITS
Asking price: 750,000



MCCOWAN & HWY 401
1Bedroom : 2
Washroom: 2
Price : $ 259,900



RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage
**A. Anton Jeeva** B.Eng
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage can be arranged from 2.4%
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9

# Land for sale in Jaffna
## காணி விற்பனைக்கு
Land for sale near chundikuli/kachcheri
( 3 min walk from kachcheri)
about 1.78 parappu
416-894-1187

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com



அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
**VK Kanthasamy**
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

**Sales Reps. Welcome**
**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)



For All your Real Estate & Investments Needs!
**HomeLife/GTA Realty Inc.** Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED